க.பொ.த சாதாரண தரம்

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## கட்டாய பாடம்

## மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரங்கள் விடைகளுடன்




தமிழ்மொழித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை
www.nie.lk
2020

kalvi.lk

க. பொ. த. (சாதாரண தரம்)

# தமிழ்மொழியும் இலக்கியமும்
# (கட்டாய பாடம்)

## மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரங்கள்

Education கல்வி அධ්‍යාපන

தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
வலைத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk


kalvi.lk

தமிழ்மொழியும் இலக்கியமும்
மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரங்கள்
தரம் : க. பொ. த. (சாதாரண தரம்)
முதலாம் பதிப்பு 2020
தேசிய கல்வி நிறுவகம், மகரகம

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம,
இலங்கை.

Education கல்வி அධ්‍යාපන

வலைத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk
அச்சுப்பதிப்பு : அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.


kalvi.lk

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இருபத்தோராம் நூற்றாண்டின் கல்விக்கான திறன்களைப் பாடசாலை மாணவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தல் தேசிய கல்வி நிறுவகத்தின் முதன்மைப் பணியாகும். இத்திறன்கள் கலைத்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் கைந்நூல்களினூடாகவே மாணவர்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர வகுப்புக்களில் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் துணை செய்யும் வகையில் தமிழ்மொழித்துறையினரால் மாதிரி வினாத்தாள் விடைகளுடன் வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்நூலை வெளியிடும் எமது தமிழ்மொழித்துறையின் இம்முயற்சி காலத்துக்கு ஏற்றதும் அவசியமானதுமாகும். இந்நூலாக்கத்தில் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்களின் சேவை பாராட்டுதற்குரியதாகும். அவ்வகையில் நூலாக்கத்தில் பங்காற்றிய நூலாக்கக் குழுவினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

தமிழ்மொழியும் இலக்கியமும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள்களின் இத்தொகுப்பு மாணவர்கள் சுயமாகக் கற்பதை மேம்படுத்தவும் சுயமதிப்பீட்டை மேற்கொண்டு தமது கற்றலை வளப்படுத்தவும் ஒரு கருவியாக அமையும் என்பது எனது நம்பிக்கையாகும்.

Education
கல்வி
அதியாபன

**கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்


kalvi.lk

# பிரதிப்பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

தேசிய கல்வி நிறுவகத்தின் மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் தமிழ்மொழித்துறை க.பொ.த சாதாரண மாணவர்களது தமிழ்மொழித் திறன்களை அதிகரிப்பதற்கும் பரீட்சையில் மாணவர்களது சித்தி வீதங்களை அதிகரிப்பதற்குமாக க.பொ.த சாதாரணதர தமிழ்மொழிப் பாடம் தொடர்பாக மாதிரி வினாப்பத்திரங்களை உள்ளடக்கிய நூலொன்றைத் தயாரித்துப் பாடசாலைகளுக்கு விநியோகஞ் செய்ய மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டுகின்றேன். கல்வி உலகம் இம்முயற்சிகளுக்கு பெருவரவேற்பு வழங்குமென எதிர்பார்க்கின்றேன்.

இந்நூலை உருவாக்கும் முயற்சிகளுக்கு முன்னின்று உழைத்த தமிழ்மொழித்துறைப் பணிப்பாளர், விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அனுமதியளித்த பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும் விசேடமாக நன்றிகள். மாணவர்களின் சுயகற்றலை மேம்படுத்துவதில் இந்நூல் பங்களிப்புச் செய்யுமென நம்புவோம்.

**கலாநிதி தர்சன சமரவீர**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல்
மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

Education கல்வி அධ්‍යාපන


kalvi.lk

# தமிழ்மொழித்துறைப் பணிப்பாளர் அவர்களின் செய்தி

தாய்மொழியும் தாய்மொழி மூலமான கல்வியும் மனிதவள விருத்தியில் மிகவும் செல்வாக்குடையவையாகும். அவ்வகையில் தமிழ்மொழியைத் தாய்மொழியாக அல்லது முதலாம் மொழியாகக் கற்கும் க.பொ.த சாதாரணதர மாணவர்களது தமிழ்மொழியிலான தேர்ச்சியை மேம்படுத்தவும் கற்றலை வலுவூட்டவும் பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரித்துக்கொள்ளவும் உதவும் வகையில் "மாதிரி வினாப்பத்திரங்கள்" எனும் இந்நூல் விடைகளையும் உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், கொரோனா பாதிப்பு காரணமாக பாடசாலைக் கற்றலை பெருமளவில் இழந்திருக்கும் மாணவர்களுக்கு இந்நூல் அதிகமான பயிற்சி பெறுவதற்கும் வாய்ப்பளிக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலை உருவாக்குவதில் சிரமங்களின் மத்தியில் பெரும்பங்களிப்பை வழங்கியுள்ள தமிழ்மொழித்துறை விரிவுரையாளர்களுக்கும் கொழும்பு இந்துக் கல்லூரி ஆசிரியருக்கும், இந்நூலைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாளராக தனது கடமையைச் செவ்வனே செய்த திருமதி. லோககீதா கவாஸ்கர் அவர்களுக்கும் மற்றும் சகலவழிகளிலும் எம்மை நெறிப்படுத்தி அனுமதியும் சிறப்புச் செய்திகளும் தந்த பணிப்பாளர் நாயகம், பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கும், அச்சகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

"உலகிற்குள் தமிழ், தமிழுக்குள் உலகு"

**கலாநிதி எஸ்.கே.பிரபாகரன்**
பணிப்பாளர்
தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்.

Education கல்வி අධ්‍යාපන


kalvi.lk

# வளவாளர் குழு

**ஆலோசனையும் அனுமதியும்** : **கலாநிதி சுனில் ஜயந்த நவரட்ண**
பணிப்பாளர் நாயகம்

**வழிகாட்டல்** : **கலாநிதி தர்சன சமரவீர**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்

**நெறிப்படுத்தலும் எண்ணக்கருவாக்கமும்** : **கலாநிதி எஸ். கே. பிரபாகரன்**
பணிப்பாளர்
தமிழ்மொழித்துறை

**வளவாளர்கள்** : **கலாநிதி முருகு. தயாநிதி**
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

**பாஸ்கரன் சுமன்**
உதவி விரிவுரையாளர்
தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

**லோககீதா கவாஸ்கர்**
உதவி விரிவுரையாளர்
தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

**தியாகராஜ் ரவிசந்திரன்**
உதவி விரிவுரையாளர்
தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

**இறுதி மதிப்பீடு** : **கலாநிதி க. இரகுபரன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
மொழித்துறை
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**அட்டைப்பட ஓவியம்** : **நவரத்தினம் பிரசாந்தன்**
கிளி/இராமநாதபுரம் கிழக்கு
அ.த.க.பாடசாலை
இராமநாதபுரம்
கிளிநொச்சி

**கணினி வடிவமைப்பு** : **இராசலிங்கம் கவியாழினி**


Education கல்வி
kalvi.lk

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **வினாப்பத்திரக் கட்டமைப்பு** | viii |
| **மாதிரிப் பரீட்சை - 1** | |
| **கலாநிதி முருகு. தயாநிதி** | 1 - 11 |
| சிரேஷ்ட விரிவுரையாளர் | |
| தமிழ்மொழித்துறை | |
| தேசிய கல்வி நிறுவகம் | |
| **மாதிரிப் பரீட்சை - 2** | 12 - 22 |
| **பாஸ்கரன் சுமன்** | |
| உதவி விரிவுரையாளர் | |
| தமிழ்மொழித்துறை | |
| தேசிய கல்வி நிறுவகம் | |
| **மாதிரிப் பரீட்சை - 3** | 23 - 32 |
| **லோககீதா கவாஸ்கர்** | |
| உதவி விரிவுரையாளர் | |
| தமிழ்மொழித்துறை | |
| தேசிய கல்வி நிறுவகம் | |
| **மாதிரிப் பரீட்சை - 4** | 33 - 42 |
| **தியாகராஜ் ரவிச்சந்திரன்** | |
| உதவி விரிவுரையாளர் | |
| தமிழ்மொழித்துறை | |
| தேசிய கல்வி நிறுவகம் | |
| **மாதிரிப் பரீட்சை - 5** | 43 - 53 |
| **குணராஜசிங்கம் ஶ்ரீ. இராகவராஜன்** | |
| சிரேஷ்ட ஆசிரியர் | |
| கொழும்பு இந்துக் கல்லூரி | |
| கொழும்பு – 04 | |
| **விடைகள்** | 54 - 89 |





kalvi.lk

# தமிழ்மொழியும் இலக்கியமும் (22)

## வினாப்பத்திரக் கட்டமைப்பு

வினாப்பத்திரம் I - நேரம் 1 மணித்தியாலம்

40 பல்தேர்வு வினாக்கள் அடங்கும் எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும். ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் 40 வழங்கப்படும்.

வினாப்பத்திரம் II – நேரம் 2 மணித்தியாலங்கள்

5 வினாக்களைக் கொண்டது. (மொத்தப் புள்ளிகள் 80) எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

வினா 1 : 10 குறுவிடை வினாக்களைக் கொண்டது. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

வினா 2 : கட்டுரை எழுதுதல் : 25 புள்ளிகள் ஆகும். (வழிகாட்டற் குறிப்புகளுடனான நான்கு கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.)

வினா 3 : சுருக்கம் எழுதுதல் : 10 புள்ளிகள்

வினா 4 : கிரகித்தல் : 10 புள்ளிகள்

வினா 5 : நடைமுறைத் தேவைகளுக்கான எழுத்தாக்கங்கள் : 15 புள்ளிகள்

வினாப்பத்திரம் III – நேரம் 2 மணித்தியாலங்கள்.

7 வினாக்களைக் கொண்டது. (மொத்தப் புள்ளிகள் 80) கட்டாய வினாக்கள் நான்கிற்கும் மேலும் ஒரு வினாவிற்கும் விடையளித்தல் வேண்டும். (1,2,3,4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை. வினாக்கள் 5,6,7 இல் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்.)

வினா 1 : குறுவிடை வினாக்கள் 10. ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்

வினா 2 : விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட செய்யுள், உரை நடைப் பகுதிகளை உள்ளடக்கிய வினாக்களைக் கொண்டுள்ளதுடன் இரண்டு உபபிரிவுகளை உள்ளடக்கிய 5 பகுதிகளைக் கொண்டது. ஒரு உபபிரிவுக்கு இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தப் புள்ளிகள் 20 ஆகும்.

வினா 3 : இரண்டு விருப்பு வினாக்களில் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க வேண்டுமென்பதுடன் 150 - 200 சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும். - 15 புள்ளிகள்

வினா 4 : இரண்டு விருப்பு வினாக்களில் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க வேண்டுமென்பதுடன் 150 - 200 சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும். - 15 புள்ளிகள்

வினா 5,6,7 : மூன்று விருப்பு வினாக்களில் ஒன்றுக்கு மட்டும் விடையளிக்க வேண்டுமென்பதுடன் 150 - 200 சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும். - 10 புள்ளிகள்.


kalvi.lk

## தேசிய கல்வி நிறுவகம் - தமிழ்மொழித்துறை

### கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை) 2020

| தமிழ்மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II |
|---|---|---|---|

**மாதிரிப் பரீட்சை - 1**

மூன்று மணித்தியாலம் | வாசிப்பு நேரம் மேலதிகமாகப் பத்து நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்றும் விடை எழுதம்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**தமிழ்மொழியும் இலக்கியமும் - I**

**கவனிக்க:**

i. **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

1. “ஆழும் நெஞ்சகத்து ஆசை இன்றுள்ளதேல்…” - இங்கு ஆசை என்பது
   (1) இலக்கு (2) வெறுப்பு (3) விருப்பு (4) இரக்கம்

2. “சிறுமீன் சினையினும் நுண்ணிதே” - இங்கு நுண்ணிது என்பது
   (1) மிகச் சிறியது (2) மிக அருமையானது
   (3) மிகப் பெரியது (4) மிகச் சுவையானது

3. “நாயனையார் கேண்மை தழீஇ...” - இங்கு கேண்மை என்பதன் எதிர்க்கருத்து
   (1) உறவு (2) பகைமை (3) உண்மை (4) தொடர்பு

4. “நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம்” - இங்கு நெடுமை என்பதன் எதிர்க்கருத்து
   (1) அறிவுடைமை (2) குறுமை (3) பெருமை (4) சிறுமை

5. “எம்குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே!” - இத்தொடர் மூலம் உணர்த்தப்படுவது
   (1) எதிர்பார்ப்பு (2) உறவு (3) நட்பு (4) கையறுநிலை

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

6. வீதி விபத்து நடந்த பின்புதான் உயிரின் வால்யு (Value) தெரிகிறது. இங்கு ‘வால்யு’ என்பதற்கு நிகரான தமிழ்ச்சொல்
   (1) பெறுமதி (2) பயன்பாடு (3) மகத்துவம் (4) சிறப்பு

7. பின்வருவனவற்றுள் பொருத்தமற்ற மரபுச்சொல் இடம்பெற்றது எது?
   (1) மயில் – அகவும் (2) குரங்கு – கனைக்கும் (3) நாய் –குரைக்கும் (4) யானை – பிளிறும்

8. பின்வருவனவற்றுள் போர்த்துக்கேயமொழிச் சொல்
   (1) விறாந்தை (2) இலாச்சி (3) பீரோ (4) அட்டவணை

9. சர்ப்பம், அரவம், பணி எனும் சொற்கள் குறிக்கும் பொருள்
   (1) வேலை (2) ஓசை (3) சரசரப்பு (4) பாம்பு


kalvi.lk

**10.** பெண் மானைக் குறிக்கும் சொல் பிணை : பெண் குதிரையைக் குறிக்கும் சொல்

(1) போத்து (2) பிடி (3) வடவை (4) குண்டு

**11.** நுனிப்புல் மேய்தல் - என்னும் மரபுத்தொடர் உணர்த்தும் பொருள்

(1) அரைப்படிப்பு (2) தட்டிக்கழித்தல்
(3) மேலால் புல்லை மேய்தல் (4) மேலெழுந்தவாரியாகப் படித்தல்

12. எதையும் ஆராய்ந்து பாராது ஏற்றுக்கொள்ளும் இயல்பைக் குறிக்கும் மரபுத்தொடர்

(1) துறைபோதல் (2) அள்ளியிறைத்தல் (3) கண்மூடித்தனம் (4) கிள்ளுக்கீரை

13. "தூரஎட்டி" என்பது "துறட்டி" என அமைவது

(1) போலி (2) மரூஉ (3) மங்கலம் (4) இலக்கணமுடையது

14. புலவர், அந்தணர் முதலானோருக்கு அரசனால் இலவசமாக வழங்கப்படும் நிலம்

(1) நிவந்தம் (2) மானியம் (3) உறுதி (4) காணி

15. "இலையும் பழுப்பும் எங்கும் உண்டு" என்னும் பழமொழியின் கருத்துக்கு ஒத்த இன்னொரு பழமொழி

(1) ஊரோடு ஒத்து வாழ் (2) உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை
(3) வீட்டுக்கு வீடு வாசற்படி (4) இரக்கப் போனாலும் சிறக்கப் போ

16. "எதை செய்தாலும் அதற்குக் கணக்கு வைத்திருக்க வேண்டும்" என்னும் பொருளை உணர்த்தும் பழமொழி

(1) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போம் (2) புத்திமான் பலவான்
(3) ஆற்றில் போட்டாலும் அளந்து போடு (4) எருமை வாங்குமுன் நெய்விலை பேசாதே

17. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி அல்லாதது

(1) கடுகடு (2) எடுஎடு (3) விறுவிறு (4) மொறுமொறு

18. "நகமும் சதையும் போல" என்னும் உவமைத் தொடருக்கு ஒவ்வாத உவமைத் தொடர்

(1) மணியும் ஒலியும் போல (2) கரும்பும் சுவையும் போல
(3) கண்ணும் இமையும் போல (4) அரிசியும் கல்லும் போல

19. 'மிகுந்த எதிர்பார்ப்பு' என்னும் பொருளைத் தரும் அருஞ்சொற்றொடர்

(1) கூடிக்குலாவி (3) கண்ணுக்குக் கண்ணாக
(2) ஊணுறக்கம் இன்றி (4) வழிமேல் விழிவைத்து

20. "வரவர உமது போக்குச் சரியில்லை" என்று நண்பன் கூறினான். இங்கு வரவர என்பது

(1) இரட்டைக்கிளவி (2) அடுக்குத்தொடர் (3) அடுக்கிடுக்குத்தொடர் (4) இணைமொழி

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.**

21. பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கம் இடம்பெறாத சொல்

(1) நாக்கு (2) திண்ணம் (3) வெங்காயம் (4) உடுப்பு

22. பின்வருவனவற்றுள் பகுதி இரட்டித்துக் காலம் காட்டுவது

(1) விற்றான் (2) உற்றார் (3) கற்றான் (4) பெற்றான்

23. அவன் இலகுவாக கணக்கைச் செய்துமுடித்தான். இங்கு 'இலகுவாக' என்பது

(1) பெயரடை (2) செயப்படுபொருள் அடைமொழி
(3) எழுவாய் அடைமொழி (4) வினையடை


kalvi.lk

24. மூன்றாம் வேற்றுமை ‘ஆல்’ உருபு ஏற்காத தொடர்

(1) கேட்டால் தருவேன் (2) வலியால் துடித்தேன்
(3) கம்பால் அடிக்கமாட்டேன் (4) காலால் உதைத்தான்

25. திரிதல் விகாரம் இடம்பெற்றுள்ள புணர்ச்சி

(1) பூக்கடை (2) வான்வழி (3) மாங்கனி (4) தற்பெருமை

26. அவனிடம் பலமுறை பேசிவிட்டேன்.
அவன் என் பேச்சைக் கேட்பதேயில்லை.
மேற்படி இரு வாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச்சொல்

(1) அதனால் (2) ஆனால் (3) ஆகையால் (4) ஆகவே

27. புலவர்கள் என்றால் அறிஞர்கள் என்று நாம் கருத்துச் சொல்லலாம். இதில் வந்துள்ள எழுவாய்

(1) புலவர்கள் (2) நாம் (3) அறிஞர்கள் (4) கருத்து

28. அகராதி ஒழுங்கில் அமைந்த சொற்றொகுதி

(1) பிள்ளை, பிறகு, பின்னல், பீதாம்பரம்.
(2) மாணவர்கள், மேடை, மேசை, மொத்தம்.
(3) ஆட்டம், ஆய்வு, ஆரோகணம், ஆத்திரம்.
(4) பெயர், சோதனை, பதினைந்து, பார்வை.

• **பொருத்தமற்ற** உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

29. (1) ஆறாம் வேற்றுமை : எனது கை, மரவேர், மாட்டின் வால்.
(2) இடைச்சொல் : உம், ஐ, போல.
(3) தொழிற்பெயர் : பறத்தல், பாடுதல், ஓடல்.
(4) ஆக்கப்பெயர் : மூச்சு, ஏச்சு, பேச்சு.

30. (1) கூட்டுவினை : தூங்கவை, தட்டிக்கேள், சொல்லிப்பார்.
(2) செயப்படுபொருள் குன்றாதவினை : விற்றான், கற்கிறான், தொடுவான்.
(3) செயப்பாட்டுவினை : வெட்டப்பட்டது, புறப்பட்டது, தொடங்கப்பட்டது.
(4) தன்வினை : போனான், ஏறினான், வருகிறான்.

• **புள்ளிக் கோடிட்ட** இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

31. நாம் ஒரு வேலையைச் சரிவரச் செய்வதற்குப் பொருத்தமான ……………………….. நம்மிடம் இருக்க வேண்டும்.

(1) களஆய்வு (2) அறிவுறுத்தல் (3) முன்னேற்பாடு (4) நிலைப்பாடு

32. தேர்தலில் ………………………. இழக்காத அளவுக்கு வேட்பாளர்கள் வாக்குகளைப் பெற வேண்டும்.

(1) கட்டுப்பணத்தை (2) சந்தாப்பணத்தை (3) வங்கிப்பணத்தை (4) முற்பணத்தை

33. காணாமற்போன தன் பிள்ளையைக் கண்டுபிடித்துத்தருமாறு அப்பிள்ளையின் தந்தையால் நீதிமன்றத்தில் ………………… தாக்கல் செய்யப்பட்டது.

(1) அழைப்பாணை (2) பிடியாணை (3) ஆட்கொணர்வு மனு (4) பிரேரணை

34. ஒரு காலத்தில் அந்த நாடு நெல் உற்பத்தியில் ……………………பெற்ற நாடாக விளங்கியது.

(1) செழிப்பு (2) தன்னிறைவு (3) முழுமை (4) தெளிவு


kalvi.lk

- **வாக்கியங்களின்** முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

35. அந்தப் புத்தகத்திலுள்ள கவிதை ஒவ்வொன்றும்,

    (1) சிறந்த பொருளும் நயமும் கொண்டவையாக இருக்கின்றன.
    (2) சிறந்த பொருளும் நயமும் கொண்டதாக இருக்கின்றன.
    (3) சிறந்த பொருளும் நயமும் கொண்டவையாக இருக்கின்றது.
    (4) சிறந்த பொருளும் நயமும் கொண்டதாக இருக்கின்றது.

36. வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஒவ்வொரு,

    (1) பிரேரணைகளும் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டன.
    (2) பிரேரணையும் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டது.
    (3) பிரேரணைகளும் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டது.
    (4) பிரேரணையும் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டன.

- **தரப்பட்ட** பாடலை அடிப்படையாகக்கொண்டு வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

வறுமைப் புயலில் சிக்கிவிடில்
 வாழ்க்கை தன்னை வெறுப்பதுவோ?
சிறுமைக் குணமே நீகொண்டு
 சிரமே தாழ்ந்து செல்வதுவோ?
ஏழ்மை எம்மிற் குடிகொண்டால்
 எதிர்த்து வெற்றி கொள்ளாமல்
தாழ்வுச் சிக்கல் கொண்டேங்கல்
 தகுமோ முறையோ என்தோழா?

37. இப்பாடலின் மூலம் கவிஞர், மனித சமூகத்துக்குச் சொல்லும் செய்தி

    (1) தாழ்வுச் சிக்கல் கொள்வது வாழ்க்கைக்கு நல்லது.
    (2) எப்போதும் மனித வாழ்க்கை உயர்ந்ததாக இருக்கும்.
    (3) சிறுமைக் குணம் கொள்வது சாலச் சிறந்த வழியாகும்.
    (4) பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வாழ வேண்டும்.

38. இப்பாடலில் கவிஞர், மனித சமூகம் வாழ

    (1) வாழ்த்துக் கூறுகிறார் (3) வழிகாட்டுகிறார்
    (2) அறிவித்தல் தருகிறார் (4) எச்சரிக்கை செய்கிறார்

39. இப்பாடலில் இடம்பெற்றுள்ள உருவகம்

    (1) வறுமைப்புயல் (2) தாழ்ச் சிக்கல்
    (3) சிறுமைக்குணம் (4) சிரமே தாழ்ந்து

கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்புமுறையைத் தெரிவுசெய்க.

40. அ - ஆகவே, அறிக்கை எழுதும் விடயத்தில் மாணவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

    ஆ - அவ்வாறன்றி பிற்கால வாழ்க்கையிலும் அறிக்கை எழுதும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

    இ - நடைமுறைத் தேவைகளுக்காக எழுதும் விடயங்களுள் அறிக்கை எழுதுவதும் ஒன்றாகும்.

    ஈ - அவ்வாறு செய்தால் அறிக்கையை சிறப்பான முறையில் மாணவர்களால் எழுதமுடியும்.

    உ - பாடசாலை வாழ்க்கையில் மாணவர்களுக்கு அறிக்கை எழுதும் சந்தர்ப்பம் ஏற்படலாம்.

    (1) உ, ஆ, ஈ, இ, அ (2) இ, உ, ஆ, அ, ஈ

    (3) ஈ, அ, இ, ஆ, உ (4) இ, அ, ஈ, உ, ஆ


kalvi.lk

**தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை**

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020**

**தமிழ்மொழியும் இலக்கியமும் I, II**

| 22 | T | I, II |
|---|---|---|

## மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – II

### தமிழ்மொழியும் இலக்கியமும் - II

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

''பெருமூ தாளரே மாகிய வெமக்கே''

(ii) ''இஞ்சால வா மகன் மையத்தத் தூக்கப் போறாக''. மேற்படி பேச்சுமொழி வாக்கியத்தை எழுத்துமொழியில் எழுதுக.

(iii) பெயரடைத் தொடர் என்றால் என்ன என்பதை விளக்கி, ஓர் உதாரணம் தருக.

(iv) பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தக் குறியீடு கொண்டு அமைக்குக.

செ.கணேசலிங்கன் நீண்ட பயணம் என்ற நாவலை 1965 இல் எழுதினார்

(v) ''மஞ்சோனா மரத்திலிருந்து இப்போதுதான் பக்குல் பறந்து போனது'' இங்கு இடம்பெற்றுள்ள 'பக்குல்' என்ற சொல்லுக்கு நிகரான பிறிதொரு சொல்லைத் தருக.

(vi) 'கரை' என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

(vii) மதிப்பீடு, மதிக்குளிர், மதிப்பாளன், மதிமுகம் - இவற்றுள் உவமைத்தொகை, வேற்றுமைத் தொகை என்பவற்றை இனங்காண்க.

(vii) ''அவன் பொருட்களை வண்டியில் ஏற்றினான்''- இவ்வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(ix) புணர்த்தி எழுதுக.

நல் + நூல்

செய் + நன்றி

(x) பொருள் மயக்கம் தரும் வகையில் அமைந்துள்ள பின்வரும் வாக்கியத்தை மயக்கம் அற்ற வகையில் மாற்றி எழுதுக.

''சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அவர் அமைத்தார்''

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவு செய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) நமது நாட்டிலே வீதி விபத்துக்கள் சாதாரணமாகிவிட்டன. ஊடகச் செய்திகள் இதனை உறுதி செய்கின்றன. வீதி அபிவிருத்தியின் போதாமை இதற்கு ஒரு காரணமாகும். அதே வேளை வாகனச் சாரதிகளும், பாதசாரிகளும் வீதி ஒழுங்குகளையும் விதிகளையும் கடைப்பிடிக்காமையும், காரணமாகும். வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு **விளக்கக்கட்டுரை.**

(ii) உலகளாவிய ரீதியில் பெண்கள் பெருமைக்குரியவர்கள். இவர்கள் சமூகத்திலும், குடும்பத்திலும் மிகவும் முக்கியமானவர்கள். இவர்கள் சமூகத்தில் பெரும் பங்கினை ஆற்றி வருகின்றனர். இதன் காரணமாகப் பெண்கள் போற்றப்பட வேண்டியவர்கள் என்ற கருத்துப்பட சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நீர் நிகழ்த்தும் **மேடைப்பேச்சு.**

(iii) தொடர்பாடலுக்கு மொழி மிகவும் அவசியமானதாகும். ஒவ்வொரு மாணவனும் தனது தாய்மொழியில் பற்றும் தேர்ச்சியும் உள்ளவனாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் ஏனைய மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருத்தல் தற்கால உலகிற்கு அவசியமானதொன்றாகும். வேலை வாய்ப்பிற்கும் தொடர்பாடலுக்கும் ஆங்கிலக் கல்வி அவசியமானதாகும். இதனைக் கருத்திற்கொண்டு இருவருக்கு இடையிலான ஓர் **உரையாடல்.**

(iv) பலகாலம் கஸ்டப்பட்டு வயலை செழிக்கச் செய்த ஏழை கந்தையன் பல எதிர்கால கனவுகளுடன் நாளை அறுவடை செய்ய காத்திருந்தான். அவனது கனவுகள் நனவானதா? இல்லை கனவாகவே போனதா? என்பதை உள்ளடக்கிய ஒரு கற்பனைச் **சிறுகதை.**

**(25 புள்ளிகள்)**

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை **40 - 45** சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

சென்னையில் அண்ணாமலை மன்றம் என்னும் கலைக்கோயில் ஒன்று உண்டு. மன்றம் என்பது ஊர் மத்தியிலுள்ள பொது இடமாகும்.சிதம்பரத்தில் பல்கலைக்கழகத்தை நிறுவிய இராசா அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் கலை வளர்ச்சிக்காக இம் மண்டபத்தைக் கட்டுவித்தார். இசைத்தமிழை விட இயற்றமிழ், நாடகத்தமிழ் விழாக்கள் சென்னையில் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இலங்கை வேந்தனாகிய இராவணன் பொதிய மலையைக் கைப்பற்றி தமிழ் நாட்டை ஆட்சி புரிய எண்ணி பொதியமலைக்குச் சென்று அங்கிருந்து அகத்திய முனிவருடன் யாழிசைப் போட்டி நிகழ்த்தினான். அகத்தியர் இசைக்கு கரும்பாறையும் இளகியது. அரக்கர்கோன் உள்ளமும் உருகியது. அகத்தியரை நோக்கி யாது வேண்டுமென்று வினாவினான் இராவணன். அதற்கு முனிவர் இந் நாட்டவரைத் துன்புறுத்தாதிருக்க வேண்டுமென்றார். உடனே இராவணன் பொதியமலையை விட்டகன்றான். இசையின் வெற்றியால் அச்சம் நீங்கிவிட்டதென மக்களறிந்தனர்.

நாட்டைப் பாதுகாக்க இசைத் தமிழ் உதவியதை எண்ணி இசைக்கு உருகாதவருமுளரோ? என மகிழ்ந்தனர். சைவ நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமய வழிபாட்டின் மூலம் இசையை வளர்த்தனர். இறைவன் அருளைப் பெறுவதற்கு இசையை ஏதுவாகக் கொண்டு இன்னிசைப் பாடல்களைப் பாடி வழிபட்டனர். இசைப்பாடல் பாடிப் பணிபவர்கள் இருமை இன்பங்களையும் பெறுவர் என அப்பரும் சம்பந்தரும் அருளியுள்ளனர். இதனால் இசைப் பாடல்கள் மக்களிடத்தில் பக்திப் பெருக்கெடுத்துப் பாடிப்பணியும் வழக்கத்தை உண்டாக்கின.

**(10 புள்ளிகள்)**


kalvi.lk

4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பழைய தமிழ் நூல்களை முன்னோர் பனை ஓலைகளில் எழுதி வைத்தனர். அக்காலத்தில் இக்காலத்தைப் போன்ற எழுது கருவிகள் இல்லை. முற்காலத்தில் புலவர்களிடம், நூல்கள் ஓலைச் சுவடிகளாக இருக்கும். வேண்டிய நூல்கள் எல்லாம் ஒரு புலவரிடம் கிடைப்பதருமை. சிலரிடம் சில நூல்கள்தான் இருக்கும். அவர்கள் அவற்றை எளிதில் பிறருக்குக் கொடார். ஏனெனில் நூலை எழுதலோ, எழுத்துவித்தலோ மிகவும் கடிகமான செயலாகும். புலவரின் சந்ததியார் கல்லாதவராயின் ஓலைச்சுவடிகள் பரண் மீதேறும், அங்கிருந்து எடுப்பாரின்மையால் மடிந்து போதலும், செல்லரித்தலும் உண்டு. மூவேந்தர்களும், வள்ளல்களும் இறந்த பின்பு, தமிழ் நாடு நிலைபெற்ற அரசாட்சி இன்மையால் சீர்குலைந்தது. தமிழ் வளர்ச்சி குன்றியது.

(அ) முன்னோர் நூல்களை எவற்றில் எழுதி வைத்தனர்?

(ஆ) ஓலைச்சுவடிகள் பரண் மீது ஏறுவதற்கான காரணம் என்ன?

(இ) பரண்மீது வைக்கப்படும் சுவடிகளின் நிலை என்ன?

(ஈ) புலவர் தன்னிடம் இருக்கும் ஓலைச்சுவடிகளைப் பிறருக்கு கொடுக்காமைக்கான காரணம் யாது?

(உ) தமிழ் வளர்ச்சி குன்றியமைக்கான காரணம் யாது?

**(10 புள்ளிகள்)**

5. உமது பிரதேசத்திலுள்ள சுகாதாரச் சீர்கேடுகள் காரணமாகத் தொற்றுநோய்கள் பலவும் பரவி வருகின்றன. அவற்றைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் உடனே எடுக்கப்படல் வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டி நகரசபையின் சுகாதாரப் பிரிவு அதிகாரிக்கு 100 சொற்களில் ஒரு **கடிதம்** எழுதுக.

**அல்லது**

அதிகரித்துவரும் பொலித்தீன் பாவனை பற்றியும் அதனால் சுற்றுப்புறச் சூழல் மாசடைவது பற்றியும் விளக்கி, பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி 100 சொற்களில் அமையுமாறு ஒரு **துண்டுப்பிரசுரம்**.

**(15 புள்ளிகள்)**


kalvi.lk

## தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை
## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020
## தமிழ்மொழியும் இலக்கியமும் (22)

### மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – III

**தமிழ்மொழியும் இலக்கியமும் - III**

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.
ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) “ஒருவர் ஒருவராகவோ, இருவர் இருவராகவோ அன்றிப் பலர்
கூட்டங் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்”

(அ) இக் கூற்றைக் கூறியவர் யார்?

(ஆ) இதில் எத்தனை அடுக்குத்தொடர்கள் இடம்பெற்றுள்ளன?

(ii) “விலங்கி யற்கை யிலையெனில் யாமெல்லாம்
விரும்பு மட்டினில் விண்ணுறலாகுமே.”

(அ) “விலங்கியற்கை” எனக் கருதப்படுவது யாது?

(ஆ) இங்கு “விண்ணுறல்” என்பது எதனைக் குறிக்கின்றது?

(iii) “வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே!”

(அ) “வெங்கட்பிறை” என்று குறிப்பிடப்படுவது யாது?

(ஆ) இங்கு இடம்பெற்றுள்ள உருவகம் யாது ?

(iv) “பெற்றத்தாற் பெறுஞ் செல்வம் யான் பிறந்த
லாற்றுறந்த பெரியாளென்றான்”

(அ) இக்கூற்று இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?

(ஆ) இங்கு “பெரியாள்” என்று சுட்டப்படுபவர் யார்?

(v) “மையல் ஒருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.”

(அ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது?

(ஆ) “மையல் ஒருவன்” என்பதன் பொருளை விளக்குக.

(vi) “வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்”

(அ) இங்கு ஆண்குரங்கைக் குறித்துநிற்கும் சொல் யாது?

(ஆ) “வான்கவிகள்“ என்போர் யாவர்?

Education கல்வி අධ්‍යාපන


kalvi.lk

(vii) இப்போ பகல் பொழுதுகளில் ஈத்திலைக் குப்பை மேட்டில் ஏறிநின்று உமணர்கள் ஓட்டுகிற உப்பு வண்டியை எண்ணுறாங்க.

(அ) ஈத்திலை என்பது யாது?

(ஆ) ''உமணர்கள்'' என்போர் யார்?

(viii) ''ஐவராம் அவனிபர்க்கும் நினைவு ஏது என்று
அருள் புரிந்தான் அமரர் கோமான்''

(அ) இங்கு ஐவர் என்று குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

(ஆ) 'அவனி' என்பதன் பொருள் யாது?

(ix) (அ) தத்தைவிடு தூது என்ற பிரபந்தத்தை எழுதியவர் யார்?

(ஆ) 'தத்தை' என்ற சொல்லின் பொருள் யாது?

(x) ''யாமிரப்பவை பொருளும் பொன்னும் போகமுமல்ல அன்பால்
அன்பும் அருளும் அறனும் மூன்றும்''

(அ) இரந்து கேட்கப்படுபவை எவை?

(ஆ) ''போகம்'' என்பதன் பொருள்?

**(20 புள்ளிகள்)**

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) உப்பில்லாக் கஞ்சினை யுண்ணு மறுசுவைபோல்
தப்பிய கந்தைபீ தாம்பரம் போல் - ஒப்பும்
பனையோலைப் பாயிற் படுத்துறங்கும் வாழ்வார்
மனங்கொண்டது மாளிகை.

(அ) தப்பிய கந்தைபீதாம்பரம்போல் எவையென புலவர் கூறுகிறார்?

(ஆ) ''மனங்கொண்டது மாளிகை'' என்ற தொடரை விளக்குக?

(2) சூழமேதி இறங்குத் துறையிற்
சொரியும் பாலைப் பருகிய வாளை
கூழை வாசப் பலாவினிற் பாயக்
கொழும்ப லாக்கனி வாழையிற்சாய
வாழை சாய்ந்தொரு தாழையிற் றாக்க
வருவிருந்துக் குபசரிப் பார்போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
சந்திர சூடன் தென்னாரிய நாடே.

(அ) 'சந்திர சூடன்' என்ற தொடரை விளக்குக.

(ஆ) இங்கு குறிப்பிடப்படும் பலாவின் இயல்புகள் யாவை?

Education கல்வி அதியாபன


kalvi.lk

(3) அன்னநடை மைவிழியா எம்பொன்மலர்க் கொம்பனையாள்
என்னிதய தாமரைக்கோ ரிலக்குமியாம் பெண்ணரசி
கன்னன் மொழி கேளாது கஞ்சமுக நோக்காது
மன்னிலத்து வாழேன் மடிந்திடுவன் மங்கையர்க்கு
மற்றப்பழி சேருமென மாழ்குவேன் பைங்கிளியே!

(அ) இச்செய்யுளில் இடம்பெறும் தலைவி பற்றிய விபரிப்புகளில் இரண்டினைக் குறிப்பிடுக.

(ஆ) 'கஞ்சமுகம்' - இதில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.

(4) ஆம்.... புறப்படவேண்டியதுதான்.....(அருவியின் ஆர்ப்பரிப்பு, பறவைகளின் பேச்சொலி, இலைகளின் சலசலப்பு.... இவற்றைக் காது கொடுத்து கேட்கிறார்) இப்போ... இந்த மலையைப் பிரிவது மலையை விடக் கூடுமலாகக் கனக்கிறதே. ஆனால் என் அருமைச் செல்வங்களே...... புறப்பட வேண்டியதுதான். பறம்பு மலையின் இனிய சுனை நீரில் ஒரு முடக்குக் குடியுங்கள். கடைசியாக முடிந்த மட்டுக்கும் இந்த மலைப் பூக்களின் மணத்தை இழுத்து மூச்சடக்கிக்கொள்ளுங்கள். கடந்து செல்கையில் காற்று வீசும். ஆனால் இந்த மலைப்பூக்களின் மணம்.... பறவைகளின் ஒலி ஓயாது. பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார்... புறப்படுகிறோம் பறம்பே... மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நப்பு நம்முடையது. அருவியில் முகம் காட்டும் உன் அழகிய காட்சிகள்... நீர்வாரும் கண்களின் ஈரத்தில் நிற்கும். பறம்பு மலையே நீ வாழ்க.

(அ) இக் கூற்று எத்தகைய மனநிலையில் கபிலரால் கூறப்பட்டது?

(ஆ) பறம்புமலை மீது கபிலர் கொண்ட ஈடுபாடு எவ்வாறு சித்திரிக்கப்படுகிறது.

(5) பழந் தமிழர்களின் சித்திர எழுத்து மாறி அடையாள எழுத்தாக ஏற்பட்ட பிறகே, அதிலிருந்து பிராமி என்னும் பழைய எழுத்து உருவானது. அந்தப் பிராமி எழுத்தே நெடுங்காலம் வட இந்தியாவில் வழக்கில் இருந்து வந்தது. அதிலும் எவ்வளவோ கலப்பும் மாறுதலும் ஏற்பட்டு வந்தன. அசோகர் என்ற பெரிய அரசரின் காலத்தில் பிராமி எழுத்தே இருந்து வந்தது.

(அ) சித்திர எழுத்து என்றால் என்ன?

(ஆ) பிராமி எழுத்து எவ்வாறு தோன்றியது?

(20 புள்ளிகள்)

3. **இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையின் அடிப்படையில்

(அ) அருச்சுணன்

(ஆ) தருமபுத்திரர்

ஆகியோர் கொண்டிருந்த இலட்சியங்கள் பற்றி விளக்கு.

**அல்லது**

**மூத்தம்மா** என்ற சிறுகதையில்

(அ) மூத்தம்மா

(ஆ) காசிம்

ஆகிய கதாபாத்திரங்கள் பற்றி விளக்குக.

4. **குகப்படலத்தில்**

(அ) பரதன், சுமித்திரையை அறிமுகம் செய்யும் விதம்

(ஆ) கம்பன் கையாண்டுள்ள உவமைகள்

என்பன பற்றி விளக்குக.

**அல்லது**

**தந்தை விடுதூது** என்ற பாடப்பகுதியின் அடிப்படையில் பின்வருவற்றை விளக்குக.

(அ) பெண் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுமாறு

(ஆ) பெண்கள் மீதான ஒடுக்குமுறை கண்டிக்கப்படுமாறு

(15 புள்ளிகள்)

பின்வரும் 5,6,7 ஆகிய விடைகளுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து எழுதுக.

5. **கிருட்டிணன் தூதுச்** சருக்கத்தில் இடம்பெறும்

(அ) வீமனின்

(ஆ) கிருட்டிணனின்

ஆகிய படைப்புகள் பற்றி ஆராய்க.

(10 புள்ளிகள்)

6. **தமிழ்ப் பண்பாடு** என்ற கட்டுரையில்

(அ) பக்தி

(ஆ) ஒழுக்கம்

என்பன பற்றி கூறப்பட்டவற்றை தொகுத்து நோக்குக. (10 புள்ளிகள்)

7. **அற்றைத் திங்கள்** என்ற நாடகத்தில்

(அ) அதிகார வர்க்க அடக்குமுறையின் கொடுரம்

(ஆ) புலம்பெயர்வின் வலி

என்பன விபரிக்கப்படுமாற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

**தேசிய கல்வி நிறுவகம் - தமிழ்மொழித்துறை**

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை) 2020**

| தமிழ்மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II |
|---|---|---|---|

**மாதிரிப் பரீட்சை - 2**

**மூன்று மணித்தியாலம்** | **வாசிப்பு நேரம் மேலதிகமாகப் பத்து நிமிடங்கள்**

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்றும் விடை எழுதம்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I

**கவனிக்க:**

i. **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

• **தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

1. "தண்டேன் நுகரா **மண்டுகம்**..." - இங்கு மண்டுகம் என்பது

   (1) குளம் (2) தாமரை (3) தவளை (4) வண்டு

2. "**கார்** தட்டிய பஞ்ச காலத்திலே..." - இங்கு கார் என்பது

   (1) வயல் (2) மழை (3) கருமை (4) வறுமை

3. "மங்கை தனக்கு ஏற்ற **மணவாளனோ**" - மணவாளன் என்பதன் எதிர்ப்பாற்பதம்

   (1) மணவாட்டி (2) இல்லாள் (3) காதலி (4) மனைவி

4. "**அறத்தின்** உருவம் போல்வான்". அறம் என்பதன் எதிர்க்கருத்து

   (1) ஞானம் (2) தருமம் (3) மறம் (4) அழகு

5. "இலட்சியவாதிகள் தமக்கோர் **இன்னல்** வந்தபோது..." - இன்னல் என்பதன் எதிர்க்கருத்து

   (1) இடுக்கண் (2) துன்பம் (3) நண்பன் (4) இன்பம்

• **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

6. பின்வருவனவற்றில் பொருத்தமற்ற சொற்களின் இணைவு

   (1) பல்லி - சொல்லும் (2) குதிரை - கனைக்கும்

   (3) ஆடு - கத்தும் (4) பன்றி - முக்காரமிடும்

7. "அது தன்னிடமுள்ள **சூட்சுமத்தை** எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத் தொடங்கியது."
   - இக்கூற்றில் இடம்பெறும் சூட்சுமம் எனும் சொல் உணர்த்தும் பொருள்

   (1) இரகசியம் (2) ஆழம் (3) அறிவு (4) பண்பு

8. "தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் இலங்கையின் பிரபல இலக்கியவாதி ஒருவரின் Interview இடம்பெற்றது." இங்கு Interview என்பது,

   (1) நேர்முக வர்ணனை (2) உரையாடல் (3) நேர்காணல் (4) நேர்முகப் பரீட்சை



kalvi.lk

9. யார் துணையுமின்றித் தானே தனித்துநின்று பகைவரை வெல்லுந் திறன் படைத்தோன்

(1) அசகாயசூரன் (2) உலகாயதன் (3) நைட்டிகன் (4) தீர்க்கதரிசி

10. மாவின் இளம் பிஞ்சு வடு என்பது போல வாழையின் இளம் பிஞ்சு

(1) காய் (2) கச்சல் (3) மூசு (4) குலை

11. அடியொற்றுதல் என்னும் மரபுத் தொடரின் கருத்து

(1) இடம்பெயர்தல் (2) தோற்றோடுதல் (3) பின்பற்றுதல் (4) உபசரித்தல்

12. சாதுபோல் நடித்துத் தீது புரியுமொருவனைக் குறிப்பிடுவதற்குப் பொருத்தமான தொடர்

(1) ஓட்டைவாயன் (2) அரைமனிதன்
(3) அண்டப்புரட்டன் (4) உருத்திராட்சப் பூனை

13. "இலக்கிய வளர்ச்சிக்குத் திறனாய்வு அடிப்படையாய் அமைகிறது" - இங்கு திறனாய்வு எனக் குறிக்கப்படுவது

(1) கண்டனம் (2) விமர்சனம் (3) விளம்பரம் (4) அபிப்பிராயம்

14. ''அவன் பத்திரிகையை மேலோட்டமாகப் படித்தான்'' - "மேலோட்டமாக என்பதை வலியுறுத்தத்தக்க உவமைத் தொடர்

(1) நுனிப்புல் மேய்ந்தது போல
(2) நீர்மேல் எழுத்துப் போல
(3) பசுமரத்தாணி அறைந்தாற் போல
(4) வாழைப்பழத்தில் ஊசி ஏறுவது போல

15. ''உள்ளதை உள்ளபடி சொன்னால் பலரைப் பகைத்துக்கொள்ள வேண்டி வரும்'' என்னும் கருத்தைத் தரும் பழமொழி

(1) ஊர் வாயை மூட உலைமூடி இல்லை
(2) கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையிலே தெரியும்
(3) யதார்த்தவாதி வெகுசன விரோதி
(4) கெடு குடி சொற் கேளாது

16. கப்பல் செலுத்துபவன்

(1) வலவன் (2) மீகாமன் (3) சாரதி (4) உமணன்

17. மழை மொழிந்தது.
கிணறு நிறையவில்லை.

மேற்படி இருவாக்கியங்களையும் இதே ஒழுங்கில் இணைப்பதற்குப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

(1) ஆகவே (2) அத்துடன் (3) எனவே (4) ஆயினும்

18. மாணவன் வினாவுக்குத் தெட்டத் தெளிவாகப் பதிலளித்தான் - இங்கு 'தெட்டத் தெளிவு' என்பது

(1) அடுக்கிடுக்குத் தொடர் (2) இரட்டைக்கிளவி
(3) அடுக்குத் தொடர் (4) இணைமொழி

19. பாடசாலைக்கருகில் தபாற்கந்தோர் அமைந்துள்ளது. இங்கு கந்தோர் என்பது

(1) ஒல்லாந்து மொழிச் சொல் (2) பாரசீக மொழிச் சொல்
(3) போர்த்துக்கேய மொழிச் சொல் (4) பாளி மொழிச் சொல்

20. பின்வருவனவற்றுள் பெண்பாலை மாத்திரம் உணர்த்துவது

(1) புத்திசாலி (2) செவிலி (3) தொழிலாளி (4) பரிகாரி


Education கல்வி அடியாபன
kalvi.lk

- பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்க.

21. “பரதன் துயர்க்கடலில் ஆழ்ந்தான்” - இங்கு துயர்க்கடல் என்பது

(1) உவமை அணி (2) தற்குறிப்பேற்ற அணி
(3) உயர்வுநவிற்சி அணி (4) உருவக அணி

22. பின்வருவனவற்றுள் பண்புத்தொகையாக அமைவது

(1) நடுகல் (2) வட்டக்கல் (3) கயல்விழி (4) மரக்கதிரை

23. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி இடம்பெறாத சொல்

(1) பாலப்பம் (2) பறவைகள் (3) பலாவிலை (4) ஆசிரியரை

24. உடனிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்

(1) இன்னல் (2) துன்பம் (3) இனிமை (4) மான்விழி

25. பின்வருவனவற்றுள் மென்தொடர்க் குற்றியலுகரமாக அமைவது

(1) நாற்று (2) படகு (3) வண்டு (4) தந்தை

26. நாதன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான் - இவ்வாக்கியத்தில் ‘-ஆல்’ உருபு தரும் பொருள்

(1) கருவி (2) காரணம் (3) கருத்தா (4) நீங்கல்

27. பின்வருவனவற்றுள் வினையெச்சம் அல்லாதது

(1) விளையாடி (2) படித்து (3) நடித்த (4) நடித்து

28. அகரவரிசையில் அமையாத தொகுதி

(1) கடிதம், காடு, கிடுகு, கூடம்
(2) பாகல், பீடை, பூச்சி, பெடை
(3) மாயம், மீட்சி, மயில், முயல்
(4) தட்டு, தவறு, திரவம், தீமை

- பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவுசெய்க.

29. (1) காலப்பெயர் : கோடை, திங்கள், கார்த்திகை
(2) சினைப்பெயர் : கண், கிளை, பூ
(3) இடப்பெயர் : மைதானம், பாடசாலை, அலுவலகம்
(4) பண்புப்பெயர் : அச்சம், மலர், வட்டம்

30. (1) ஆக்கப் பெயர் : பயிற்சி, முயற்சி, அறிக்கை
(2) கூட்டுப் பெயர் : புகைவண்டி, பாடசாலை, தொழிலாளி
(3) வினையாலணையும் பெயர் : வந்தவன், விழுந்தவன், செய்யாதவன்
(4) தொழிற் பெயர் : படித்தல், செய்தல், நடித்தல்

- புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

31. “மாதாந்தம் வெளிவரும் சங்கமம் எனும் கலை இலக்கியச் சஞ்சிகையைப் பெற விரும்புபவர்கள் ஓர் ஆண்டுக்கான ............................ ஆயிரம் ரூபாவை எமது வங்கிக் கணக்கில் வைப்பில் இட்டு, பற்றுச்சீட்டை எமக்கு அனுப்பிவைக்கவும்.”

(1) சந்தாப்பணம் (2) கட்டுப்பணம் (3) நன்கொடை (4) தவணைக் கட்டணம்

32. வெளிப்படைப் பொருளில் புகழ்ந்தும் மறைபொருளில் இகழ்ந்தும் கூறுவதை ........................ என்பர்.

(1) இடக்கரடக்கல் (2) நிந்தாஸ்துதி (3) குழூஉக்குறி (4) அறம்பாடுதல்


kalvi.lk

33. சுற்றுலாத்துறையால் நமது நாடு பெருமளவு ................................ ஈட்டிக்கொள்கிறது.

(1) மானியத்தை (2) நிவாரணத்தை
(3) அந்நியச் செலாவணியை (4) கடன்தொகையை

34. பாராளுமன்றத்திற்குத் தெரிவான உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் அரச ...................... வெளியிடப்பட்டுள்ளது.

(1) சுற்றறிக்கையில் (2) வர்த்தமானியில் (3) சட்டமூலத்தில் (4) விளம்பரத்தில்

வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

35. விழா மண்டபத்திற்குள் மாணவர்கள் ................................................

(1) ஒவ்வொன்றாகச் சென்றனர். (2) ஒவ்வொன்றாகச் சென்றார்.
(3) ஒவ்வொருவனாகச் சென்றனர். (4) ஒவ்வொருவராகச் சென்றனர்.

36. வெள்ளம்போல சனக் கூட்டம் ...............................................

(1) திரண்டனர் (2) திரண்டது (3) திரண்டார்கள் (4) திரண்டன.

● தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

கூரிருள் அகன்றது கூவின கோழி
குருவிகள் எழுந்தன மறைந்தன விண்மீன்
ஏரியில் தாமரை இனமலர் மலரும்
இறையவன் கோயிலில் மணியொலி கேட்கும்
ஊரினில் எழில்புரி மாந்தர்கள் எழுந்தார்
உயர்மரக் கொம்புவிட்டு ஓடின காக்கை
சேர்க்கிழக்கெனும் திசை வெளுத்தது மெல்லச்
செங்கதிரவன் உதயம் செய்கின்றானே

37. இப்பாடலினூடாக கவிஞர் கூற விழைந்த விடயம்

(1) சூரியோதயம் (2) சூரிய அஸ்தமனம்
(3) மக்கள் அயர்வு நீங்கி எழுதல் (4) ஆலய பூசை

38. 'உயர்மரக் கொம்பு' எனும் தொடரில் 'கொம்பு' என்பது

(1) கூடு (2) கிளை (3) தந்தம் (4) உச்சி

39. இப்பாடலோடு தொடர்பற்ற கூற்றாக அமைவது

(1) நட்சத்திரங்கள் மறைதல் (2) ஆலயங்களில் மணியோசை கேட்டல்
(3) மாந்தர்கள் துயில்கொள்ளல் (4) கிழக்கு வெளுத்தல்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியமைப்பதற்கு மிகப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ. விபுலாநந்தர் இத்துறை முன்னோடிகளில் ஒருவர் எனலாம்.
ஆ. தமிழியல் ஆய்வுகள் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றன.
இ. ஆங்கில இலக்கியத்தை தமிழ் இலக்கியங்களுடன் இணைத்து நோக்கினார்.
ஈ. அவற்றுள் ஒப்பியல் ஆய்வுகளுக்கும் முக்கிய இடமுண்டு.
உ. பின்னாளில் இவ் ஆய்வுத்துறை பெருவளர்ச்சி கண்டது.

(1) உ, அ, ஈ, இ, ஆ (2) இ, அ, ஆ, ஈ, உ
(3) ஆ, ஈ, அ, இ, உ (4) ஆ, இ, உ, ஈ, அ


kalvi.lk

**தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை**

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020**

**தமிழ்மொழியும் இலக்கியமும்** I, II

| 22 | T | I, II |
|---|---|---|

## மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – II

### தமிழ்மொழியும் இலக்கியமும் - II

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

"புனலருவி கழங்கென"

(ii) பேச்சு வழக்கில் இடம்பெறும் பின்வரும் வாக்கியத்தை எழுத்து வழக்குக்கு மாற்றி எழுதுக.

"பொழுது விடிஞ்சதும் விடியாததுமாக வயலுக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுவன்"

(iii) 'அமர்' என்ற சொல், பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.

(iv) "அவன் விரைவாக ஓடி வந்தான்." - இவ்வாக்கியத்தில் இடம்பெறும் வினையெச்சம் யாது?

(v) "தம்பி கடிதம் எழுதினான்."- இதனைச் செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(vi) 'அடைக்கலம்' என்ற சொல்லின் கருத்துப் புலப்படுமாறு அச்சொல்லை ஒரு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

(vii) பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.

"ஐக்கியநாடுகள் சபையின் சித்திரவதைகள் மற்றும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு எதிரான அமைப்பு மேற்படி சித்திரவதைகளில் ஈடுபடும் நபர்களை நீதியின் முன் நிறுத்துமாறு அரசைக் கோரியுள்ளது"

(viii) புணர்த்தி எழுதுக.

குருத்து + ஓலை

பூ + உதிர்ந்தது

(ix) கமலா அழகாக எழுதினாள்.
கமலா விரைவாக எழுதினாள்.

- மேற்படி தனிவாக்கியங்களைக் கூட்டுவாக்கியமாக்குக.

(x) பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிடுக. "புகையிரதம் சரியான நேரத்திற்குப் புறப்படவில்லையாயின் பயணிகள் சிரமப்படுவர்"

**(20 புள்ளிகள்)**



kalvi.lk

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து, ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) உலகின் பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு சமூகக் குழுக்கள் ஒன்றிணைந்து வாழ்வதனைக் காண்கிறோம். அத்தகைய நாடுகளில் எமது நாடும் ஒன்று. பல்வேறு சமூகங்கள் ஒரு தேசிய அரசின் ஆள்புல எல்லைக்குள் வாழ்வது அந்நாட்டின் பலமென்றே கூற வேண்டும். பல சமூகங்களின் ஒன்றிணைவானது நாட்டின் பேரழகுகளில் ஓர் அம்சமே எனலாம். எதிர்நிலையில் சமூக ஒன்றிணைவு சீர்குலைந்தால் விபரீத விளைவுகளும் ஏற்படும். எனவே, பல்வேறு சமூகங்கள் வாழும் நாட்டில் சமூக சமத்துவமின்மை ஏற்படுத்தக் கூடிய விளைவுகளையும், சமூக சமத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைக்கும் வகையில் ஒரு **விளக்கக் கட்டுரை.**

(ii) ஒழுக்கமுடைமை ஓர் அழகு. ஒழுக்கமில்லாதவன் கற்ற கல்வியும் அவனுக்கு இழுக்கே. ஒழுக்கமுடைமையால் உயர்ந்தவர்கள் பலரை நாம் அறிந்திருக்கிறோம். ஒழுக்கத்தைப் பேணி நடத்தமையால் அவர்கள் அடைந்த பெருமைகளையும் அறிந்திருக்கிறோம். அதேவேளை ஒருவன் ஒழுக்கமின்மையால் அடைந்த இழிவுகளையும் கண்டும், கேட்டும் அறிந்திருக்கிறோம். எனவே, ஒழுக்கமுடைமை யாதென்பதையும் அதன் பெருமைகளையும் ஒழுக்கமின்மையால் எற்படும் இழிவையும் தெளிவுறுத்துவதாக அமையும் ஒரு **மேடைப் பேச்சு.**

(iii) சினிமாவானது மனித வாழ்க்கைக் கோலத்தையும் யதார்த்த வாழ்வையும் மையம்கொண்டு இயங்குவது என்ற கொள்கையுடைய ஒருவருக்கும், சினிமா வர்த்தக நோக்கத்தையே பிரதானப்படுத்துவது, அத்தகைய பின்னணியில் வெளிவரும் சினிமாக்களே மக்களைப் பெரிதும் கவர்கின்றன என்ற கொள்கையுடைய மற்றொருவருக்கும் இடையிலான ஓர் **உரையாடல்.**

(iv) நாதனின் தந்தை விபத்தொன்றில் சிக்கி இறந்துவிடுகிறார். தாயார் மட்பாண்டம் வனைதலைத் தொழிலாக மேற்கொண்டு நாதனையும் நாதனுக்கு இளையவர்களான இரு பெண் பிள்ளைகளையும் காத்து வருகிறாள். கல்வியில் வெகு கெட்டிக்காரனான நாதன் தாயின் தொழிலுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொண்டு, தனது கல்வி ஊக்கத்தைக் கைவிடாது திறம்பட கற்றுப் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்கிறான் என்பதைக் கருவாகக் கொண்ட ஒரு **சிறுகதை.** **(25 புள்ளிகள்)**

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை **40 - 45** சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

மனிதன் இயற்கையில் ஒருமித்து வாழும் தன்மையுடையவன். பிறருதவியின்றி எதையும் சாதிப்பது இயலாதாகையால் அவன் தனித்து வாழ முடியாது. குகைகளில் வசித்து வந்த ஆதிமனிதன் கூடத் தன் தினசரி வாழ்க்கையை நடத்துவதற்கு ஒரு பெண்ணை வாழ்க்கைத் துணையாகக் கொண்டான். மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்வது மனிதனின் இயல்பு. இதனால் அவனிடத்து இன நோக்குண்டானது. பழக்கவழக்கங்கள் விருத்தியடைந்தன. ஒரு தலைவனுக்கு அமையவும் முதியோரின் புத்திமதியைக் கேட்கவும் பழகிக் கொண்டான். உணவுக்காக காட்டு மிருகங்களை வேட்டையாட வேண்டியதாயிற்று. பின்னர் மிருகங்களை வளர்த்து வாழ்க்கை நடத்தினான். நீர் வளமுள்ள ஆற்றோரங்களிலும் குளக்கரைகளிலும் உணவுப்பயிர்களை உண்டாக்கி, நிரந்தரமான வீடமைத்து வாழ்ந்து வந்தான். இவ்வாறு அவனுடைய நாடோடிச் சீவியம் நீங்க, நிலைபேறான கிராம வாழ்க்கை தொடங்கிற்று. வேளாண்மையின் பயனாக நிரந்தரமாக வீடமைத்து வாழும் கூட்டுச் சமூக வாழ்க்கை உண்டானது. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் ஒவ்வொரு தொழிலுடைய பல்வேறு சமூகங்கள் தோன்றலாயின. கமக்காரர் வயல்களைப் பண்படுத்தி வேளாண்மை செய்தனர். இடையர் மந்தைகளை வளர்த்தார்கள். தச்சரும் கம்மாளரும் கலப்பை முதலான ஆயுதங்களைச் செய்து வந்தனர். இவ்வாறே ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு தொழிலைச் செய்தார்கள். ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தமது நிலையினை உயர்த்திக்கொள்வதற்காக வேறு தொழிலில் ஈடுபடக்கூடாது. இது பற்றியே சாதிக் கட்டுப்பாடு ஏற்பட்டது.

**(10 புள்ளிகள்)**


kalvi.lk

4. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

டி.எஸ். எலியட் எனும் ஆங்கிலப் புலவர் 'பண்பாட்டின் வரையறை பற்றிய குறிப்புகள்' என்னும் நூலில் பண்பாடு என்பது யாதென விரிவாக விளக்கினார். நம்மிலக்கியத்தில் பண்பாடு என்னும் சொல் இந்நூற்றாண்டில்தான் ஆங்கிலமறிந்த தமிழறிஞர்களால் உண்டாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இன்று நாம் பண்பாடு என்னும் சொல்லால் குறிப்பிடும் துறைகளை நம்முன்னோர் பண்பு, பண்புடைமை, சால்பு, சாண்றாண்மை முதலிய சொற்களால் குறித்துள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பண்பாட்டுடன் தொடர்புள்ள பொருள்களைக் குறித்தாலும் பல இடங்களில் பண்பாட்டையே கருதுகிறது. கலித்தொகையில் "பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுவது" என்றும் வள்ளுவத்தில் "பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்றும் வருவதைக் காண்க. பண்பாடு உடையவரைச் சான்றோர் என்றும் ஒழுக்கமுடையோர் என்றும் ஒளியோரென்றும் மாசற்ற காட்சியுடையோர் என்றும் அழைத்தனர். ஆங்கிலத்தில் Culture எனப்படும் சொல்லிற்குத் தமிழில் பண்பாடு என்று குறிப்பிடுகின்றோம். ஆங்கிலச் சொல், நிலத்தைப் பண்படுத்துதல் என்னும் பொருள்தரும் இலத்தீன் சொல்லாகிய Cultura Agri என்பதிலிருந்து எவ்வாறு பிறந்ததோ அதுபோல தமிழ்ச் சொல்லாகிய பண்பும் நிலத்தைப் பண்படுத்துவதிலிருந்து தோன்றியிருக்க வேண்டும். உழவுத்தொழில் எவ்வாறு நிலத்தைப் பண்படுத்துகிறதோ அவ்வாறே மனத்தையும் மக்களையும் பயன்படுத்துவது பண்பு. இச்சொல்லைத்தான் பண்பாடு என்னும் பொருளில் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் நூலாசிரியர்கள் பயன்படுத்தியுள்ளார்கள்.

அ. டி.எஸ்.எலியட் பண்பாடு பற்றிய தமது விளக்கத்தை முன்வைக்கும் நூலின் பெயர் யாது?

ஆ. பண்பாடு என்னும் சொல் தரும் பொருளுக்கு நிகராக பழங்காலத்தில் தமிழில் வழங்கிய சொற்கள் யாவை?

இ. பண்பாடு உடையோர் எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டனர்?

ஈ. 'வள்ளுவம்' எனச் சுட்டப்பட்டுள்ள இலக்கியம் யாது?

உ. Cultura Agri என்ற இலத்தீன் மொழிச் சொல் உணர்த்தும் பொருள் யாது?

**(10 புள்ளிகள்)**

5. உமது பாடசாலையில் கலைவிழா கொண்டாடப்படவுள்ளது. உம்மைப் பாடசாலைக் கலைமன்றத்தின் செயலாளர் எனக் கருதிக்கொண்டு விழாத் தொடர்பான விபரங்கள், இடம்பெறவுள்ள கலை நிகழ்ச்சிகள் முதலியவற்றைக் குறிப்பிட்டு அவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக வருகை தருமாறும் கலைவளர்ச்சியில் பாடசாலைகளின் பங்களிப்பு பற்றி உரையாற்றுமாறும் பல்கலைக்கழகமொன்றின் தமிழ்த்துறைத் தலைவருக்கு 100 சொற்களில் ஓர் **அழைப்புக் கடிதம்** எழுதுக.

**அல்லது**

உமது பாடசாலையின் தமிழ் இலக்கிய மன்றத்தின் செயலாளராக உம்மைக் கருதிக்கொண்டு, பாடசாலையில் நடைபெறவுள்ள தமிழ் இலக்கிய மன்றம் வெளியிடும் 'ஊற்று' சஞ்சிகையின் வெளியீட்டு விழா தொடர்பான செய்திகளைப் பிரசுரிப்பதற்கு பின்வரும் அம்சங்களைக் கருத்திற் கொண்டு 100 சொற்களில் **பத்திரிகைச் செய்தி** ஒன்று எழுதுக.

பாடசாலையின் பெயர்

திகதியும் நேரமும்

தலைமை, விமர்சனம்

நிகழ்ச்சிகள்

**(15 புள்ளிகள்)**


kalvi.lk

## தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை

### கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020

### தமிழ்மொழியும் இலக்கியமும் (22)

### மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – III

**தமிழ்மொழியும் இலக்கியமும் - III**

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) " நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம்
தன் மனத்தில் நினைத்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை"

(அ) நெடுமையால் உலகு அளந்தவர் யார்?

(ஆ) 'கொடுமையாள் அளந்தாள்' எனக் குறிக்கப்படுபவர் யார்?

(ii) " கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை இடிப்போம்"

(அ) இங்கு குறிப்பிடப்படும் தானியம் யாது?

(ஆ) 'கிம்புரி' எனக் குறிக்கப்படுவது யாது?

(iii) " பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்"

(அ) பீழை என்பதன் பொருள் யாது?

(ஆ) பேதையொருவனுடன் கொண்ட நட்பின் இயல்பு பற்றி யாது கூறுகிறார்?

(iv) " உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்"

(அ) 'உயிர் அனையாய்' என விளிக்கப்படுபவர் யார்?

(ஆ) அறத்தின் உருவம் போல்வான் யார்?

(v) " வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது"

(அ) மேற்படி பாடலைப் பாடியவர் யார்?

(ஆ) அடியவரிடம் இறைவன் எதிர்பார்ப்பது யாது?

(vi) " கைவிடுவேன் என்று எண்ணிக் கவலைப்படாதே கன்னி
அல்லாமேல் ஆணை - உன்னை அடையாட்டிக் காட்டுப்பள்ளி"

(அ) நாட்டார் பாடல்களின் வகைப்பாட்டுள் இப்பாடல் எவ்வகையைச் சார்ந்தது?

(ஆ) 'காட்டுப்பள்ளி' என்பது எதனைச் சுட்டுகிறது?


kalvi.lk

(vii) " கன்னன்மொழி கேளாது கஞ்சமுகம் நோக்காது"

(அ) தலைவியின் பேச்சின் இனிமையை வெளிப்படுத்த பயன்படுத்தப்பட்டுள்ள தொடர் யாது?

(ஆ) தலைவியின் முகத்திற்கு எதனை உவமிக்கின்றார்?

(viii) " வாடுகின்ற மடப் பாவைதன் வரமும்
என் வரமும் வழுவா வண்ணம்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத் தூது
விடுக இனி கொற்ற வேந்தே

(அ) மடப்பாவை, கொற்ற வேந்து ஆகிய தொடர்களால் சுட்டப்படுபவர்கள் யாவர்?

(ஆ) இப்பாடல் யார் கூற்றாக இடம்பெற்றுள்ளது?

(ix) " அந்த மாதம் அந்த வெண்ணிலவில் தந்தை இருந்தார். குன்றும் இருந்தது. இந்த மாதம் இந்த வெண்ணிலவில் வெற்றி முரசு வேந்தர்கள் குன்றும் கொண்டனர்."

(அ) இங்கு 'தந்தை' எனச் சுட்டப்படும் மன்னர் யார்?

(ஆ) 'குன்று' எனச் சுட்டப்படுவது யாது?

(x) " கொட்டி வைத்த இடத்தில் சற்று நேரம் பிசகாமல் உறைந்திருக்கும் எருமைத் தயிர் போல் ஆடாமல் இருந்தது அதன் வடிவம்."

(அ) இவ்விபரணம் எதைப் பற்றியது?

(ஆ) இதில் இடம்பெற்றுள்ள அணி யாது (20 புள்ளிகள்)

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா
கொங்கர்க் கமரா பதியளித்த
கோவே யிராசா குலதிலகா
வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே

(அ) உழவர்கள் தாகசாந்தி செய்வதற்குக் கையாண்ட உத்தி யாது?

(ஆ) அப்பிறைக்கும் விழிவோல் என்ற தொடரை விளக்குக.

(ii) நீரெடுத்து வருதற் கவள்மணி
நித்தி லப்புன் னகைசுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன்செலப்
போகும் வேளை யதற்குத் தினந்தோறும்
வேரெ டுத்துச் சுதந்திர நற்பயிர்
வீழ்ந் திடச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சீரெ டுத்த புலையுயிர்ச் சாரர்கள்
தேச பக்தர் வரவினைக் காத்தல்போல்

(அ) இப்பாடலில் அது எழுந்த காலத்து நாட்டு நிலைமை புலப்படுமாற்றை விளக்குக.

(ஆ) 'சுதந்திர நற்பயிர்' என்ற தொடரில் பயின்றுள்ள அணியை விளக்குக.


kalvi.lk

(iii) " நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளத்துமணற் கொண்ட கல்லா விளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே"

(அ) முதுமைநிலை விபரிக்கப்படுமாற்றை விளக்குக.

(ஆ) 'கல்லா இளமை' எனும் தொடர் உணர்த்தும் பொருள் யாது?

(iv) " குணக்குன்றாய் உழைத்துண்ணும் குலவிளக்காம் மனிதன்
முன்றலிலே மண்ணளைந்து முழங்காலில் தவழ்ந்து
முத்துதிர நகைசெய்யும் சொத்தாகும் மழலை"

(அ) இக்கவிதை வரிகளில் இடம்பெறும் உருவக அணிகளைச் சுட்டிக்காட்டுக.

(ஆ) மழலையின் செயற்பாடு இரண்டினைத் தருக.

(v) தூல வடிவில் நின்றும் மறைந்த இலட்சிய புருடர்களை இயற்கைப் புலமையும் அறிவுத் தெளிவும் உள்ள உண்மைக் கவிஞர்கள் காவியங்களிலே சூக்கும வடிவில் அமைத்துக் காட்டுகின்றார்கள். இவ்வற்புதக் காட்சியில் இலக்கிய புருடர்களைக் காணாமற் கண்டு பேரானந்தம் அடைகின்றோம். இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம். இதேபோன்று இலக்கியங்களும் அபின்னம்.

(அ) தூலவடிவம், சூக்கும வடிவம் என்பவற்றின் பொருள்களைத் தருக.

(ஆ)" இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம்" என்பதால் நீர் புரிந்து கொள்வது யாது?

**(20 புள்ளிகள்)**

3. **கிருட்டிணன் தூதுச் சருக்கத்தினை** அடிப்படையாகக் கொண்டு,

(அ) கண்ணபிரானின் சிறப்பு

(ஆ) குருநாட்டின் சிறப்பு

என்பனவற்றை விளக்குக.

**அல்லது**

**குகப் படலத்தில்** பரதன்

(அ) கோசலை

(ஆ) சுமித்திரை

(இ) கைகேயி

ஆகியோரை குகனுக்கு அறிமுகம் செய்துவைக்குமாற்றைத் தெளிவுறுத்துக. **(15 புள்ளிகள்)**

4. **மூத்தம்மா** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு

(அ) கிராமிய நம்பிக்கைகள்

(ஆ) காசிம் என்ற பாத்திரத்தின் படைப்பு

ஆகியவற்றை விளக்குக.

**அல்லது**

**தத்தைவிடுதூது** என்ற பாடற் பகுதியில்

(அ) தலைவி பற்றிய வர்ணிப்புகள்

(ஆ) பெண்கள் கல்வி கற்பதனால் கிடைக்கக் கூடிய நன்மைகளாகச் சுட்டப் பெற்றவை என்பவற்றை விளக்குக. **(15 புள்ளிகள்)**

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

5. **எது நல்ல சினிமா** என்ற கட்டுரையில்

(அ) சினிமா நாடகத்திற்கு அடிமைப்பட்டுள்ளது என்பதற்குக் கட்டுரையாசிரியர் கூறும் காரணங்கள்

(ஆ) காட்சிப் படிமங்களை இணைக்கும் முறைகளாகச் சுட்டப்பட்டவை

ஆகியவற்றை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

6. **நாவலர் எழுந்தார்** என்ற கட்டுரையில்

(அ) விசுவநாதபிள்ளையின் ஆளுமையும் நாவலர்மீது அவர் கொண்ட மதிப்பும்

(ஆ) பிறிற்றோவின் ஆளுமையும் நேர்மையின்மையும்

கட்டுரையாசிரியரால் வெளிப்படுத்தப்படுமாற்றைத் தெளிவுறுத்துக.

(10 **புள்ளிகள்)**

7. (அ) **" பட்டி பெருகவேணும் தம்பிரானே"** எனத் தொடங்கும் நாட்டார் பாடலில் சிவனிடம் இரங்கி வேண்டுவன

(ஆ) **"ஆற்றோடு ஆற்றுநீர்"** எனத் தொடங்கும் நாட்டார் பாடலில் இளைஞர்கள் அரிவி வெட்டுவது பற்றிய விபரிப்பு

ஆகியவற்றை விளக்குக. **(10 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# தேசிய கல்வி நிறுவகம் - தமிழ்மொழித்துறை

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை) 2020

## தமிழ்மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II |

### மாதிரிப் பரீட்சை - 3

மூன்று மணித்தியாலம்

வாசிப்பு நேரம் மேலதிகமாகப் பத்து நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்றும் விடை எழுதம்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

### தமிழ்மொழியும் இலக்கியமும் - I

**கவனிக்க:**

i. **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **தடித்த** எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. எனது சிரசில் சௌந்தர்ய கிரீடம் சூடியதான மிதப்பு - சௌந்தர்யம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்

   (1) பெருமை (2) அழகு (3) தங்கம் (4) பாரம்

2. விரும்புவமோ சந்நியாசம் விளம்பாய் பசுங்கிளியே! இங்கு சந்நியாசம் என்பது

   (1) இல்வாழ்வு (2) மாணவநிலை (3) துறவு வாழ்க்கை (4) அஞ்ஞாதவாசம்

3. ஆடு - மந்தை என்பது போல மாடு

   (1) பட்டி (2) கூட்டம் (3) குழாம் (4) பந்தி

4. ஜனாதிபதியின் உரை E – magazine இல் வெளிவந்தது E – magazine என்பதன் தமிழ்ச் சொல்

   (1) இணைய இதழ் (2) சமூக இதழ் (3) மின்இதழ் (4) இலத்திரனியல் பத்திரிகை

5. பின்வருவனவற்றுள் இருதிணைக்கும் பொதுவாக வரும் சொல்

   (1) தந்தை (2) குட்டி (3) ஊமை (4) தாய்

- பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. சங்க காலத்தில் உமணர்கள் வாழ்ந்துள்ளமையை சங்கப் பாடல்களில் காணலாம். உமணர்கள் என்போர்

   (1) குறுநில மன்னர்கள் (2) உப்பு உற்பத்தி செய்வோர்
   (3) பகை வேந்தர்கள் (4) மந்தை மேய்ப்பாளர்கள்

7. விண்ணப்பத்திற்கான திகதி இன்றோடு நிறைவடைகிறது. இங்கு இடம்பெற்றுள்ள ஓடு உருபு ஏற்றுள்ள பொருள்

   (1) கொடைப்பொருள் (2) வரையறைப்பொருள்
   (3) உடன்நிகழ்ச்சிப்பொருள் (4) காலப்பொருள்

Education கல்வி அத்யாபன



kalvi.lk

8. "விழலுக்கு இறைத்த நீர் போல்" என்ற உவமைத் தொடருக்குப் பொருத்தமான பிறிதொரு உவமைத் தொடர்

(1) புளியம் பழமும் ஓடும் போல
(2) காட்டில் எறித்த நிலாப் போல
(3) காய்ந்த மாடு கம்பில் விழுந்தது போல
(4) பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல

9. மாணவர்கள் பாடசாலையின் அமுத விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குத் தயாரானார்கள். அமுதவிழா கொண்டாடப்படுவது

(1) 75ஆம் ஆண்டு நிறைவில் (2) 25ஆம் ஆண்டு நிறைவில்
(3) 80ஆம் ஆண்டு நிறைவில் (4) 50ஆம் ஆண்டு நிறைவில்

10. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் என்ற பழமொழியால் உணர்த்தப்படுவது

(1) சேமிப்பின் சிறப்பு (2) உலோபித்தனத்தின் விளைவு
(3) தருமத்தின் அத்தியாவசியம் (4) சுயநலப்பண்பின் தீமை

• பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

11. விரைவினை உணர்த்துவதற்கு பொருத்தமற்ற இரட்டைகிளவி

(1) குடுகுடு (2) படபட (3) சலசல (4) விறுவிறு

12. அருமந்த பிள்ளை என்பது

(1) மரூஉ (2) இடக்கரடக்கல் (3) மங்கலம் (4) குழூஉக்குறி

13. கவ்வியது என்பதில் இடம்பெற்றுள்ள போலி

(1) முதற்போலி (2) இடைப்போலி (3) கடைப்போலி (4) இலக்கணப்போலி

14. உறுதியானது என்ற கருத்தை தரும் மிகப் பொருத்தமான தொடர்

(1) அழுத்தம் திருத்தம் (2) அடிக்கடி (3) திட்டவட்டமாக (4) கிட்டத்தட்ட

15. பின்வருவனவற்றுள் வழுவற்ற சொற்களைக் கொண்ட தொகுதி

(1) வெந்நீரூற்று, வியர்வை, கலாசாரம், கற்கண்டு
(2) வெந்நீரூற்று, குளிர்மை, கலாச்சாரம், கற்கண்டு
(3) வெந்நீரூற்று, கலாசாரம், வியர்வை, கட்கண்டு
(4) நாகரீகம், வெந்நீரூற்று, கலாசாரம், கற்கண்டு

Education கல்வி அධ්‍යාපන

16. பின்வருவனவற்றுள் பகுபதமாக அமையாத சொல்

(1) பாசி (2) என்னை (3) உடையை (4) எழுது

• பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான நிறைவுப்பகுதியைத் தெரிவு செய்க.

17. அடுத்த வாரம் முதல் அனைத்துப் பாடசாலைகளும் வழமைபோன்று ........................

(1) நடைபெறுகிறது (2) நடைபெற்றது (3) நடைபெறும் (4) நடைபெறுகின்றன

18. உருட்டும் புரட்டும் ........................

(1) ஒடுக்கும் சிறப்பை (2) சிறப்பை ஒடுக்கு
(3) உயர்வு தரா (4) பொய்மை வாழ்வு

19. நண்பர்களோடு இணைந்து விமலனும் சுற்றுலா ........................

(1) சென்றனர் (2) செல்கிறான் (3) சென்றான் (4) செல்வர்


kalvi.lk

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

20. கண்காட்சியைப் பார்வையிட தம்பி வந்தாலும் வருவான். இடம்பெற்றுள்ள 'உம்' இடைச்சொல்லின் பொருள்

(1) எதிர்மறை (2) தெளிவு (3) ஐயம் (4) தகுதி

21. பின்வருவனவற்றுள் கூட்டெழுத்து

(1) கை (2)ஐ (3)ஓ (4) கூ

22. பின்வரும் சொற்களுள் திரிதல் விகாரப்புணர்ச்சி இடம்பெற்ற சொல்

(1) பற்பசை (2) மோதிரவிரல் (3) வீட்டுக்கூரை (4) விடைத்தாள்

23. பின்வருவனவற்றுள் கூட்டுப்பெயர் **இடம்பெறாத** வாக்கியம்

(1) நாய் கையைக்கையை நாக்கியது
(2) அவன் புகையிரதநிலையத்திற்குச் சென்றான்
(3) பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன
(4) மாணவர்களின் படைப்பாக்கம் வெளிப்பட்டது

24. அடிதோறும் செய்யுற் சீர்களில் அல்லது வாக்கியத்தின் சொற்களில் இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது

(1) எதுகை (2) மோனை (3) உருவகம் (4) சிலேடை

25. மரக்கிளை என்பது

(1) உவமைத்தொகை (2) உம்மைத்தொகை
(3) வேற்றுமைத்தொகை (4) பண்புத்தொகை

26. தாத்தா மரத்திற்கு நீரூற்றினார். இங்கு ஊற்றினார் என்பது,

(1) தன்வினை (2) பிறவினை (3) செயற்பாட்டுவினை (4) வினையெச்சம்

27. கமலா காலை உணவாகப் பொங்கல் கொண்டு வந்தாள். இங்கு பொங்கல் என்பது

(1) சினையாகு பெயர் (2) பொருளாகு பெயர்
(3) தொழிலாகு பெயர் (4) வினையாகு பெயர்

28. பின்வருவனவற்றுள் இறந்தகால இடைநிலைகள்

(1) ப், த் (2) ட், வ் (3) த், ற் (4) கின்று, ந்

29. வீதியில் எலும்பும் தோலுமாக நின்ற நாயைக் கண்டதும் அப்பா இரங்கினார் - இங்கு எலும்பும்தோலும் என்பது

(1) சிலேடை (2) இரட்டைக்கிளவி (3) இணைமொழி (4) அடுக்கிடுக்குத்தொடர்

30. உதாரணம் என்பதை உ-ம் எனச் சுருக்கி எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள நிறுத்தக்குறி

(1) விட்டிசைக்குறி (2) அனுவாதக்குறி (3) வியப்புக்குறி (4) தொடரிசைக்குறி

- **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

31. பொன்னை உரைத்து அதன் தரம் அறிவதற்கு பொற்கொல்லன் .............................. கல்லை உபயோகித்தான்.

(1) கருங்கல் (2) உரைகல் (3) தராசு (4) நிறுவைக்கல்

32. வெளிப்படையாகப் புகழ்ந்தும் மறைமுகமாக இகழ்ந்தும் பாடுவது ............... ஆகும்.

(1) வாழ்த்துப் பா (2) அறம்பாடுதல் (3) வஞ்சப்புகழ்ச்சி (4) மெய்க்கீர்த்தி


kalvi.lk

33. சிறந்த வீரர்களை உள்ளடக்கிய விளையாட்டுக்குழு இந்தியா நோக்கிப் ……………

(1) புறப்பட்டனர் (2) புறப்பட்டார்கள் (3) புறப்படுவர் (4) புறப்பட்டது

34. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ………….. கட்டுப்பணத்தைச் செலுத்தினர்.

(1) வேட்பாளர்கள் (2) சுயேட்சைக்குழு (3) வாக்காளர் (4) போட்டியாளர்கள்

35. ஆசிரியர் உத்தரவிட்டாலன்றி அவன் எதையும் …………..

(1) செய்கிறான் (2) செய்வான் (3) செய்யான் (4) செய்யார்

36. .................. - அறிவு, நிலா என்ற பொருள்களைத் தரும் ஒரு சொல் ஆகும்.

(1) ஞாயிறு (2) மதி (3) திங்கள் (4) உடு

- தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

வேலைசெய் யாதுசோம் பேறிகளாய் - நிதம்
வீட்டிலிருப்பது ஆகாதம்மா!
மூலையிலிட்ட இரும்பு துருவேறி
மோசமாய் போவதும் கண்டிலையோ?
வேலைகள் செய்து உடல் வன்மை பெறின் - இந்த
மேதினி முற்றும் நமதே அம்மா
காலனையும் வெற்று வாழ்வோம் அம்மா! - ஒரு
காலும் தளர்ச்சியுண்டாகாதம்மா!

37. பாடலில் கவிஞர் கூற விரும்புவது

(1) காலனைய வெல்லும் வழி
(2) உடல் வலிமைக்கு வழி
(3) உடலுழைப்பின் நன்மைகள்
(4) உலகை உடைமையாக்கும் வழி

38. பாடலில் துருப்பிடித்த இரும்புக்கு உவமிக்கப்படுபவர்

(1) சோம்பேறி (2) காலண் (3) அம்மா (4) உழைப்பாளர்

39. பின்வருவனவற்றள் பாடலுடன் தொடர்பற்ற கூற்றாக அமைவது

(1) வேலை செய்வதால் உடல் வலிமைபெறும்
(2) உழைப்பாளரை எவரும் வெல்ல முடியாது
(3) உழைப்பவர்க்கு உலகம் சொந்தமாகும்
(4) உடற்பயிற்சி உடல் வலிமையை தரும்

Education கல்வி அධ්‍යාපන

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெறவைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ப மிகப்பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவுசெய்க.

அ) குறிப்பாக நாடக ஆக்கத்தில் அவர்கள் அதீத ஆர்வம் காட்டுகின்றனர்.
ஆ) அவர்கள் புத்தாக்கங்களில் ஈடுபடுவத்றகும் தூண்டுகின்றனர்
இ) சிறுவர்களுக்கு இயல்பாகவே கலை உள்ளம் உண்டு.
ஈ) அதுமட்டுமன்றி நாடகங்கள் மூலம் புலப்படுத்தப்படும் விடயங்கள் அவர்களின் மனங்களில் ஆழமான பாதிப்பையும் ஏற்படுத்துகின்றன.
உ) இதன் காரணமாகவே கதை, பாடல், நாடகம், விளையாட்டு போன்றவற்றினூடாகக் கற்பிக்கும் விடயங்களை ஆர்வத்துடன் கற்கின்றனர்.

(1) இ, உ, அ, ஈ, ஆ
(2) இ, உ, ஆ, அ, ஈ
(3) உ, ஆ, ஈ, இ, அ
(4) ஆ, இ, ஈ, அ, உ


kalvi.lk

## தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை

### கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020

### தமிழ்மொழியும் இலக்கியமும் I, II

| 22 | T | I, II |
|---|---|---|

### மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – II

**தமிழ்மொழியும் இலக்கியமும் - II**

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) ‘‘பெண்கடொழி லாமென்றே பேசிடுவ ரொருசாரார்’’ தரப்பட்ட தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.

(ii) ‘‘சீ….. ஒத்தராலும் இன்னேம் ஒழும்பல்ல’’ பேச்சு வழக்கிலுள்ள இக்கூற்றினை நியம வழக்கில் எழுதுக.

(iii) தன்மைப் பன்மை எதிர்கால வினைக்கு ஒரு உதாரணம் தருக.

(iv) கிரந்த எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் இரண்டு எழுதுக.

(v) ‘மயில் கூவும்’ என்பதில் இடம்பெற்றுள்ள வழுவகையைக் குறிப்பிட்டு அதனை வழா நிலையில் எழுதுக.

(vi) ‘‘கற்றாரைக் கற்றாரே காமுறுவர்’’ இத்தொடரின் எழுவாய், பயனிலை செயப்படுபொருளை எழுதுக.

(vii) செய்வினை, செயப்பாட்டு வினைக்கு ஒவ்வோர் உதாரண வாக்கியம் தருக.

(viii) நூறு பாடசாலை மாணவர்கள் தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவ்வாக்கியத்திற் காணப்படும் பொருள் மயக்கத்தை இனங்கண்டு விளக்குக.

(ix) ‘‘மலையில் வீழ் அருவி’’

“விமலனில் நல்லவன் கமலன்”

தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றும் உணர்த்தும் பொருளை குறிப்பிட்டு அவை எத்தனையாம் வேற்றுமை என எழுதுக.

(x) அன்னம், அண்ணம் ஆகிய சொற்கள் இடம்பெறும் வகையில் இருவேறு வாக்கியங்கள் எழுதுக.

**(10 × 2 = 20 புள்ளிகள்)**



kalvi.lk

2. பின்வருவனவற்றுள் **ஒற்றைத்** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலைப்பு இடுக.

(i) இன்றைய இளம் தலைமுறையினர் விரைவு உணவுப் பழக்கத்திற்கு அடிமையாகி எமது பாரம்பரிய உணவுமுறையைக் கைவிட்டமையினால் நோய்களுக்கு ஆளாகும் நிலையை அவதானிக்க முடிகின்றது. இதனால் வாழ்நாள் முழுவதும் மருந்துகளுடனேயே வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இத்தகைய விரைவு உணவுப்பழக்கத்தின் தாக்கம் பற்றிய **விளக்கக் கட்டுரை**.

(ii) கொரோனா தொற்றுநோய் பரவலால் பாடசாலைகள் மூடப்பட்டு அனைத்து மாணவர்களும் வீட்டில் இருந்த காலத்தில் பல மாணவர்களது விஞ்ஞான ரீதியிலான புத்தாக்கச் சிந்தனைகள் ஆக்கத்திறன்சார் படைப்புக்கள் எனப்பல வெளிப்படுத்தப்பட்டன. நூற் கல்வியை விடவும் இணையவழிக் கற்றலும் தேடலுமே இதற்கு வழிவகுத்தது எனக் கூறும் ஆதவனுக்கும் நூல் கல்வியே சிறந்தது என வாதிடும் அவனது நண்பன் சாந்தனுக்கும் இடையில் இடம்பெறும் **உரையாடல்**.

(iii) இருபத்தொராம் நூற்றாண்டில் வாழும் நாம் விஞ்ஞானத்தின் உச்சத்தைத் தொட்டு விட்டோம் எனப் பெருமிதப்பட்டாலும் கண்ணுக்குத் தெரியாத மிக நுண்ணிய வைரஸிலிருந்து மீள முடியாதவர்களாய் நாம் முடிங்கியுள்ளோம். மறக்கப்பட்ட எமது வாழ்வியல் முறைகளும் மேலைத்தேய மோகமும் இதற்குப் பிரதான காரணிகளாகின்றன என்பதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்ற தொனிப்பொருளில் ஒரு **மேடைப்பேச்சு**.

(iv) காலையில் எழுந்ததும் தேநீர்க் கோப்பையுடன் நிற்கும் அம்மா பள்ளிக்கு விரையும் மாணவச் சிட்டுக்கள் அன்றைய வேலைகளைத் திட்டமிட்டு நிறைவேற்றும் மிடுக்குடன் பணிக்குப் புறப்படும் அப்பா. இப்படி ஆனந்தமாய்க் கழிந்த வாழ்வைத் துறந்து ஒரு சிறு அறைக்குள் முடமாகி விட்டது என் வெளிநாட்டு வாழ்க்கை. மீண்டும் திரும்பி என் தாய் நாட்டிற்குச் செல்லவும் முடியாது சுதந்திர வாழ்வையும் இழந்து அந்நிய நாட்டின் சிறைக்குள் கழிகிறது என் இளமை வாழ்வு……என்று தொடரும் தன்மையில் ஒரு **சிறுகதை.**

**(25 புள்ளிகள்)**

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை **40 – 45** சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக).

மனிதன் கட்டுப்பாட்டினை விரும்பாமைக்குக் காரணம், கட்டுப்பாடு குறித்த அளவினை மீறி, கட்டுக்கடங்காத கட்டுப்பாடு ஆக வந்து விடுவது ஆகும். இன்னொரு காரணம், சமூகத்திற்கு வேண்டாத கட்டுப்பாடுகளையும், மனித உரிமைகளைப் பறிக்கின்ற கட்டுப்பாடுகளையும் மனிதர்களைச் சமூகத்தில் ஒடுக்கி அடக்குகின்ற கட்டுப்பாடுகளையும் நம்பிக்கைகள், வழமைகள், கொள்கைகள், கோட்பாடுகள், சம்பிரதாயங்கள், சமூகச் சட்டங்கள் என்ற போர்வையில் மக்களிடையே திணிக்கப்படுவதினாலும் ஆகும். இத்தகைய கட்டுப்பாடுகள் பெரும்பாலும் புற அழுத்தங்களின் விளைவாகவே காணப்படுகின்றன. எனவே, அவை விரும்பி ஏற்றுக்கொள்ளப்படுவன அல்ல. அவற்றைக் கடைப்பிடிக்கும்படி மக்கள் கட்டாயப் படுத்தப்படுகின்றனர். இவற்றை மீறுபவர்கள் புரட்சியாளர்களாகக் கணிக்கப்படுகின்றனர். நன்மையான விளைவுகளை, இப்புரட்சி ஏற்படுத்தினால், மக்களின் ஆதரவைப் பெறமுடிகிறது. புரட்சியாளர்கள், சீர்திருத்தவாதிகள் ஆகிவிடுகின்றனர். வெளிக் கட்டுப்பாடுகள் அநேகமானவை, திணிக்கப்படுவனவாகவும் அளவினை மீறிக் கட்டுக்கடங்காத நிலையினை எய்தி விடுவனவாகவும் வந்துவிடுகின்றன. அதனால் அத்தகைய கட்டுப்பாடுகளின் பிடியிலிருந்து மீளுவதற்கும், கட்டுப்பாடுகளை மீறுவதற்கும் எத்தனித்துக் கொண்டே மக்கள் இருப்பர். கட்டுக்கடங்காத கட்டுப்பாடு, மக்களைச் சங்கிலியால் பிணைக்கப்பட்ட சிறைக் கைதிகள்போல் ஆக்கிவிடுகின்றது. அத்தகைய கட்டுப்பாடுகள் வெறுக்கப்படுவனவாயும் மீறப்படுவனவாயும் அமைந்து விடுகின்றன.

**(10 புள்ளிகள்)**


kalvi.lk

4. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

உயிர் வாழும் எல்லாப் பிராணிகளிடத்தும் அன்பும் கருணையும் உடையவராய் இருக்க வேண்டும் என்ற சீலத்தின் அடிப்படையில்தான் புத்தருடைய போதனை தாபிக்கப்பட்டுள்ளது. மகா கருணையே பகவானுடைய போதனையின் பேரிலட்சியம். மனிதன் பூரணமடைய வேண்டுமானால் அவனிடம் கருணை, ஞானம் என்ற இரு பண்புகள் மலர வேண்டும். இங்கே கருணை என்றால் அன்பு, ஒப்புரவு, தயை, சகிப்புத் தன்மை என்பவற்றையும் உள்ளத்தில் உணர்ச்சியினால் உண்டாகும் நற்பண்புகளையும் குறிக்கும். பிரக்ஞா என்ற ஞானம் மனதில் தோன்றும் விவேகம் சார்பான பண்புகளைக் குறிக்கும். உணர்ச்சி சம்பந்தமான பண்புகளை ஒருவர் விருத்தி செய்து புத்தியை அலட்சியம் செய்வாரானால் அவர் நல்மனமுள்ள ஒரு முட்டாளாகி விடுவார். புத்தியை வளர்த்து உணர்ச்சிகளை அலட்சியம் செய்தால் ஒருவர் கருணையில்லாத விவேகியாக வளர்ச்சியடைவார். எனவே பூரண வளர்ச்சி பெறுவதற்கு உணர்ச்சியையும் வளர்க்க வேண்டும். விவேகத்தையும் வளர்க்க வேண்டும். பௌத்த வாழ்வு நெறி இதுவே.

நற்சீவனோபாயம் என்பது மற்றவர்க்குத் துன்பத்தை உண்டாக்கக் கூடிய தொழில்களில் ஒருவன் ஈடுபடாது தன் சீவனோபாயத்துக்கான ஊதியத்தைச் சம்பாதித்தல். மற்றவர்களை வஞ்சித்தல் போன்ற தொழில்களில் ஈடுபடாதிருத்தல் மதிப்புக்குரியதாகும். மற்றவர்க்கு இன்னா செய்யாத தொழில்களால் சீவனோபாயத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். மரணத்தை விளைவிக்கக் கூடிய ஆயுத வியாபாரத்தில் ஈடுபடக் கூடாதெனவும் அது தீமை நிறைந்த சீவனோபாயமென்றும் கூறுவதால் பௌத்தம் எந்தவிதமான யுத்தத்தையும் வெறுக்கிறதென்பதைத் தெளிவாகக் காணலாம்.

(அ) புத்தபெருமான் பௌத்த தர்மத்தை முன்வைத்தமைக்குரிய காரணம் யாது?

(ஆ) பூரணத்துவமான மனிதனுக்கு வேண்டியவை எவை?

(இ) நற்சீவனோபாயத்தில் கடைப்பிடிக்க வேண்டியவை எவை எனக் கூறப்படுகிறது?

(ஈ) பௌத்தம் யுத்தத்தை வெறுக்கும் மார்க்கம் என்பதற்கான சான்று யாது?

(உ) புத்தியும் உணர்ச்சியும் மனித வாழ்வுடன் எவ்வகையில் தொடர்புபடுகின்றன.

**(5 × 2 = 10 புள்ளிகள்)**

5. சுயகைத்தொழில் ஒன்றையேனும் அறிந்திப்பது எக்காலத்திற்கும் நன்மை தருவது. ஆனால் இன்று ஒரு சிலரே சுயதொழிலின் சிறப்பை அறிந்து அதனைத் தமது வாழ்வில் முன்னெடுத்து அதனூடாகத் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகின்றனர். கிராமிய மேம்பாட்டு மையம் ஒன்றின் தலைவர் என உம்மைக் கருதி சுயகைத்தொழில் மேம்பாட்டின் அவசியம் பற்றி நூறு சொற்களில் **துண்டுப்பிரசுரம்** ஒன்று எழுதுக.

**(15 புள்ளிகள்)**


kalvi.lk

## தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை

### கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020

### தமிழ்மொழியும் இலக்கியமும் (22)

### மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – III

**தமிழ்மொழியும் இலக்கியமும் - III**

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) ' கதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலோ மென்றான்'

(அ) இங்கு கட்டுரை என்பது எதனைக் குறிக்கிறது?

(ஆ) இக்கூற்று இடம்பெறும் நூலின் ஆசிரியர் யார்?

(ii) ' விலங்கல் திண்தோள் கைவீரக் களிறு அணைய காளை இவன்'

(அ) இக்கூற்றில் சிறப்பிக்கப்படுபவன் யார்?

(ஆ) விலங்கல் என்பது யாது?

(iii) ''இனி நினைத் திரக்க மாகின்று திணிமணற்
செய்யுறு பாவைக்குக் கொய்பூத்தை இத்''

(அ) இங்கு நினைவில் மீட்கப்படும் பருவம் எது?

(ஆ) இத்தொடரில் குறிப்பிடப்படும் விளையாட்டு எது?

(iv) ''மூத்தோன் மற்று இவை உரைப்ப இளையோன்
வெஞ்சினம் மனத்தில் மூளமூள''

(அ) மூத்தோன்

(ஆ) இளையோன்
எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?

(v) "இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றுங் கொண்டார்........"

(அ) இங்கு திங்கள் என்ற சொல் எப்பொருளில் இடம்பெற்றுள்ளது?

(ஆ) இக்கூற்றுக்குரியவர்கள் யாவர்? அவர்களின் பகைவர்களாக சுட்டப்படுபவர்கள் யாவர்?

(vi) (அ) அடக்கம் உடையவர் பற்றி மூதுரையில் கூறப்படும் விடயம் யாது?

(ஆ) இதனைக் கூறுவதற்கு ஆசிரியர் முன்வைக்கும் உதாரணம் யாது?

(vii) '' அனுபவம் பழுத்து அவவிடம் அறிவு தேஜஸ் சட்டெனத் தெரியும்''

(அ) தேஜஸ் என்பதன் பொருள் யாது?

(ஆ) இக்கூற்று யாரால் யாரைச் சிறப்பித்துக் கூறப்படுகிறது?



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

(viii) "கொங்கர்க்கு அமரா பதியளித்த கோவே யிராச குலதிலகா"

(அ) இங்கு குறிப்பிடப்படும் அரசன் ஆட்சி புரிந்த நாடு எது?

(ஆ) அந்த அரசனின் வீரம் இத்தொடரில் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(ix) " யாதும் ஊரே யாவரும் கேளிர்"

(அ) இக்கூற்று வெளிப்படுத்தும் உயர்பண்பு யாது?

(ஆ) கேளிர் என்பதன் பொருள் யாது?

(x) " வீட்டிலடைத்து வைக்கும் விரகிலருக்கியாதுரைப்போம்"

(அ) இக்கூற்று யாரைக் கண்டிப்பதாக அமைகிறது?

(ஆ) வீட்டிலடைத்து வைக்கப்படுவோர் யார்? **(20 புள்ளிகள்)**

2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரை நடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) பரிவுடன் மற்று இவை கூறும் பவன குமாரனை
மலர்க்கை பணித்து நோக்கி
குருகுலத்தோர் போர் ஏறே குற்றமது
பார்க்குங்கால் சுற்றம் இல்லை
ஒரு குலத்தில் பிறந்தவர்கள் உடன் வாழும்
வாழ்வினை போல் உறுதி உண்டோ
இருவருக்கும் வசை அன்றோ இரு நிலம்
காரணமாக எதிர்ப்பது என்றான்.

(அ) தருமன் வீமனுக்கு எடுத்துரைத்த செய்திகள் எவை?

(ஆ) இப்பாடலில் இடம்பெறும் வீமனின் சிறப்புக்கள் எவை?

(ii) ஆடிக் குடத்தடையு மாடும்போ தேஇரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது.

(அ) பாம்பு பற்றி விவரிக்கப்படும் விடயங்கள் எவை?

(ஆ) எள் பற்றி விவரிக்கப்படும் விடயங்கள் எவை?

(iii) கல்விநலம் பெற்றனரேற் காரிகையார் காதலர்க்குச்
சொல்லருநற் றுணையன்றோ தொல்லுலகு சிறக்குமன்றோ!
மெல்லியர்பாற் கல்வி விரும்பாத வீணரெலாம்
எல்லையிலா வின்படைதற் கிடையூறென் றேயியம்பாய்
என்னிருகண் மணியனையாட் கியம்பாய் பசுங்கிளியே!

(அ) பெண் கல்வியின் முக்கியத்துவம் பற்றி யாது கூறப்படுகிறது?

(ஆ) பாடலில் இடம்பெற்றுள்ள அணியினை குறிப்பிட்டு விளக்குக.

(iv) இனந்தெரியாத அச்சம் என்னைக் கவ்விக்கொண்டது. மூத்த வாப்பா குளிர் காய தீ மூட்டினார். என் வெள்ளை கொக்கு வெடவெடத்தது. சந்தனம் அரைத்து உச்சந்தலையில் பூசினார். அண்ணாவி மாமா வந்து ஓதிப்பார்த்தார். ஒரு ரூபாய் குற்றியை வெள்ளைத் துணியில் சுற்றிக் கட்டி. உச்சவட கல்லு அவுலியாவுக்கு நேர்ந்து வைத்தார்.

(அ) இக்கூற்று இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?

(ஆ) இப்பந்தியில் புலப்படும் மரபு ரீதியான பின்பற்றுதல்கள் எவை?


kalvi.lk

(v) எம் கண்காணக் கலியுக அரிச்சந்திரனான மகாத்மா காந்தியடிகள் வாழ்க்கை நடத்திய செய்தியும் நாமறிவோமன்றோ? காந்தியடிகளுக்கு இந்தியாவும் பெரியதன்று. உடலும் பெரிதன்று தன் உயிரும் பெரிதன்று. சத்தியமே பெரிதாயிற்று. இஃதும் உலகறிந்த செய்தியாய் உயர் தனிச் சிறப்பினை நமக்கு நல்கி சமூக நிலையிலேயே நமக்கு ஒளி தந்து நிற்கிறதே.

(அ) இப்பந்தியின் மையக் கருத்து யாது?

(ஆ) மகாத்மா காந்திக்கும் அரிச்சந்திரனுக்குமிடையிலான பொதுமைப் பண்பு யாது?

**(20 புள்ளிகள்)**

3. நல்ல சினிமா ஒன்றிற்கு சினிமா மொழியின் முக்கியத்துவம் பற்றி முன்வைக்கும் கருத்துக்களை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**அல்லது**

**இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக. விளக்குக.

அ. மாணிக்கவாசகர், தருமன் ஆகியோரின் இலட்சிய வாழ்வு

ஆ. இலட்சியவாதிகள் இலட்சியத்தை உயிரினும் மேலாகக் கருதும் நிலை

**(15 புள்ளிகள்)**

4. பெண்விடுதலையின் முன்னோடியாக தி.த சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் **தத்தை விடு தூது** பாடலில் முன்வைக்கும் கருத்துகளை தொகுத்து நோக்குக.

**அல்லது**

**குற்றால குறவஞ்சியில்** இயற்கை எழில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளவற்றிலுள்ள சிறப்புக்களைத் தெளிவுபடுத்துக.

**(15 புள்ளிகள்)**

5. **தமிழர் பண்பாடு** என்ற கட்டுரையில் பக்தி தொடர்பாக கூறப்பட்டுள்ள விடயங்களைத் தொகுத்து நோக்குக.

**(10 புள்ளிகள்)**

6. **பங்கப் பலனத்து....** என்னும் பாடலில்

(அ) சோழநாட்டின் வளம்,

(ஆ) புகழேந்தி புலவரின் கவித்துவம்

என்பன புலப்புடத்துமாற்றைத் தெளிவுறுத்துக.

**(10 புள்ளிகள்)**

7. சீறி ஓடாத வருங்கால மனிதநதி கவிதையில்,

(அ) வலியுறுத்தப்பெறும் எழுத்தறிவின் முக்கியத்தவம்

(ஆ) அதனை முன்வைப்பதற்குக் கவிஞர் கையாண்ட உத்தி

என்பன பற்றி விளக்குக. **(10 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## தேசிய கல்வி நிறுவகம் - தமிழ்மொழித்துறை

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை) 2020

**தமிழ்மொழியும் இலக்கியமும்** | 22 | T | I, II |

**மாதிரிப் பரீட்சை - 4**

மூன்று மணித்தியாலம்

வாசிப்பு நேரம் மேலதிகமாகப் பத்து நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்றும் விடை எழுதம்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

### தமிழ்மொழியும் இலக்கியமும் - I

**கவனிக்க:**

i. **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

- **தடித்த** எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. “ கொற்றத் தார்க்கு **குரிசில**வ ராரென்று……” இங்கு குரிசில் என்பதன் பொருள்,
   (1) அரசருட் சிறந்தவன் (2) ஆண்களுட் சிறந்தவன் (3) தலைவருட் சிறந்தவன் (4) சிறந்த பெரியார்

2. “காட்டில் வாழும் **பூஜை**யைப் போல்” - பூஜை என்பது,
   (1) பூக்கள் (2) பூனை (3) பசுங்கிளி (4) பெண்

3. “பொய்மைசேர் மதியினிற் புலை **நாத்திகம்** கூறுவர்” - இங்கு நாத்திகம் என்பதன் எதிர்சொல்
   (1) ஆத்திகம் (2) சாத்திரம் (3) வேதம் (4) மந்திரம்

4. “கரவு உறையும் மனத்**தாதை**” - இங்கு தாதை என்பதன் எதிர்பாற் சொல்
   (1) தாய் (2) சகோதரி (3) தம்பி (4) தந்தை

5. “தெண்ணீர்க் **கயத்**துட் சிறுமீன்…….” கயம் என்பதன் பொருள்,
   (1) குதிரை (2) பொய்கை (3) யானை (4) தவளை

- **பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

6. pamphlet, என்ற கலைச் சொற்களின் தமிழ் வடிவம் முறையே,
   (1) பத்தி (2) முகவுரை (3) தன்முனைப்பு (4) துண்டுப்பிரசுரம்

7. உறுப்பு, பூவரும்பு, முட்டை எனும் பல பொருள் தரும் ஒரு சொல்,
   (1) ஐயம் (2) பொறை (3) கரு (4) சினை

8. தோழியர் தொகுதியைக் குறிப்பதற்குப் பொருத்தமற்ற சொல்
   (1) ஆயம் (2) கூட்டம் (3) மன்றம் (4) குழாம்

9. மராட்டி மொழி சொல்லாக அமைவது,
   (1) இலாச்சி (2) அட்டவணை (3) பீரோ (4) துவாய்



kalvi.lk

10. அரசனது நீதி வழுவாத ஆட்சி,

(1) ஊராண்மை (2) பேராண்மை (3) கொடுங்கோன்மை (4) செங்கோன்மை

11. கடை கட்டுதல் எனும் மரபுத்தொடரின் பொருள்,

(1) மனமின்றி இருத்தல் (2) வெல்ல முயற்சித்தல்
(3) முயற்சியை நிறுத்திவிடல் (4) முற்றும் அழிதல்

12. 60 ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா,

(1) வைரவிழா (2) மணிவிழா (3) பொன்விழா (4) அமுதவிழா

13. பின்வருவனவற்றுள் எதிர்பொருள் தரும் சொற்கலான இணைமொழி

(1) இன்பதுன்பம் (2) உற்றார் உறவினர்
(3) உருட்டும் புரட்டும் (4) அக்கம் பக்கம்

14. "மாதவி ஆடல் பாடல்களில் சிறந்தவள்" இங்கு ஆடல் என்பது,

(1) தொழிற்பெயர் (2) வினை (3) பெயர்ச்சொல் (4) செயல்

15. பெயராகவும், வினையாகவும் வரும் சொல்,

(1) எடு (2) உடை (3) ஏடு (4) நில்

16. வேந்தராற் செய்யப்படும் சிறப்பு,

(1) மஞ்சரி (2) அவிசு (3) மாராயம் (4) மெய்க்கீர்த்தி

17. பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு,

(1) தூலம் - சூக்குமம் (2) தமர் - பிறர்
(3) தொகை – விரி (4) தொடர்பு – தொடக்கம்

18. "அடுப்பங்கரையில் ஆம்பி பூப்ப......" எனும் அருஞ்சொற் தொடரினால் உணர்த்தப்படுவது,

(1) வறுமை (2) தூய்மை (3) செம்மை (4) குளிர்ச்சி

19. மிக அழகான பறவை என்பதில் தலைமை உறுப்பாக அமைவது,

(1) அழகானது (2) மிக (3) பறவை (4) ஆகும்

20. எதிர்கால நிகழ்வுகளை அறியும் ஆற்றல் படைத்தவன்,

(1) பிரதிவாதி (2) விகடகவி (3) தீர்க்கதரிசி (4) வாதி

21. முன்னேற்றத்துக்கான முயற்சியில் பின்னடைவு ஏற்படுவதைக் குறிக்கும் பழமொழி,

(1) கோவிற் பூனை தேவரை மதியாது (2) கெடுவான் கேடு நினைப்பான்
(3) சாணேற முழம் சறுக்கும் (4) கெடுவான் கேடு நினைப்பான்

22. பகாப்பதமாக அமையாதது,

(1) ஆடல் (2) நில் (3) காட்சி (4) முயற்சி

23. முள் + செடி என்பதை புணர்த்தினால்,

(1) முட்செடி (2) முற்செடி (3) முள்செடி (4) முற்ச்செடி

24. பூங்குலிழி வந்தாள். இங்கு பூங்குழலி என்பது,

(1) வினைத்தொகை (2) அன்மொழி (3) வேற்றுமை (4) பண்பு

25. நேசம் - நேயம் என்பது,

(1) முதற்போலி (2) கடைப்போலி (3) இலக்கணப்போலி (4)இடைப்போலி


kalvi.lk

26. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் இடம்பெறும் சொல்,

(1) பாற்காரன் (2) பட்டம் (3) புத்தகம் (4) கட்டிடம்

27. மொழி முதலிலும் இறுதியிலும் வரும் வினாவெழுத்து,

(1) யா (2) ஓ (3) ஆ (4) ஏ

28. மக்கள் கூட்டம் திரண்டு வந்தனர் - இதில் இடம்பெற்றுள்ள வழு

(1) திணைவழு (2) பால்வழு (3) எண்வழு (4) இடவழு

29. பன்மை விகுதி பெற்று வராத சொல்,

(1) பல் (2) சூடு (3) பூங்கா (4) செடி

30. பிறவினையாக அமைவது,

(1) வந்தான் (2) திரும்பினான் (3) ஆடினான் (4) படிப்பித்தான்

31. தமிழ்மொழித்தின போட்டி நிகழ்ச்சிகள் தொடர்பான ..................... ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது,

(1) வெள்ளையறிக்கை (2) சுற்றுநிருபம் (3) பிரகடனம் (4) பிரச்சாரம்

32. மலையகத்தின் மூத்த எழுத்தாளரான கே.கணேஸ் பற்றி எழுதுவதில் இவ்வார இலக்கியவளம் பெருமை,

(1) கொண்டது (2) கொள்ளும் (3) கொள்கிறது (4) கொள்கின்றன

33. எழுத்துப் பிழையற்ற சொற்களின் தொகுதி

(1) கலாச்சாரம், பண்பாடு, வழிபாடு
(2) காய்ச்சல், பார்த்தான், முயற்சி
(3) நாகரீகம், ஆராய்ச்சி, தொழிற்சாலை
(4) பௌதீகம், பட்டாங்கு,கைந்நூல்

34. தன்னலம் பேணுவதில் மனிதன் விலங்கு நிலைக்கு,

(1) இகழ்கிறான் (2) இழிந்தான் (3) இகழ்வான் (4) இழிகின்றான்

35. தனது கருத்துக்களை வலுப்படுத்துவதற்காக இலக்கியங்களில் இருந்து ................ காட்டி பேசினார்,

(1) உவமை (2) எடுகோள் (3) கருதுகோள் (4) மேற்கோள்

36. கடும் மழையினால் குளங்கள்,

(1) ஒவ்வொன்றும் நிறைந்தது.
(2) எல்லாம் நிறைந்தன.
(3) ஒவ்வொன்றாக நிறைந்தன.
(4) எல்லாம் நிறைந்தது.

- தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தின் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்;
அமிழ்ந்து பேரிரு ளாமறியா மையில்
அவலமெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி உரைப்பது கேட்டீரோ?

37. இப்பாடலினூடாக கவிஞர் கூற விழைந்த விடயம்

(1) பெண்களின் அறியாமை
(2) பெண்களின் ஆளுமை
(3) பெண்களின் இயலாமை
(4) பெண்களின் அழகு


kalvi.lk

38. திறம்புதல் என்பது

(1) ஏறுதல் (2) இறங்குதல் (3) தவறுதல் (4) பிடித்தல்

39. இப்பாடலில் கருத்துக்கு பொருந்தாத கூற்றைத் தெரிவுசெய்க.

(1) நிமிர்ந்த நடை (2) எவருக்குமே பயப்படாத தன்மை

(3) திடமான ஞானசெருக்கு (4) உழிந்து தள்ளுதல் இல்லாமை

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் வரும் வைப்பு முறையை தெரிவு செய்க.

(ஆ) சேரர், சோழர், பாண்டியர் ஆகியோர் மூவேந்தர் எனப்படுவர்.

(ஆ) இவர்கள் மூவரும் தமிழ் வளர்த்த பெருமைக்கு உரியவர்கள்

(இ) எனினும் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த பெருமை பாண்டியர்க்கே உரியது.

(ஈ) அவர்களால் அமைக்கப்பட்ட தமிழ்ச் சங்கங்கள் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் எனச் சுட்டப்பெறுகின்றன.

(உ) இவற்றுள் கடைச் சங்கமே இன்றுள்ள மதுரையைக் களமாகக்கொண்டு அமையப்பெற்றது.

(1) அ, ஈ, உ, ஆ, இ (2) உ, இ, ஆ, அ, ஈ

(3) உ, ஆ, அ, ஈ, இ (4) அ, ஈ, இ, ஆ, உ

Education கல்வி අධ්‍යාපන


kalvi.lk

## தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020**

**தமிழ்மொழியும் இலக்கியமும் I, II**

| 22 | T | I, II |
|---|---|---|

### மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – II

**தமிழ்மொழியும் இலக்கியமும் - II**

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.
ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) பின்வரும் தொடரை சந்திபிரித்து எழுதுக.
நைவீர லீர்மைந்தீ ரினித் துயரால்

(ii) "நீத்து பூசணிக்காய் போல கொழுத்து கிடந்தது"
இதில் இடம்பெற்றுள்ள அணியை விளக்குக.

(iii) " அறம் செய விரும்பு" இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளை எழுதுக.

(iv) அறை என்ற சொல் பெயராகவும், வினையாகவும் அமையுமாறு தனித்தனியாக இருவேறு வாக்கியங்கள் எழுதுக.

(v) " இந்தப் புத்தகம் இஞ்ச எப்பிடி வந்தது" பேச்சு வழக்கிலுள்ள இவ்வாக்கியத்தை நியம தமிழில் எழுதுக.

(vi) கௌடில்யர் அர்த்த சாஸ்திரம் எழுதினார் எனும் செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

(vii) பார்த்தான் எனும் சொல்லை பகுத்து எழுதுக.

(viii) அறிக்கை எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் யாவை?

(ix) மண்டா என்பது எப்பிரதேச வழக்கு? அது எதனைக் குறிக்கிறது?

(x) அடை மழை பெய்தது
குளங்கள் நிறையவில்லை இத்தனி வாக்கியங்களை பொருத்தமான வகையில் ஒரே வாக்கியமாக மாற்றுக.

**(20 புள்ளிகள்)**


kalvi.lk

**2.** பின்வருவனவற்றுள் **ஒன்றை** தெரிவு செய்து ஏறத்தாழ **250** சொற்கள் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

(i) தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் காரணமாக உலகம் பாரிய அழிவை எதிர்நோக்கியுள்ளது. நாம் சுகாதாரத்துக்கான சுய பாதுகாப்பு முறைகளை முறையாக கடைப்பிடித்தால் எம்மையும் எமது நாட்டையும் பாதுகாக்க முடியும என்பதை வலியுறுத்தி ஒரு **விளக்கக் கட்டுரை**.

(ii) டெங்கு ஒழிப்பு தொடர்பான சிரமதான செயற்றிட்டம் அனைத்து பாடசாலைகளிலும் இடம்பெற்றன. எமது சூழலை சுத்தமாக பராமரிப்பதன் ஊடாக தொற்று நோய்களிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். டெங்கு ஒழிப்பின் அவசியத்தை வலியுறுத்தி ஒரு **சொற்பொழிவு**.

(iii) அரசாங்கம் பாடசாலை மாணவர்களுக்கு பாடபுத்தகங்களை இலவசமாக வழங்கி வருகின்றது. இவ்வாறு வரப்பிரசாதமாக கிடைக்கும் பாடபுத்தகங்களை முறையாக பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதான ஒரு **உரையாடல்**.

(iv) படிப்பில் கெட்டிக்காரனான ராகுலன் தீய நண்பர்களின் சேர்க்கையால் படிப்பை பாதியிலேயே கைவிட்டு கட்டிட தொழிலுக்கு செல்கின்றான். அங்கு தன்னை போன்ற இளைஞர்கள் அவஸ்தைபடுவதை காண்கின்றான். அப்போது தான் கல்வியின் அருமை புரிந்தது. ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தான்........ என்ற கருவை மையமாக கொண்ட ஒரு **சிறுகதை.** **(25 புள்ளிகள்)**

3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை **40 - 45** சொற்களில் அமையுமாறு எழுதுக.

இசைக்குரிய பாடல்கள் எம்மொழியில் இருக்வேண்டும் என்பதைக் கவனிப்போம். இ∴து ஏதுக்கள் இன்றியே எளிதில் உணரத்தக்கதொன்று. மக்களுடைய நாட்டு மொழியில் இருப்பது இன்றியமையாதது. வேற்று மொழியில் அமைந்த பாடல்களைக் கேட்டு எய்தும் இன்பம், இசையின் தனி நிலையில் எய்தும் இன்பத்தினும் சிறந்ததாகாது. வேற்றுமொழிப் பாடல்களும், சாகித்திய சம்பந்தம் இல்லாத இசையும், இசைக் கருவிகளிலிருந்து கேட்கப்படும் கீதமும், ஒத்த தன்மையனவேயாம். சுவைக் கருத்துக்களைத் தன்மயமாக உணர்ந்து அனுபவிப்பதற்குத் தாய் மொழிப் பாடல்களே ஏற்றனவாம். கேட்கும் மக்களுட் பலர் தமக்குரிய மொழிப் பாடற் கருத்துக்களை உணர்தற்கே தகுதி இல்லாதவராய் இருக்கும் இக்காலத்தில், சிறிதும் பொருள் விளங்காத வேற்றுமொழிப் பாடல்கள் அவர்க்கு எவ்வாறு பயன்படும்? சில இசையரங்குகளில், பொருள் விளக்கம் இல்லாத வேற்றுமொழிப் பாடல்களைக் கேட்டுத் தலையசைக்கும் குழுவைக் காண்கின்றோம். அக்குழுவிற் பலர், இசையின் இயல்பையோ, பாடற் பொருளையோ அறியும் தகுதியுடையவராக இருக்கமாட்டார். ஏதோ இசைக் கலையில் தமக்கு அறிவு உண்டென்று பிறர் மதிக்கவேண்டும் என்னும் குறிக்கோளே, அத்தகைய தலைநடுக்கத்திற்குக் காரணமாகும்.

**(10 புள்ளிகள்)**

4. பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மீசைக்கு விதை தூவி இளமை மழை பெய்ய
பயிர் முளைத்த பருவம்
ஏதோ அலுவலுக்கு வந்திருந்தான்
கையொப்பம் இது என்றேன்
இடது கையின் பெருவிரலை ஊன்றி
வெட்கி சிரித்தான்
அது ஒரு செத்த சிரிப்பு
இப்பகுதி யாரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது?

(அ) ''பயிர் முளைத்த பருவம்'' என்பதால் குறிப்பிடப்படும் விடயம் யாது?

(ஆ) கவிஞரின் ஆதங்கம் இக்கவி வரிகளில் எவ்வாறு வெளிப்படுகின்றது?
''அது ஒரு செத்த சிரிப்பு'' என்பதால் யாது விளங்கிக் கொள்கின்றீர்கள்?

(இ) பின்வரும் சொற்களுக்கு பொருள் தருக.
(i) அலுவல் (ii) இளமை **(10 புள்ளிகள்)**


kalvi.lk

5. உமது பாடசாலையில் கடந்த வாரம் இடம்பெற்ற முத்தமிழ் விழா பற்றி **100** சொற்களில் **அறிக்கை** ஒன்று எழுதுக.

**அல்லது**

தவிர்க்க முடியாத காரணத்தால் வேறு மாகாணம் ஒன்றுக்கு இடம்பெயர்ந்து புதிய பாடசாலை ஒன்றில் இணைந்து கொண்ட ஒருவன், தான் முன்பு கற்ற பாடசாலை அனுபவங்கள் பற்றி விபரித்து எழுதிய **100** சொற்களிலான ஒரு **நட்புமுறைக் கடிதம்**.

**(15 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන


kalvi.lk

## தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை
## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020
## தமிழ்மொழியும் இலக்கியமும் (22)

### மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – III

**தமிழ்மொழியும் இலக்கியமும் - III**

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.
ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

(i) " யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்

(அ) இங்கு யானை பற்றிய விவரிப்பின் மூலம் வலியுறுத்தப்படும் நீதி யாது?

(ஆ) நாய் பற்றிய விவரிப்பின் மூலம் வலியுறுத்தப்படுவது யாது?

(ii) “ அன்னப்பேடை சிறை இலது ஆய் கரை துன்னிற்று
என்னவும் வந்தது தோணியே”

(அ) இங்கு பயின்றுள்ள அணி யாது?

(ஆ) துன்னிற்று என்பதன் பொருள் யாது?

(iii) “ ஏர் தழைக்க வேணும் தம்பிரானே
எல்லோரும் வாழவேணும் தம்பிரானே”

(அ) தம்பிரான் எனப்படுபவர் யார்?

(ஆ) இவ்வரிகளில் புலப்படும் விழுமியப்பண்பு யாது?

(iv) போத மூன்று நலஞ்செயு நடு
புவன மூன்று வலஞ்செயு நாடு

(அ) இங்கு போதம் மூன்று என சுட்டிக்காட்டப்படும் மூவகை வழிபாடுகளும் யாவை?

(ஆ) இவ்வரிகளில் புலப்படும் நாட்டின் சிறப்புகள் யாது?

(v) “சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே”

(அ) சுரர் எனப்படுபவர் யார்?

(ஆ) கோடு என்பதன் பொருள் என்ன?

(vi) “பிற உயிர்களை தம் உயிரில் கண்ட சமநெறி செல்வர் அவர்”

(அ) இங்கு அவர் என குறிப்பிடப்படுபவர் யார்?

(ஆ) அவரின் இலட்சியம் யாது?

(vii) “ பொய்படும் ஒன்றோ புனைப்பூணும் கையறியார்
பேதை வினைமேல் கொளின்”

(அ) குறளை கொண்டு கூட்டி எழுதுக.

(ஆ) பேதமை என்றால் என்ன?


kalvi.lk

(viii) ''நீவீர் ஐவரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்காலம் அளித்தீர் என்றாள்''

(அ) ஐவீர் என குறிப்பிடப்படுவோர் யாவர்?

(ஆ) இங்கு அகலிடம் எனப்படுவது யாது?

(ix) "ஏன்கா ராவியில மட்டும் பக்குல் கத்துது"

(அ) பக்குல் என்றால் என்ன?

(ஆ) இவ்வரிகள் இடம்பெற்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

(x) " செய்வரால் இனம் உகளும்"

(அ) இப்பாடல் இடம்பெறும் இலக்கியம் எது?

(ஆ) பொரல் என்பதன் பொருள் என்ன? **(20 புள்ளிகள்)**

2. (i) சூழமேதி யிறங்குத் துறையிற்
சொரியும் பாலை பருகிய வாளை
கூழை வாச பலாவினிற் பாய
கொழும்ப லாக்கனி வாளையிற் சாய
வாழை சாய்ந்தொரு தாழையிற் றாக்க
வருவிருந்து குபசரிப் பார்ப்போல்
தாழை சோறிட வாழை குருத்திடுஞ்
சந்திரர் சூடர்தென் னாரிய நாடே

(அ) இப்பாடலில் விலங்குகள் பற்றி விவரிக்கப்படுவன யாவை?

(ஆ) தாவரங்கள் பற்றி குறிப்பிடப்படுபவை யாவை?

(ii) கழியும் பிறை பொருட் டள்ளி நன்னூலாங் கடலினுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால்கொண்டு வண்கவிதை
பொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கிமின்னிப்
பொழியும் படிக்குக் கவிகாள மேகம் புறப்பட்டதே

(அ) இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணியை விளக்குக.

(ஆ) காளமேகப் புலவரின் கவித்திறன் எத்தகையது?

(iii) விதியை நோவர், தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்,
சதிகள் செய்வர், பொய்ச்சாத்திரம் பேசுவர்,
சாதகங்கள் புரட்டுவர் பொய்மைசேர்
மதியி னிற்புலை நாத்திகங் கூறுவர்,
மாய்ந்தி டாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்,
கண்ணி லாதவர் போலத் திகைப்பர் காண்.

(அ) தாம் விரும்பியதை அடைய முடியாதவர்கள் எவ்விதம் நடந்து கொள்வர்?

(ஆ) இப்பகுதியில் வந்துள்ள அணியைக் குறிப்பிட்டு விளக்குக?

(iv) பனிக்கூட்டம் விரட்டி வரும் பகலவனின் வீரம்
பசிக்கூட்டம் விரட்டிவரும் பண்புமிகு ஈரம்
கனிக்கூட்டம் அசைந்தாடும் கனிமரத்தின் சோலை
கருமுகில்கள் தவழவரும் கார்கால மாலை

(அ) கவிஞரின் மனதை குதூகலம் கொள்ள வைத்த நிகழ்வுகள் யாவை?

(ஆ) இங்கு இயற்றை அழகு எவ்விதம் வர்ணிக்கப்பட்டுள்ளது?


kalvi.lk

(v) ‘‘தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை
வானுறவோங்கி வளம்பெற றவளரினும்
ஒருவற்கிருக்க நிழலாகாதே
தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்கயத்துட் சிறுமீன் சினையினும்

(அ) பனை பற்றி ஆசிரியர் விவரிப்பன யாவை?

(ஆ) ஆலம் விதையின் சிறுமையை எடுத்துரைக்க ஆசிரியர் கையாண்ட உத்தி யாது?

**(20 புள்ளிகள்)**

3. திருக்குறள் பேதைமை எனும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவற்றை விளக்குக.

(அ) பேதையின் இயல்புகள்

(ஆ) பேதையின் நட்பு

(இ) பேதையின் தொழில் பற்றி விளக்குக.

அல்லது

இலட்சியமும் சமநோக்கும் என்ற கட்டுரையை அடிப்படையாக கொண்டு,

(அ) இலட்சிய வாழ்வினால் நாம் பெறும் பயன்கள் யாவை?

(ஆ) இலக்கியங்கள் எவ்விதம் இலட்சியங்களை எடுத்தியம்புகின்றன. **(15 புள்ளிகள்)**

4. ‘‘அற்றைத்திங்கள்’’ எனும் நாடகத்தில் புலனாகும்,

(அ) புலம்பெயர் மக்களின் துயரம்

(ஆ) பறம்பு மலையின் சிறப்பு என்பன பற்றி விளக்குக.

அல்லது

‘‘கங்கைக்காண் படலத்தை” அடிப்படையாகக் கொண்டு,

(அ) கோசலை (ஆ) சுமித்திரை

(இ) கைகேயி ஆகியோர் பரதனால் குகனுக்கு அறிமுகப்படுத்தப்படுமாற்றை விளக்குக.

**(15 புள்ளிகள்)**

**5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றை தெரிவு செய்து விடை எழுதுக.**

5. நாட்டார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு

(அ) இளந்தரிகள் அரிவி வெட்டும் விதம் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டுள்ளது?

(ஆ) காதல் பாடலில் தலைவி மீது தலைவன் கொண்டுள்ள அன்பு புலப்படுமாறு?

**(10 புள்ளிகள்)**

6. “குற்றாலக் குறவஞ்சி” எனும் பகுதியில்,

(அ) நாட்டு வளம்

(ஆ) சிவனின் பெருமை என்பன முன்வைக்கப்பட்டுள்ள விதத்தை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

7. “இனி நினைந்து” எனும் புநநானுற்று செய்யுளில்,

(அ) இளமைப் பருவத்தினதும்,

(ஆ) முதுமைப் பருவத்தினதும் இயல்புகள் வெளிப்படுத்தும் விதத்தை விவரிக்குக.

**(10 புள்ளிகள்)**


kalvi.lk

தேசிய கல்வி நிறுவகம் - தமிழ்மொழித்துறை

கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை) 2020

தமிழ்மொழியும் இலக்கியமும் | 22 | T | I, II

மாதிரிப் பரீட்சை - 5

மூன்று மணித்தியாலம்

வாசிப்பு நேரம் மேலதிகமாகப் பத்து நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்றும் விடை எழுதம்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## தமிழ்மொழியும் இலக்கியமும் - I

**கவனிக்க:**

i. **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.

ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

• **தடித்த** எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. 'பரிபவம் என்பது பிறரால் பட்டால் அன்றோ' இங்கு **பரிபவம்** என்பது

   (1) பரிதாபம் (2) உரிமை (3) அவமானம் (4) சமாதானம்

2. வெண்ணிற மேகங்கள் நிலவை மூடிமூடி ஆலிங்கனம் செய்தன. இங்கு ஆலிங்கனம் என்பது

   (1) தழுவுதல் (2) மறைத்தல் (3) ஊடறுத்தல் (4) பிரகாசப்படுத்தல்

3. ‘‘நன்றேர்ப் பொய்கை ஊரன் கேண்மை செய்து இன்புற்றனெம்’’ இங்கு கேண்மை என்பதன் எதிர்க்கருத்து

   (1) கொடுமை (2) நட்புரிமை (3) பகைமை (4) வள்ளண்மை

4. ‘‘அறந்தானே யென்கின்ற அயல் நின்றாள் தனை நோக்கி’’ இங்கு அறம் என்பதன் எதிர்ப்பதம்

   (1) புறம் (2) தருமம் (3) மறம் (4) திறம்

5. பாணன் சீறியாழை மீட்டிப் பாடல் பாடினான். இங்கு பாணன் என்பதன் எதிர்ப்பாற் சொல்

   (1) குறத்தி (2) அணங்கு (3) தேவராட்டி (4) பாடினி

• பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

6. அரவம் என்ற சொல்லுக்குரிய பொருளைத் தராத சொல்

   (1) ஒலி (2) பாம்பு (3) சிலம்பு (4) ஆபரணம்

7. monitoring மூலம் தேர்தலில் நம்பகத்தன்மையை உறுதி செய்தார். இங்கு monitoring என்ற சொல்லுக்குரிய கலைச்சொல்

   (1) கருத்தரங்கு (2) கண்காணித்தல் (3) தொகைமதிப்பு (4) வாக்களித்தல்

8. உயிர் தரும் மருந்து என்ற தொடருக்குரிய ஒரு மொழியாக அமைவது

   (1) காயசித்தி (2) சஞ்சீவி (3) கற்பகதரு (4) அமுதசுரபி



kalvi.lk

9. இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை என்ற பழமொழியின் கருத்து

(1) உண்மை சொல்லிக் கெட்டவர் எங்குமில்லை
(2) ஈகை செய்து கெட்டவர் எங்கும் இல்லை
(3) பொறுமை காத்து கெட்டவர் எங்கும் இல்லை
(4) சேமித்து கெட்டவர் எங்கும் இல்லை

10. வனிதா படித்தாள் என்பது எழுவாய்த் தொடர் அதுபோல படித்தாள் வனிதா என்பது

(1) வினைமுற்றுத்தொடர் (2) எழுவாய்த்தொடர்
(3) பெயரெச்சத்தொடர் (4) வினையெச்சத்தொடர்

• பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

11. தென்னையின் இலை ஓலை என்பதுபோல கமுகின் இலை

(1) மடல் (2) தாள் (3) கூந்தல் (4) ஓலை

12. ''தோள் கொடுத்தல்'' எனும் மரபுத்தொடரின் கருத்து

(1) தோளைக்கொடுத்தல் (2) கடன் கொடுத்தல் (3) உதவுதல் (4) ஏமாற்றுதல்

13. பன்மை விகுதி பெறமுடியாத சொல்

(1) அழுகை (2) உரிமை (3) குணம் (4) ஓடு

14. ஒருவர் தன் கொள்கையில் உறுதியாக நிற்பதை குறிக்கப் பயன்படும் தொடர்

(1) பற்றுறுதி (2) உடும்புப்பிடி (3) வெள்ளிடைமலை (4) தாமரை இலை தண்ணீர்

15. பாரதியார் எட்டயபுரத்தில் பிறந்தார் அவர் பல கவிதைகளைப் பாடினார். இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற மாற்றுப்பெயர்

(1) பாரதியார் (2) எட்டயபுரம் (3) அவர் (4) கவிதைகள்

16. பின்வருவனவற்றுள் பின்னொட்டு ஏற்காத சொல்

(1) அநீதி (2) குற்றவாளி (3) புதுமை (4) மனையியல்

17. தூதுவனை அரசன் புறநகர் பகுதிக்கு அனுப்பினான். இங்கு புறநகர் என்பது

(1) இலக்கணமுடையது (2) இலக்கணப்போலி (3) குழூஉக்குறி (4) மரூஉ

18. நீதிபதி வழக்கை விசாரித்து தீர்ப்பைக் கூறினார். இதில் செயற்படுபொருள்

(1) நீதிபதி (2) வழக்கு (3) விசாரித்து (4) தீர்ப்பு

19. இரு பெயரொட்டுப் பண்புத் தொகைக்கு உதாரணம்

(1) வெண்டாமரை (2) மதிமுகம் (3) கவிஞர் வாலி (4) சேர சோழ பாண்டியர்

20. பகுபத உறுப்புக்களில் காலம் காட்டும் உறுப்பு அல்லாதது

(1) விகுதி (2) இடைநிலை (3) சாரியை (4) பகுதி

• பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21. பின்வருவனவற்றில் செயற்படுபொருள் குன்றிய வாக்கியம்

(1) நண்பனை நம்பி பயணத்தை ஆரம்பித்தான்
(2) அவன் மலையில் வேகமாக ஏறினான்
(3) சிறுகதைக்கு வர்ணனைச் சிறப்பைக் கொடுக்கும்
(4) விதிகளை மீறி வண்டியை ஓட்டாதே


kalvi.lk

22. பின்வருவனவற்றுள் போர்த்துக்கேய மொழிச்சொல் அல்லாதது

(1) கடதாசி (2) அலுமாரி (3) யன்னல் (4) சாவி

23. உன் வீடு என்பது

(1) வினைத்தொகை (2) வேற்றுமைத்தொகை (3) பண்புத்தொகை (4) உவமைத்தொகை

24. பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழைகளற்ற வாக்கியத்தைத் தெரிவுசெய்க.

(1) பன்ரண்டு பேர் மட்டுமே சமூகமளித்தனர்

(2) பன்னிரண்டு பேர் மட்டுமே சமுகமளித்தனர்

(3) பன்னிரண்டு பேர் மட்டுமே சமூகமளித்தனர்

(4) பன்ரண்டு பேர் மட்டுமே சமுகமளித்தனர்

25. அறிவில்லாதவன் என்பது

(1) உவமையணி (2) உருவக அணி (3) சிலேடையணி (4) வஞ்சகப்புகழ்ச்சியணி

26. கொரனா நோய் காரணமாக நாளைமுதல் வெளிநாட்டிலிருந்து வரும் ஒவ்வொரு பயணியும்

(1) சோதிக்கப்பட்டார்கள் (2) சோதிக்கப்படுகிறார்கள்

(3) சோதிக்கப்படுவார்கள் (4) சோதிக்கப்பட்டுள்ளார்கள்

27. அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்காது என நிதியமைச்சர் ………………. அளித்தார்

(1) உத்தரவாதம் (2) விதப்புரை (3) பரிந்துரை (4) ஆணை

- புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

28. கொரோனா தாக்கத்தால் மாவட்டத்தின் ஒரு பகுதி ………………. வைக்கப்பட்டது.

(1) தாமதித்து (2) நிறுத்தி (3) முடக்கி (4) ஒத்தி

29. பாடசாலைகள் மூடப்பட்டதால் ……………………………. மூலம் ஆசிரியர்கள் வீட்டிலிருந்து மாணவர்கட்குக் கற்பித்தனர்.

(1) நிகழ்நிலை (2) தொலைபேசி (3) யூடியூப் (4) புலனம்

30. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது சொத்துக்களை ………………… செய்யும்படி தேர்தல் திணைக்களம் கோரியது.

(1) விற்பனை (2) பிரகடனம் (3) தீர்வை (4) நிர்வாகம்

31. அரச வேலை வாய்ப்புக்களை ……………. மூலம் அறிந்துகொள்ள முடியும் என அரசாங்கம் அறிவித்தது.

(1) சுற்றறிக்கை (2) அறிக்கை (3) வர்த்தமானி (4) பத்திரிகைகள்

32. சந்தேக நபராக இருந்தபோதும் நோய்ச் சிகிச்சைக்காக வெளிநாடு செல்வதற்கு கரனுக்கு …………………….. வழங்கப்பட்டது.

(1) விடுதலை (2) பிணை (3) தண்டனை (4) பிடிவிறாந்து

- பின்வரும் வாக்கியங்களின் முன்பகுதிக்கு பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.

33. யாவருடைய கையிலும் கைத்தொலைபேசியின் ஆக்கிரமிப்புக் காணப்படுவதால் தந்திச்சேவை

(1) ஒழிந்துவிட்டது (2) குறைந்துவிட்டது

(3) குறைந்து கொண்டு போகிறது (4) சில இடங்களில் மட்டும் இருக்கிறது


kalvi.lk

34. நேற்று பலத்த மழை பெய்த போதிலும்

(1) பெருஞ் சேதங்கள் ஏற்பட்டன (2) பெருஞ் சேதங்கள் ஏற்படமாட்டா

(3) பெருஞ் சேதங்கள் ஏற்படவில்லை (4) உயிராபத்துக்கள் நிகழ்ந்தன

35. இந்துக் கல்லூரியில் முதலாம்தர மாணவர்களை வரவேற்கும் …………….. இடம்பெற்றது.

(1) ஆரம்பவிழா (2) வித்தியாரம்பம் (3) வரவேற்புவிழா (4) கால்கோள் விழா

36. அவனும் உன்னுடன் சென்றால்தான் அவர் அதை நம்பிக்கையுடன்

(1) ஒப்படைத்தார் (2) ஒப்படைத்தனர்

(3) ஒப்படைப்பார் (4) ஒப்படைத்தார்கள்

- தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

இரவினில் உலகினை மறைத்து வைத்திருந்த
இருளினைத் துரத்தியே பிடிப்பது போல
கிரகணங்கள் என்னும் பல கரங்களை நீட்டி
கீழ்த்திசை நின்று மெல் மெல் எனக் கிளம்பி
தரும் எரிதிரன் என தாமிரத்தால் செய்
திரு உறும் உலகினர் மிகழ்வுற வந்து
செங்கதிரவன் உதயம் செய்கின்றானே.

37. இருள் எதனை மறைத்து வைத்திருக்கின்றது?

(1) செங்கதிரவன் (2) உலகம்
(3) மக்கள் (4) கீழ்த்திசை

38. சூரியனது பகையாகவும் கரமாகவும் உருவகிக்கப்படுவன முறையே?

(1) உலகு, இருள் (2) பனி, எரிதிரள் (3) பனி, கிரணங்கள் (4) கிரகணங்கள், இருள்

39. இப்பாடலின் கருத்துக்குப் பொருந்தாத கூற்றைத் தெரிவுசெய்க.

(1) சூரியன் இருளைப்பிடித்து கிரகணங்களை நீட்டுகின்றான்.
(2) சூரியன் எரிதிரள் போலத் தோற்றமளிக்கின்றான்.
(3) சூரியன் உலகத்து இருளைப் பிடித்து வைத்திருக்கின்றான்.
(4) சூரிய உதயத்தின் மூலம் மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்.

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெறவைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும் அதற்கேற்ப பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

(அ) கடன் படாதவர்கள் மிகக்குறைவு

(ஆ) பின் கடனைத் தீர்க்கமுடியாது பலதுன்பங்களை அனுபவிப்பர்

(இ) நாட்டு மக்கள் பலருக்கு கடன்படும் பழக்கம் அதிகம்

(ஈ) அதன் விளைவாக வேறு கடன்பெறுவது எப்படி என மேலும் சிந்திப்பர்

(உ) சுபகருமங்களில் பிறர் செலவு செய்வதற்கு ஒப்பாக செலவுசெய்ய எண்ணி கடன் வாங்குவர்

(1) இ, அ, உ, ஆ, ஈ (2) ஆ, ஈ, இ, உ, அ

(3) உ, ஆ, ஈ, இ, அ (4) இ, அ, ஆ, உ, ஈ


kalvi.lk

# தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை

**கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020**

**தமிழ்மொழியும் இலக்கியமும் I, II** | 22 | T | I, II |

## மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – II

**தமிழ்மொழியும் இலக்கியமும் - II**

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.
ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

i. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்து எழுதுக.
"உழைத்துண்ணாமற் சேமித்து மாயுமிவர்க் கறிவுரை கூறுங்கள்"

ii. "கூடு" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதான இரு வாக்கியங்கள் எழுதுக.

iii. "நேற்று கொழும்பில் கடுமையான இடிமுழக்கத்துடன் மழை பெய்தது" இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.

iv. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.
பிரசித்தி பெற்ற நீதிமன்ற வழக்கறிஞர் கைதிகளுக்காக வாதாடி விடுதலை வாங்கிக் கொடுத்தார்.

v. நான் இணையத்தின் மூலம் பத்திரிகைகள் வாசித்தேன். இச்செய்வினை வாக்கியத்தை செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

vi. திலகன் சிங்கள மொழி பேசுவதில் வல்லவர்
திலகன் தமிழ் மொழி எழுதுவதில் வல்லவர்
மேற்படி தனி வாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்குக.

vii. நோயெதிர்ப்பு சக்தி குறைவானால் மனிதர்களுக்கு கொரோனா நோய் தொற்றும் வாய்ப்பு ஏற்படும் என்பதனை விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். இவ்வாக்கியத்தின் தலைமைத் தொடரையும், சார்புத் தொடரையும் எழுதுக.

viii. அறிக்கைக்கான சட்டகம் ஒன்று ஒழுங்கற்று தரப்பட்டுள்ளது அவற்றை ஒழுங்குபடுத்தி எழுதுக.

வரவேற்புரை, அறிமுகம், பிரதம விருந்தினர் உரை, தலைப்பு, இடம், காலம், நேரம், ஆரம்பம்

ix. "நடந்தனன்" என்ற சொல்லின் பகுபத உறுப்புக்களைக் குறிப்பிடுக.

x. "பொருட்டு" என்ற உருபுக்கு இணையாகப் பயன்படுத்தக்கூடிய இரு சொல்லுருபுகளைக் குறிப்பிடுக.

**(20 புள்ளிகள்)**


kalvi.lk

2. பின்வருவனவற்றுள் **ஒன்றைத்** தெரிவுசெய்து **250** சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.

(i) இன்று கொரோனா தாக்கத்தினால் பல அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. நமது நாட்டிலும் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயத்தரப்பின் பயிர்ச் செய்கையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், வியாபாரிகள் எனப் பலதரப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எதிர்காலத்தில் இப்பாதிப்புக்கள் ஏற்படாதவாறு எவ்வாறு நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற பொருளில் ஒரு **விளக்கக்கட்டுரை**.

(ii) வருடந்தோறும் சுற்றாடல் தினம் கொண்டாடப்படுகின்றது. சூழல் பாதுகாப்பில் உயிர்த்துடிப்பான பங்காளிகளாக உலகில் வாழும் அனைவரும் பங்காளிகளே. எனவே "சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம்" என்ற பொருளில் **மேடைப்பேச்சு**.

(iii) இன்றைய சூழலில் கல்வியானது இலத்திரனியல் ஊடகங்களினூடாக குறிப்பாக இணையம் தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் பெரும்பாலும் நடைபெறுகின்றது. எனினும் நேரடியான வகுப்பறைக் கல்வியே மாணவருக்கு உகந்தது என வாதிடும் சாராரும் எம்மிடையே உள்ளனர். எனவே இலத்திரனியல் ஊடகத்தினூடாகப் பெறப்படும் அறிவே சிறந்தது என வாதிடும் ஒருவருக்கும் நேரடியான வகுப்பறையினூடு பெறப்படும் அறிவே சிறந்தது என வாதிடும் இன்னொருவருக்குமிடையிலான **உரையாடல்**.

(iv) "உதயன் அந்த ஊருக்கு வந்து சேர்ந்தபோது, அந்த ஊர் அவன் முன்னிருந்த ஊர் போல் இருக்கவில்லை. தெருவிளக்குகள் இல்லை, பாதைகள் சீரில்லை, உருப்படியான வீடுகள் இல்லை, எங்கும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை, தண்ணீர் எடுக்க பல மைல் தூரம் சென்று வரவேண்டியநிலை. அந்த ஊரை உருவாக்கி இந்த நிலைக்குக் கொண்டு வர அவன்பட்ட பாடுகள் எண்ணிலடங்கா" எனத் தொடங்கும் ஒரு **சிறுகதை**.

**(25 புள்ளிகள்)**

3. பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை **40 – 45** சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.

ஒரு இனத்தின் சிறப்புக்கும் பெருமைக்கும் கட்டியம் கூறி நிற்பவை அதன் பண்டைய இருப்பை வெளிப்படுத்தும் சான்றுகளாகும். பழம்பெருமை பேசிக்கொண்டிருப்பதை விட அப்பெருமையை தக்க சான்றுகளுடன் அம்பலப்படுத்துவதே முக்கியமானது. தமிழின் மொழியிலே தமிழ் பெருமையைப் பறைசாற்றுகின்ற பழம்பெரும் பொக்கிசங்களாக பண்டைய இலக்கியங்கள், இலக்கண நூல்கள் திகழ்கின்றன. இவை எமது பண்டைய பண்பாடு, சமயம், வரலாறு மற்றும் விழுமியப் பண்புகளை அறிந்துகொள்ளவும் அவற்றைப் புரிந்து செயற்படவும் ஏற்றவகையில் மிளிர்கின்றன. ஒரு சமுதாயம் எவ்வாறு வாழவேண்டும்? எவ்வாறு வாழக்கூடாது? என்பவற்றை அறநெறியோடு எடுத்துரைப்பனவாகவும், தமிழரின் பண்டைய காதலையும் வீரத்தையும் தலைநிமிர்ந்து கூறுவனவாகவும், இரசனைமிக்க இயற்கைச் சொற்களால் எழில்படுத்தி இரசிக்கச்செய்வனவாகவும், வித்துவத்தின் மேன்மையை வெளிப்படுத்துவனவாகவும் இலக்கியங்களுக்கு வரம்பும் வரையறையும் வகுத்த இலக்கியங்களாகவும் இவற்றைக் காணலாம். எமது தாய்மொழியாம் தமிழ்மொழியின் பொக்கிசங்களாக மொழிச்சிறப்புக்கு செம்மை தருவனவாகவும் திகழ்கின்ற இந்நூல்களைக் கற்பதும், பேணிப் பாதுகாப்பதுவும் அவை கூறும் நற்பண்புகளுக்கேற்ப நடப்பதுவும் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரதும் கடமை என்பதை மறந்துவிடலாகாது. மலையளவுள்ள எம் கலை, பண்பாட்டு விழுமியச் சான்றுகளில் தினையளவு திருடப்பட்டாலும் அதற்காகக் குரல் கொடுக்க வேண்டியதும் எமது கடமையே என்பதை நாம் நினைவிற் கொள்வோம்.

**(10 புள்ளிகள்)**


kalvi.lk

4. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

''உண்மையில் மாணவனுக்கு நான் பரீட்சைகள் செய்வதற்கு உள்ளாகியிருக்கின்றேன்'' என்று தோன்றத் தொடங்கியதுமே இன்பமனைத்தும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போகின்றது. எனவேதான் சிறு குழந்தைகளுக்கு விளையாட்டு, கலைவிழா போன்றன சிறந்த உடற்பயிற்சி, மனமகிழ்ச்சி என்று சொல்லப்படுவதன் இரகசியமும் இதுவே. விளையாட்டால் உடற்பயிற்சி செய்கிறோம் என்ற எண்ணம் இருப்பதில்லை. விளையாட்டில் ஈடுபடுகையில் அக்கம் பக்கத்திலுள்ள எதுவுமே தெரிவதில்லை குழந்தைகள் தம்மை மறந்து அதிலேயே ஆழ்ந்துபோய் தாம் வேறு அதுவேறு என்றில்லாது அதனோடு ஐக்கியம் பெற்றுவிடுகிறார்கள். உடலின் நினைவே இருப்பதில்லை. பசி, தாகம், களைப்பு, நோவு என்ற உணர்வு அப்போது எதுவுமே தோன்றுவதில்லை. விளையாட்டென்றால் இன்பம், பொழுதுபோக்கு என்றாகி விடுகின்றது. இவ்வாறே எல்லா வகைக் கற்றலிலும் பொருந்துமாறு செய்யவேண்டும். கல்வி என்பது ஒரு கடமை என்ற இயற்கைக்கு மாறான பாவனை எனக்கொள்வதை விட கல்வி என்றால் இன்பம்என்ற இயற்கையான உற்சாகம் நிரம்பிய பாவனையே காணப்படுகின்றது. கல்வி இன்பமானது என்று கொள்வது இருக்கட்டும். கல்வி என்பது கடமை என்ற எண்ணமே இன்று பெரும்பாலும் குழந்தைகளிடம் காணப்படுகின்றது. இன்றைய மாணவர்களிடம் அடிமைக்குரிய ஒரே பாவனையான கல்வி என்பது தண்டனை என்ற எண்ணமே பரவியிருக்கிறது.

i. மேலே தரப்பட்ட உரைப்பகுதிக்கு ஓர் தலையங்கம் இடுக.

ii. மாணவர்கள் கல்வி இன்பத்தை எப்போது இழக்கின்றனர்?

iii. எப்போது மாணவர் தம்மை மறந்து கற்கின்றனர்?

iv. உடற்பயிற்சியை விளையாட்டாக்கினால் நிகழ்வதென்ன?

v. கல்வியைப் பற்றிய இன்றைய மாணவர்களின் எண்ணம் என்ன?

**(10 புள்ளிகள்)**

5. இன்று இலங்கையில் உள்ள மதங்களுக்குரிய பல்வேறு அறநெறிப் பாடசாலைகள் உள்ளன. ஞாயிறு தோறும் நடைபெறும் இப்பாடசாலைகளில் மாணவர்கட்கு கல்வி புகட்டும் அறநெறி ஆசிரியர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். ஒரு கிராமத்தின் நலன்புரி உத்தியோகத்தர் என்று உம்மைக் கருதி இவ் ஆசிரியர்க்குரிய கௌரவத்தையும் மேலும் இவர்களுக்கு தேவையான காப்புறுதிச் சேவைகள், வாழ்க்கை மேம்பாட்டிற்கான உதவிகளையும் வழங்குமாறு கேட்டு இலங்கையின் மதவிவகார அமைச்சருக்கு ஒரு **விண்ணப்பக் கடிதம்** எழுதுக.

**அல்லது**

முகக் கவசம் அணிதல் கைகளை சவர்க்காரமிட்டு அல்லது கை சுத்திகரிப்பான் மூலம் கழுவுவதால் கொரோனா நோயிலிருந்து பாதுகாப்புப்பெற முடியும். எனவே மேற்படி விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் **100** சொற்களில் ஒரு **துண்டுப் பிரசுரம்** எழுதுக.

**(15 புள்ளிகள்)**


kalvi.lk

## தேசிய கல்வி நிறுவகம் - தமிழ் மொழித்துறை
## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரண தரம்) 2020
## தமிழ்மொழியும் இலக்கியமும் (22)

### மாதிரிப் பரீட்சை வினாப்பத்திரம் பகுதி – III

**தமிழ்மொழியும் இலக்கியமும் - III**

**கவனிக்க:**

i. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாப் பத்திரத்திற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

ii. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

1. சுருக்கமான விடை எழுதுக.

i. ''விசேஷம் மூன்றும் குலாவுள்ள நாடு
போதம் மூன்றும் நலம் செயும் நாடு''

(அ) விஷேசம் மூன்றும் எவை?

(ஆ) போதம் என்பவை யாவை?

ii. தமிழ் நாட்டில் சினிமா வளராததற்கு முக்கிய காரணம் அது நாடகத்திற்கு அடிமைப்பட்டு கிடந்ததாகும்.

(அ) சினிமாவுக்கும் நாடகத்திற்குமிடையேயான வேறுபாடுகள் 2 தருக

(ஆ) மேற்தரப்பட்ட கூற்றுக்கு சார்பான 2 கருத்துக்களைத் தருக.

iii. இலக்கிய இரசிகர்களுக்கும் இலக்கிய விமர்சகர்களுக்கும் ''அத்திறம் நிற்க'' என்னும் இலக்கிய மகாவாக்கியம் சாந்தியளிப்பதாக''

(அ) அத்திறம் நிற்க என்ற கூற்று எவர்களுடைய சிறப்பை ஒப்பிடுவதற்காக கூறப்பட்ட மகா வாக்கியமாகும்?

(ஆ) ''அத்திறம் நிற்க'' என்ற கூற்றைக் கூறியவர் யார்?

iv. ''அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில் எந்தையுமுடையேம்
எம் குன்றும் பிறர் கொளார்''

(அ) இப்பாடல் வரி இடம்பெறும் சங்கநூல் எது?

(ஆ) எந்தை, எம்குன்று எனக்குறிப்பிடப்படுபவை எவை?

v. ''பரிவுடன் மற்று இவை கூறும் பவன குமாரனை மலர்க்கை பணிந்து நோக்கி''

(அ) இங்கு பவளகுமாரன் எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

(ஆ) மலர்க்கை பணிந்து நோக்கியவன் யார்?

vi. ''வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும் மெலிந்த பிறைக்கும் வழிபோல''

(அ) கரும்பிறை எனக் குறிப்பிடப்படுபவன் யார்?

(ஆ) மெலிந்தப் பிறைக்கும் என்பதில் ''அப்பு'' எனக் குறிப்பிடப்படுவது எது?

vii. ''வளந்தரிவி வெட்டும் இளந்தாரி மாரை நாவூறு வராமற் காரும் ஐயனாரே''

(அ) இதில் இளந்தாரிகள், காரும் என்ற பேச்சு வழக்குச் சொற்களை நியமத் தமிழில் எழுதுக.

(ஆ) நாவூறு என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?


kalvi.lk

viii. சிலப்பதிகாரமும், மணிமேகலையும், தேம்பாவணியும், சீறாப்புராணமும் தத்தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டையே மிகுதியாக விளக்கியுள்ளது.

(அ) மேற்கூறப்பட்ட நூல்களை பின்வரும் சமயத்தின் அடிப்படையில் வகைப்படுத்துக.

(i) கிறிஸ்தவம் (ii) பௌத்தம் (iii) இஸ்லாம் (iv) சமணம்

(ஆ) தமிழ்ப்பண்பாடு என்ற கட்டுரையை எழுதியவர் யார்?

ix. தன் மெய்யை நிற்பது ஆக்கி இறந்தான் தன் இளந்தேவி

(அ) தன் மெய்யை நிற்பது ஆக்கி இறந்தவன் யார்?

(ஆ) இங்கு இளந்தேவி எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

x. இந்த இருவரில் தக்கவர் இன்னாரென்று வாதிப்பதற்குத்தான் அந்தப் பாரிய கூட்டம் நடக்கின்றது.

(அ) நாவலர் எழுந்தார் என்ற பாடப்பரப்பில் இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கியவர் யார்?

(ஆ) இந்த இருவர் எனக் குறிப்பிடப்படும் இருவரும் யார்? **(20 புள்ளிகள்)**

(2) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப்பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) என்னே மனிதர்
இவரே இறந்தார்கள்
இங்கோர் கல்லறை
எடுத்திலர் வெட்கம்
தன்னை மறைக்கத்
தானோ அவ் இறைவனும்
தளிர் பசும்புல்லால்
தரை மறைத் தனனோ!

(அ) இப்பாடல் எப்பிரதேசத்திற்குரியதாக சித்தரிக்கப்பட்டுள்ளது?

(ஆ) ஆசிரியர் வெட்கப்படுவதற்கான காரணமாகக் காட்டப்படுவது யாது?

(இ) இறைவனின் செயலாகக் கவிஞர் எதனைக் குறிப்பிடுகிறார்?

(ii) வயிரம் எனும் சுடு நெருப்பை மிக மூட்டி
வளர்க்கின் உயர் வரைக் காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு
திறந்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ் பழனக்
குருநாட்டில் கலந்து வாழ
உயிர் அனையாய் சந்துபட உனரத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்

(அ) போரை விரும்பாத தருமனின் மனநிலை எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகின்றது?

(ஆ) போரின் விளைவை விளக்கக் கையாண்ட அணியை விளக்குக.

(இ) அறத்தின் உருவமாக, உயிர் அனையாய் என்ற சொற்றொடர் மூலம் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?


kalvi.lk

(iii) சூழு மாயவுலகினிற் காணுறுந்

தோற்றம் யாவையும் மானதமாகுமால்

ஆழு நெஞ்சகத்தாசையின்றுள்ளதேல்

அதனுடைப் பொருள் நாளை விளைந்திடும்

தாழுமுள்ளத்தர் சோர்வினை ஆடுபோல்

தாவித்தாவி பல பொருள் நாடுவோர்

வீழு மோரிடையூற்றினுக் கஞ்சுவோர்

விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றோ

(அ) ஒருவர் தாம் விரும்பியவற்றை அடையாமல் போவதற்கான காரணங்கள் 2 தருக.

(ஆ) எமது இன்ப துன்பத்திற்கு காரணமாக அமைபவை எவை?

(இ) இப்பாடலைப் பாடியவர் யார்?

(iv) பக்தி இலக்கியம் உண்டாவதற்கு நம் அகத்திணை இலக்கியம் ஒருவாறு துணையாக இருந்திருத்தல் வேண்டும். இன்று தமிழ் மொழியை ஆராயும் போது பக்தியை உணர்த்தும் சொற்கள் பல அமைவதைக் காண்கின்றோம். எடுத்துக் காட்டாகப் பாரதிதாசன் பாடிய தமிழ்மொழி பற்றிய பாடல்கள் பக்திச் சொற்களை மிகுதியாகக் கொண்டவை.

(அ) பக்தி இலக்கியம் உண்டாவதற்கு துணையாக இருந்த இலக்கியம் எது?

(ஆ) யாருடைய பாடல்களில் பக்திச் சொற்கள் மிகுதியாக இருப்பதாக கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

(இ) பக்திச் சொற்களை மிகுதியாகக் கொண்ட மொழி எதுவென கூறப்பட்டுள்ளது.

(v) இலட்சியங்களும் இலட்சியவாதிகளும் அபின்னம் இதுபோன்று இலக்கியங்களும் அபின்னம் இலக்கியங்களுடன் அபின்னமாய் நின்று உணர்வார்க்கு இவை புலனாகும். நூற்றாண்டு கழிந்தாலும் உண்மையிலக்கியங்கள் புதுமை பெற்று உள்ளங்களைத் தளிர்த்து மலரச் செய்கின்றன.

(அ) இப்பந்தியின் மையக் கருத்து என்ன?

(ஆ) அபின்னமாக விளங்கும் இலக்கியத்திற்கும் அபின்னமாக விளங்கிய இலட்சிய வாதிகளுக்கும் இரண்டு சான்றுகள் வீதம் தருக.

**(20 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන

03. **நீதிப்பாடல்களில்**

(அ) விவேக சிந்தாமணியில் கூறப்பட்ட அறிவுடையோர், அறிவற்றவர்களின் இயல்புகளையும்

(ஆ) வெற்றிவேற்கையில் கூறப்பட்ட பெரியவர், சிறியவர் ஆகியோரின் இயல்புகளையும் விளக்கி எழுதுக.

**அல்லது**

**சங்கப்பாடல்களில்**

(அ) குறுந்தொகையில் தலைவனின் பிரிவால் தலைவியின் நிலை பற்றி தோழியின் கூற்றையும்

(ஆ) இலட்சிய வாழ்வு எத்தகைய பெரியதென்பதை அரிச்சந்திர மன்னனின் கூற்றையும் அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

**(15 புள்ளிகள்)**


kalvi.lk

04. **திருக்குறளில் பேதைமை** என்ற அதிகாரத்தில்

(அ) பேதைமையாளரின் இயல்புகள்

(ஆ) பேதைமை கொண்டோரின் செயல்களின் விளைவுகள் என்பவற்றை குறளினை ஆதாரம் காட்டி விளக்குக.

**அல்லது**

**மூத்தம்மா** என்ற சிறுகதையில்

(அ) குழந்தைகள் அன்பு உள்ள இடங்களிலேதான் வாழ விரும்புவார்கள் என்பதையும்

(ஆ) கதையில் காசீம் மனத்துயரப்படும் சம்பவங்களையும் பயந்தாங்கொள்ளி பட்டத்தை இல்லாமல் செய்யும் சம்பவங்களையும் எடுத்து விளக்குக.

**(15 புள்ளிகள்)**

**5, 6, 7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

05. **நாட்டார் பாடல்களில்**

(அ) இப்பாடல்கள் பிரதேசத்திற்குப் பிரதேசம் அவரவர் தொழில்முறைக்கேற்ப வேறுபடுவதையும்

(ஆ) ஆசைக்கிளியே என்ற பாடலில் வரும் தலைவனின் காதலுணர்வு புலப்படுவதையும் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

06. **எது நல்ல சினிமா** என்ற கட்டுரையில்

(அ) "திரையில் வருவதெல்லாம் சினிமா அல்ல" என்ற கூற்றின் தார்ப்பரியத்தையும்

(ஆ) சினிமா மொழியின் மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டு அவற்றை விளக்கி எழுதுக.

**(10 புள்ளிகள்)**

07. **அற்றைத் திங்கள்** என்ற பாடப்பகுதியில்

(அ) போர்க்கால கொடுமைகளையும்

(ஆ) பாரி மீது கபிலர் கொண்ட நட்பின் ஆழத்தையும் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## விடைகள்

## மாதிரிப் பரீட்சை - 1

### பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 1 - 3 | 11 – 4 | 21 – 3 | 31 – 3 |
| 2 - 1 | 12 – 3 | 22 – 4 | 32 – 1 |
| 3 - 2 | 13 – 2 | 23 – 4 | 33 – 3 |
| 4 - 2 | 14 – 1 | 24 – 1 | 34 – 2 |
| 5 - 4 | 15 – 3 | 25 – 4 | 35 – 1 |
| 6 - 1 | 16 – 3 | 26 – 2 | 36 – 3 |
| 7 - 2 | 17 – 2 | 27 – 2 | 37 – 4 |
| 8 - 1 | 18 – 4 | 28 – 1 | 38 – 3 |
| 9 - 4 | 19 – 4 | 29 – 4 | 39 – 1 |
| 10 - 3 | 20 – 2 | 30 – 3 | 40 – 2 |

### பகுதி - II

1. i. பெரும் மூதாளரேம் ஆகிய எமக்கே

ii. இங்கு வா மகன்: சடலத்தை / பிரேதத்தைத் தூக்கப் போகிறார்கள்

iii. ஒரு பெயரடையை தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர் பெயரடைத்தொடர்.
(உதாரணம்) மிக அழகான

iv. செ.கணேசலிங்கன் “நீண்ட பயணம்” என்ற நாவலை 1965 இல் எழுதினார்.

v. ஆந்தை / கோட்டான்

vi. பெயர் - குளத்தின் கரையில் அன்னம் ஒன்று நின்றது.
வினை - தம்பி தண்ணீரில் சவர்க்காரத்தைக் கரைத்தான் / வீட்டிற்கு அருகில் காகங் கரைந்தது

vii. உவமை தொகை - மதிமுகம், வேற்றுமைத் தொகை - மலரிதழ்

viii. பொருட்கள் அவனால் வண்டியில் ஏற்றப்பட்டன.

ix. நன்னூல்

x. பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றை அவர் அமைத்தார்.

கட்டுரை

விளக்கக் கட்டுரை

- பொருத்தமான தலைப்பு - வீதி அபிவிருத்தி கட்டமைப்பு பற்றியதோர் அறிமுகம்.
- வீதி விபத்துக்களுக்கான காரணம்.
- வீதி விபத்துக்களால் ஏற்படும் பாதக நிலைமைகள்.
- உயிரிழப்பு, காயம், அரச செலவுகள், குடும்பங்கள் பாதிக்கப்படும் நிலைமைகள்.
- வீதி விபத்துக்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்.
- வீதி அபிவிருத்திகள் மேற்கொள்ளல். - பொலிஸ் அவதானிப்புக்கள்
- சாரதிகள் சோதிக்கப்படல். - தலைக்கவசம் அணிதல்.
- வீதி விதிமுறை சட்டங்களை கடுமையாக்குதல்.
- முடிவு


kalvi.lk

மேடைப்பேச்சு

- பொருத்தமான தலைப்பு - விளிப்பு
- பெண்களின் பெருமையும் முக்கியத்துவமும்
- பெண்களின் இன்றைய நிலையும் சாதனைகளும் - முடிவுரை

உரையாடல்

- பொருத்தமான தலைப்பு - உரையாடல் பாங்கில் அமைதல்
- மொழிக் கல்வியின் அவசியம் பற்றியதோர் அறிமுகம்
- ஏனைய மொழிகளின் தேவைகள்
- ஏனைய மொழிகளின் தேர்ச்சியும் தற்கால உலகின் அவசியமும்.
- ஆங்கில கல்வியின் அவசியமும் வேலைவாய்ப்பும்.

சிறுகதை

- பொருத்தமான தலைப்பு - சிறுகதை அமைப்பைப் பேணல்
- கற்பனையான எழுதுதல் - கந்தையனின் எதிர்கால கனவுகளை எடுத்துக்காட்டல்
- அறுவடைப் பற்றி விளக்குதல்
- அவனது கனவு நனவானதா? கனவானதா? என்பதை வெளிப்படுத்தல்- முடிவு

3. அண்ணாமலைச் செட்டியார் சென்னையில் அண்ணாமலை மன்றம் என்பதை அமைத்தார். கலை வளர்ச்சிக்காகக் கட்டப்பட்ட இம் மண்டபத்தை இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்கும் உரிய விழாக்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இராவணன் முதலாக பல கதைகள் இசைத் தமிழ் தொடர்பாகத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இத் தொன்மைக் கதைகள் மக்கள் மத்தியில் இசைத்தமிழின் பெருமையைக் கூறுகின்றன. பக்திப் பாடல்களில் இசைத்தமிழின் உணர்வையும் இனிமையையும் காணலாம்.

4.

1. பனை ஓலையில் எழுதி வைத்தனர்
2. புலவரின் சந்ததியார் கல்லாதவராக இருப்பது
3. கறையான்கள் அரித்து விடும், மடிந்து போகும்
4. ஒரு நூலை எழுதுவதோ, எழுதுவிப்பதோ கடினமாக இருத்தல்.
5. மூவேந்தர்களும் வல்லள்களும் இறந்தமையால் தமிழ்நாடு நிலையான ஆட்சியின்றி சீர்குலைந்தது.

5.
- கடிதம்
- முகவரி - உள்முகவரி - விளிப்பு - தலைப்பு - விடயம்
- தொற்றுநோய் பரவும் முறைகள் (நீர், உணவு)
- சுகாதாரச் சீர்கேடுகள் (சுற்றுப் புறச்சூழல் தூய்மை இன்மை) - முடிவு
- தொற்றுநோய்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கூறி முடித்தல்.
- ஒப்பம் (என்பவற்றைக் கவனிக்க)

துண்டுப்பிரசுரம்

- கவர்ச்சியான தலைப்பு - விளிப்பு
- பொதுமக்களை நோக்கி பொலித்தீன் பாவனையின் பிரதிகூலத்தைக் குறிப்பிடல்.
- விடய விபரிப்பு - பொலித்தீன் பாவனையால் ஏற்படும் பாதிப்பு
- சூழல் மாசு
- பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள்
- வெளியிடுவோர் பற்றிய தகவல்.


kalvi.lk

## பகுதி III

1. அ. நாவலர் — ஆ. மூன்று

அ. பலவற்றிலும் ஆசைப்படும் விலங்குக் குணம்

ஆ. சுவர்க்கத்தினை அடைதல்

அ. வெம்மை நிறைந்த பிறைச்சந்திரன் — ஆ. விழிவேல்

அ. பரதன் குகனுக்கு, கோசலையை அறிமுகம் செய்தல் — ஆ. கோசலை

அ. உவமையணி — ஆ. பித்துப்பிடித்த ஒருவன்

அ. வானரம் — ஆ. தேவர்கள்

அ. ஈச்சமரத்தின் இலை — ஆ. உப்பு விற்பவர்கள்

அ. தருமன்,வீமன்,அர்ச்சுனன்,நகுலன்,சகாதேவன் — ஆ. உலகம்

அ. தி.த.சரவணமுத்துப்பிள்ளை — ஆ. கிளி

அ. அன்பு, அருள், அறன் — ஆ. இன்பம்

2. i. (அ) ஒருவர் அறுசுவை கொண்ட உணவை விரும்பி உண்பது போல, உப்புப்

- போடாத கஞ்சியை ருசித்துத் திருப்தியாக உண்ணல்.
- நன்றாகத் தோய்த்த அழுக்கற்ற பழைய உடையை பொன்னாடை போலக் கருதி உடுத்தி மனமகிழ்தல்.
- அழகான பனையோலையால் பின்னப்பட்ட பாயை நிலத்திலே விரித்து அதில் படுத்து தன்னை மறந்து நிம்மதியுடன் நித்திரை கொள்ளல்.

(ஆ)
- இங்கு மனம் எதனைத் திருப்தியுடன் ஏற்றுக்கொள்கின்றதோ அதுவே சிறந்த உயர்ந்த செல்வமாகும்.
- உப்பிட்ட கஞ்சி, பொன்னாடை, பஞ்சு மெத்தைப் படுக்கை என்பவற்றை ஒருவர் எதிர்பார்க்கவில்லை. மனம் திருப்தி என எதை உயர்வெனக் கருதி ஏற்றுக்கொண்டதோ அதனைச் செல்வம் எனக் கருதுகிறார்.

ii. (அ) இளம்பிறையை சூடிய குற்றாலநாதர் (ஆ) கூழம்பழமாக இருத்தல்.

iii. (அ) அன்னம் போன்ற நடையினையும் மைதீட்டப்பட்ட கண்களையும் உயைடவள்.

- அழகிய பொன்னிற மலர்க்கொம்பினை ஒத்தவள்.
- என் இதயத்தில் வீற்றிருக்கும் இலக்குமி போன்றவள்.
- கரும்பு போன்ற இனிய பேச்சினையும் தாமரைப் போன்ற முகத்தினையும் உடையவள்.

(எவையேனும் இரண்டு)

(ஆ) உருவக அணி

iv. (அ) இதுவரை வாழ்ந்த பறம்பு மலையை விட்டு செல்லும்போது துக்கத்தின் வெளிப்பாடாகக் கூறப்பட்டன.

(ஆ) கபிலரின் கூற்றின் மூலம் - இந்த மலையைப் பிரிவது மலையை விடக் கூடுதலாக கனக்கிறதே.
அருவியில் முகம் காட்டும் உன் அழகிய காட்சிகள். நீர்வாரும் கண்களின் ஈரத்தில் நிற்கும்.
பறம்பு மலையே நீ வாழ்க.

v. (அ) ஒரு பொருளின் சொல்லை எழுதாமல் அப்பொருளைக் குறிப்பதற்கான சித்திரத்தை வரைதல். (உதாரணம்) சூரியன் - இச் சொல்லை எழுதுவதற்கு பதில் அதன் உருவத்தை வரைதல்.

(ஆ) சித்திர எழுத்து மாறி அடையாள எழுத்தாக ஏற்பட்ட பிறகு அதிலிருந்து பிராமி எழுத்து தோன்றியது.


kalvi.lk

3. (அ) அருச்சுணன்

(ஆ) தருமன்

அல்லது

(அ) மூத்தம்மா

•

(ஆ) ஹாசிம்

- மூத்தம்மா, முத்தவாப்பா ஆகியோரிடமும் தன் தங்கை மீதும் பாசம் கொண்டவன்.
- இறந்து போன தன் தாயை நினைத்து வாடுபவன்.
- மூத்தம்மாவின் செயல்களை ஆச்சரியத்தோடும் கவனத்தோடும் பார்ப்பவன்.
- மூத்தம்மாவுடன் தன்னை ஒப்பிட்டு பார்த்துக் கொள்பவன்.
- மூத்தம்மாவின் இறப்பை தாங்கிக் கொள்ளாதவன், கருணை கொண்ட பாத்திரம்.

4. குகப்படலத்தில்

(அ) அறக்கடவுளே எனும்படி நின்றவள்.
அன்பின் கொள்கலமாக நிறைந்தவள்.
தசரத மன்னனின் இளைய பட்டத்தரசி.
இராமனைப் பிரியாத இலக்குமணனைப் பெற்றவள்.

(ஆ) “கன்று பிரிகராவின் துயருடைய கொடி வினவ......”
“குன்று அனைய திருநெடுந்தோள் குகனென் பானிந்த...”
“விலங்கல் திண்தோள் கைவீரக்களிறு அனைய காளை....”
“அன்னப்பேடை சிறை இலது ஆய்க்கரை துன்னின்று எனவும் வந்தது தோணியே...”

அல்லது

தத்தை விடுதூது என்ற பாடப்பகுதியில்

(அ) • பெண்கள் கல்வி கற்க வேண்டும்.
- பெண்கள் கல்வி கற்பதனால் தானும் பிறரும் பயன்பெறுவர்.
- கல்வி கற்பதால் கணவனுக்கு உற்ற துணையாக இருப்பர்.
- பெண் கல்விக்கு தடையாக இருப்போர் வீணர்கள்.

(ஆ) • ஆணாகப் பிறப்பது அவசியம் என நினைத்தல்.
- பெண்களின் குணங்களைப் பற்றி கருத்திற் கொள்வதில்லை.
- எப்படியான ஆணுக்குப் பெண்ணைக் கொடுத்தோம் என்பதை உணராது அக்கறையற்றுப் பெற்றோர்கள் தனியாக இருந்து இன்புறுதல்.
- பெண்ணை ஒரு ஆணின் கையில் தள்ளிவிடுவதே அவர்கள் வேலை.
- பெண் மீது அக்கறை கொள்வதில்லை.

5. கிருட்டிணன் தூதுச் சருக்கத்தில்

(அ) கிருட்டிணன் தூது செல்வதை விரும்பாதவன்
தருமனின் செயலை “ஊனம் இலான் மானம் இலாது உரைப்பதற்கு என் செய்வது” எனக் கூறியவன்.
கோபம் மிகுந்தவன். வீரம் கொண்டவன்.
அண்ணனைக் கடிந்து கொள்வதோடு மரியாதையும் செலுத்துபவன்.


kalvi.lk

(ஆ) எதிர்காலம் பற்றிக் கூறுபவன்.

தேவர்களின் தலைவன், எம் தலைவன், மிகுந்த மாயை உடையவன்.
உலகம் முழுவதும் கொப்பூழின்றும் தோற்றுவித்தவன்.
அடியவர்களின் குறை தீர்ப்பவன்.
தேவரும் முனிவரும் நால்வேதங்களும் கண்டறியாத் திருவடிகளையுடையவன்.
துளசி மாலையை முடியில் அணிந்தவன். தருமனுக்கு பலமாக நின்றவன்.

6. தமிழ்ப் பண்பாடு என்ற கட்டுரையில்

(அ) உலக மனப்பான்மை - "யாதும் ஊரே யாவரும் கேளீர்"

கண்ணோட்டம் - உலக மனப்பான்மையில் இருந்து தோன்றி வேறொரு இயல்பு

பக்தி - தமிழ் பக்தியின் மொழி

பிறர் அன்பு, ஈகை, ஒழுக்கம், மனத்தூய்மை, தமக்கெனவாழாப் பிறர்க்குரியராதல், விடாது முயலல், உயர் இலட்சியம்.

(ஆ) தமிழர் பண்பாட்டில் பக்தி போன்று ஒழுக்கமும், நீதியும் சிறந்து விளங்கியது.

பாரதியார் வள்ளுவன் பற்றி கூறும் கூற்றில் இருந்து வள்ளுவனின் நீதி நூல் ஒழுக்கக் கருத்துக்களின் உண்மையைக் காட்டுகிறது.

உலக நீதி இலக்கியங்களை ஆராய்ந்து பல நூல்களை இயற்றிய அல்பேட் சுவைட்சர் எனும் அறிஞர் திருக்குறளைப் போர உயர்ந்த கோட்பாடு கொண்ட நூல் இவ்வுலகில் இல்லை என்கிறார்.

நீதி நூல்களை மொழிபெயர்த்தல், அரசியல் வாழ்க்கைக்கு ஒழுக்கம் அவசியம்.

7. அற்றைத் திங்கள் என்ற நாடகத்தில்

(அ) பாரி மகளிரின் அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும் எடுத்துக்காட்டும்

விதமாக "அற்றைத் திங்கள்" எனக் கொடுக்கப்பட்ட தலைப்பு மிகவும் பொருத்தமானது.

புலம்பெயர் சமூகத்தை நினைவூட்டும் விதமாக இருத்தல்.

(ஆ) நாடகத்தின் நிறைவில் ஒலிக்கும் குரல்கள் கூறும் செய்திகள் இத் துயரச்

சம்பவத்தைச் சமகால துயர்களுடன் பொருத்திக் காட்டுகின்றன.

பாரி மகளிர் பறம்பு மலையில் இருந்து பிடுங்கி எறியப்பட்டமை, அவர்களை வம்பவேந்தரின் வன்முனை துரத்தல், எல்லாக் காலங்களிலும் மண்ணின் மக்களது நிலை, மலைவாசிகளின் உரிமை மறுப்பு என்பன அதிகார வர்க்கத்தின் செயலை எடுத்துக் காட்டுகின்றன.

எல்லாக் காலங்களிலும் இதுதான் மண்ணின் மக்களின் புலம்பெயரும் வரலாறு எனக் கூறி நாடகத்தின் இறுதிக்குக் கொண்டு செல்லும் ஆசிரியரின் கருத்து மூலம் அதிகார வர்க்கத்தின் மிதமிஞ்சிய போக்கு வெளிப்படுகிறது.


kalvi.lk

## மாதிரிப் பரீட்சை - 2

### பகுதி – I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 11. | 3 | 21. | 4 | 31. | 1 |
| 2. | 2 | 12. | 4 | 22. | 2 | 32. | 2 |
| 3. | 1 | 13. | 2 | 23. | 3 | 33. | 3 |
| 4. | 3 | 14. | 1 | 24. | 1 | 34. | 2 |
| 5. | 4 | 15. | 3 | 25. | 3 | 35. | 4 |
| 6. | 4 | 16. | 2 | 26. | 2 | 36. | 2 |
| 7. | 1 | 17. | 4 | 27. | 3 | 37. | 1 |
| 8. | 3 | 18. | 1 | 28. | 3 | 38. | 2 |
| 9. | 1 | 19. | 1 | 29. | 4 | 39. | 3 |
| 10. | 2 | 20. | 2 | 30. | 2 | 40. | 3 |

### பகுதி – II

01. சுருக்கமான விடை எழுதுக.

(i) ‘‘புனலருவி கழங்கென” - புனல் அருவி கழங்கு என

(ii) பொழுது விடிந்ததும் விடியாததுமாக வயலுக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுவேன்.

(iii) பெயர் : (யுத்தம், போர்) துரியோதனன் அமர்க்களத்தில் மரணத்தைத் தழுவினான்.

வினை : (அமருதல்) எல்லோரும் அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்தனர்.

(iv) ஓடி

(v) தம்பியால் கடிதம் எழுதப்பட்டது. / கடிதம் தம்பியால் எழுதப்பட்டது.

(vi) அடைக்கலம்’ - (சரண்புகுதல், பாதுகாத்துத் தருமாறு கொடுத்தல்)

உதாரணங்கள்

தனது துன்பங்களை நீக்கக்கூடியவர் இறைவனே என்பதை உணர்ந்த அடியவன் ஆலயத்தில் அடைக்கலம் புகுந்தான்.

மான்குட்டி ஒன்று அருச்சுனனிடம் அடைக்கலம் கேட்டு நின்றது.

கோவலன் கண்ணகியை மாதரியிடம் அடைக்கலமாக விட்டுச் சென்றான்.

(vii) சித்திரவதைகள் மற்றும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளுக்கு எதிரான ஐக்கியநாடுகள் சபையின் அமைப்பு மேற்படி சித்திரவதைகளில் ஈடுபடும் நபர்களை நீதியின் முன் நிறுத்துமாறு அரசைக் கோரியுள்ளது.

(viii) குருத்து + ஓலை = குருத்தோலை

பூ + உதிர்ந்தது = பூவுதிர்ந்தது

(ix) கமலா அழகாகவும் விரைவாகவும் எழுதினாள்.

(x) எழுவாய் : பயணிகள்

பயனிலை : சிரமப்படுவர்


kalvi.lk

02. (i) விளக்கக் கட்டுரை

- தலைப்பு
- சமூக சமத்துவத்தைக் கட்டியெழுப்புதல்
- வேறுபாடும் ஒரு பேரழகே
- ஒன்றிணைவு சுபீட்சத்தின் குறிகாட்டி

(இவை போன்ற பொருத்தமான தலைப்புக்கள்)

உள்ளடக்கம்

ஆரம்ப காலம் முதல் மனிதன் சமூகமாக வாழப் பழகிக்கொண்டுள்ளான்.

சமூகக் குழுக்கள் தம்முள் முரண்பாடற்று வாழ்தல் தேசிய ஒருமைப்பாட்டிற்கு நன்மை விளைவிக்கும்.

சமூக சமத்துவமின்மை

- முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும்
- மோதல்களுக்கு அடிப்படையாகும்
- பிரிவினைகளை உண்டாக்கும்
- தேசிய ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிக்கும்
- அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாக அமையும்

சமத்துவத்தை ஏற்படுத்துதல்

- சம அந்தஸ்து, சம உரிமை, சம வாய்ப்பு வழங்குதல்.
- பல்வேறு சமூகங்களினதும் கலாசாரங்களையும் மரபுகளையும் மதித்து நடத்தல்
- மொழியால் வேறுபட்ட சமூகங்களெனில், அச்சமூகங்களினது மொழியை மதித்தலும் பயிலுதலும்.
- சமூக சமத்துவத்தை ஏற்படுத்த அரசு, சமூகத் தலைவர்கள், கல்வி நிறுவனங்கள், சமய நிறுவனங்கள் முன்வருதல்.

(ii) மேடைப் பேச்சு

தலைப்பு

- ஒழுக்கமுடைமையின் உயர்வு
- ஒழுக்கமே உயரிய கண்கள்
- ஒழுக்கத்தைப் போற்றுவோம் (பேணுவோம்)

(இவை போன்ற தலைப்புக்கள்)

அவதானிப்புக்குரியவை

- சபையோரை விளித்தல், வணக்கம் கூறுதல்
- பேசப்போகும் தலைப்பைத் தொடர்புபடுத்திப் பேசுதல்

உள்ளடங்க வேண்டியவை

- ஒழுக்கம் பற்றிய விளக்கம்
- ஒழுக்கத்தின் பெருமைகள்
- ஒழுக்கத்தால் உயர்ந்தவர்கள்
- ஒழுக்கம் இன்மையால் ஏற்படும் இழிவுகள்

Education கல்வி අධ්‍යාපන


kalvi.lk

(iii) உரையாடல்

தலைப்பு

- சினிமாவின் நோக்கம் கலையழகா? வர்த்தகமா?
- யதார்த்த வாழ்வின் விம்பம் சினிமா
- வியாபார போட்டியுலகில் சினிமா
- காலந்தோறும் சினிமா (இவை போன்ற தலைப்புக்கள்)

அவதானிப்புக்குரியவை

- உரையாடல் இருவருக்கிடையே நடைபெற வேண்டும்.
- தலைப்பை ஒட்டியதாக அமைய வேண்டும்.
- தர்க்கரீதியாகவும் உரையாடல் பாங்குடனும் எழுதப்படல் வேண்டும்.
- உரையாடலுக்கிடையே ஒரு தொடர்ச்சி காணப்பட வேண்டும்.

உள்ளடங்க வேண்டியவை

- சினிமா ஒரு கலை
- நடனம், இசை, ஓவியம் முதலியன போன்று சினிமாவும் ஒரு கலையே.
- யதார்த்த வாழ்வே படமாக்கப்படுகிறது.
- ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு, பாடல், வசனம், நடிப்பு என அனைத்திலும் கலையழகு நிரம்பியிருக்கிறது.
- நுண்ணுணர்வை வெளிப்படுத்துவதாக சினிமா விளங்குகிறது.
- அறிவியல் தொடர்பான விடயங்களும் கலையழகுடன் வெளிப்படுத்தப்படுகின்றன (வெளிப்படுத்த முடியும்)
- உதாரண படங்கள் (ஆரம்ப காலம், இடைக்காலம், அண்மைக்காலம்)
- வியாபார நோக்குடைய படங்கள் வெளிவந்தாலும் கலாரசனைமிக்க படங்களை எதிர்பார்க்கும் மக்கள் அதிகம் உளர்.
- சினிமா வியாபார நோக்குடையது
- யதார்த்தத்திற்குப் புறம்பான விடயங்கள் படமாக்கப்பட்டாலும் பாரிய அளிவில் வருவாயை ஈட்டிக்கொள்கிறது.
- பொருளழகு அற்ற வெற்று வரிகள் பாடல்கள் என்ற பெயரில் சினிமாவில் இடம்பெறினும் அதிக மக்களின் கவனத்தை அவை ஈர்க்கின்றமை.
- அத்தகைய பாடலாசிரியர்கள் அதிகம் பண வருவாயைப் பெறுதல்.
- சிறந்த வருவாயை ஈட்டித்தரும் படங்களையே தயாரிப்பாளர்கள் விரும்புதல். அத்தகைய படங்கள் கலையழகு அற்றனவாகவே விளங்குகின்றன.

(இவை போன்ற கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தர்க்கரீதியாக உரையாடுதல் வேண்டும்)

(iv) சிறுகதை

தலைப்பு

- விடியலைத்தேடி
- ஜீவநதி
- வெளுக்கும் வானம்
- மனைக்கதிரவன் (இவை போன்ற தலைப்புக்கள்)

அவதானிப்புக்குரியவை

- சிறுகதைக்குரிய அமைப்புப் பேணப்படல்
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கமைய கற்பனைச் செறிவுடன் எழுதப்படல்


kalvi.lk

- கதையைச் சுவைபடவும் விறுவிறுப்பாகவும் நகர்த்திச் செல்லுதல்
- இயல்பான, கவர்ச்சியான கதையோட்டம்
- கதைக்குப் பொருத்தமான மொழிநடை
- இயல்பான பாத்திர உரையாடல்
- படிப்பினையை வெளிப்படுத்தல்
- முடிவு பொருத்தமாக அமைதல்

03. சுருக்கம்

- ஆதிகாலம்தொட்டு இன்றுவரை மனிதரிடையே கூட்டு வாழ்வு நிலவி வருகிறது.
- குகைகளில் வாழ்ந்தும் வேட்டையாடியும் மந்தைகளை மேய்த்தும் ஆற்றோரங்களிற் பயிரிட்டும் விருத்தியடைந்து வந்த மனித வாழ்க்கையில் கூட்டு வாழ்க்கையின் இயல்பைக் காணலாம்.
- கிராம வாழ்க்கையை ஆரம்பித்த மக்களிடையே கூட்டுச் சமூக வாழ்க்கை உண்டானது.
- தொழில் வேறுபாடுகளுக்கமைய வெவ்வேறு சமூகங்கள் தோன்றின.
- அத்தொழில் முறைமையின் ஊடாகவே சாதிக் கட்டுப்பாடும் தோன்றியது.

04. அ. - பண்பாட்டின் வரையறை பற்றிய குறிப்புகள்

ஆ. - பண்பு
- பண்புடைமை
- சால்பு
- சான்றாண்மை

இ. - சான்றோர்
- ஒழுக்கமுடையோர்
- ஒளியோர்
- மாசற்ற காட்சியுடையோர்

ஈ. - திருக்குறள்

உ. - நிலத்தைப் பண்படுத்துதல்

Education கல்வி අධ්‍යාපන

05. கடிதம்

அமைப்பு - 05 புள்ளிகள்
உள்ளடக்கம் - 07 புள்ளிகள்
மொழிநடை - 03 புள்ளிகள்
மொத்தம் - 15 புள்ளிகள்

அமைப்பு

முகவரி - 01 புள்ளி
உள்முகவரி - 01 புள்ளி
விளிப்பு - 01 புள்ளி
தலைப்பு - 01 புள்ளி
பதவி, ஒப்பம் - 01 புள்ளி

(தரப்பட்ட தரவுகளுக்கமைய முகவரி அமைய வேண்டும்)


kalvi.lk

உள்ளடக்கம்

- பாடசாலையில் கலைவிழா கொண்டாடப்படவுள்ளதைக் குறிப்பிடல்.
- பாடசாலையின் பெயர், திகதி, நேரம், இடம், பங்குபற்றும் விருந்தினர் என்பனவற்றைக் குறிப்பிடல்.
- இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்பிடல்.
- விழாவில் கலை வளர்ச்சியில் பாடசாலைகளின் பங்களிப்புக் குறித்து உரையாற்றும்படி விநயமாக வேண்டல்.

மொழிநடை

- பொருத்தமான மொழிநடை
- நிறுத்தக் குறிப் பிரயோகம்
- வழுக்கள் இன்மை
- சுட்டிப்பாகக் கூறுதல்

பத்திரிகைச் செய்தி

| | | |
|---|---|---|
| அமைப்பு | - | 05 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | - | 07 புள்ளிகள் |
| மொழிநடை | - | 03 புள்ளிகள் |
| மொத்தம் | - | 15 புள்ளிகள் |

அமைப்பு

கவர்ச்சியான தலைப்பு

பந்தியமைப்பு

விடயத் தொடர்ச்சி

முடிப்பு

உள்ளடக்கம்

- பாடசாலையின் பெயர்
- வெளியிடப்படவுள்ள சஞ்சிகையின் பெயர்
- திகதி, நேரம், இடம்
- தலைமை, விமர்சனஉரை
- நிகழ்ச்சிகள்

மொழிநடை

- பொருத்தமான மொழிநடை
- நிறுத்தக் குறிப் பிரயோகம்
- வழுக்கள் இன்மை
- சுட்டிப்பாகக் கூறுதல்


Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

பகுதி - III

(i) அ. திருமால் / விஷ்ணு / கண்ணன் ஆ. கைகேயி

(ii) அ. தினை ஆ. பூண்

(iii) அ) துன்பம் ஆ) பிரியும்போது துன்பம் தருவதில்லை

(iv) அ. கண்ணன் / கிருட்டிணன் ஆ. தருமன்

(v) அ. சுவாமி விபுலாநந்தர் ஆ. உள்ளமாகிய தாமரை

(vi) அ. காதற் பாடல் ஆ. மயானம் / மையவாடி

(vii) அ. கன்னல்மொழி / கன்னன்மொழி ஆ. தாமரை / கமலம் / கஞ்சம்

(viii) அ. மடப்பாவை - திரௌபதை
கொற்ற வேந்து - தருமன் ஆ. வீமன் கூற்று

(ix) அ. பாரி மன்னன் ஆ. பறம்பு மலை

(x) அ. பூரண நிலா / பூரண சந்திரன் ஆ. உவமையணி

2. i. அ) உழவர்கள் சங்குகளினால் குரங்குகளுக்கு எறிந்தமை
அதற்கு அவை பருவமான இளநீர்களை எறிகின்றன.

ஆ) அப்பிறை (அப்பிறை - அப்பு, இறை) - கண்ணீர் சிந்தும் விழியாகியவேல்

ii. அ) நாட்டு விடுதலைக்காகப் தேசபக்தர்கள் போராட்டம் நிகழ்த்தியமை.
போராட்டம் நிகழ்த்தும் தேசபக்தர்களைக் கொல்லும் நோக்கத்துடன் படைவீரர்கள் காத்திருத்தமை.

ஆ) - உருவக அணி
- சுதந்திரமாகிய நற்பயிர்
- சுதந்திரத்தை நற்பயிராக உருவகித்துள்ளார்

iii. அ) ஊன்றுகோலை ஊன்றியபடி அல்லாது நடக்க முடியாத நிலை
- மேனியின் நடுக்கம்
- இருமலுக்கிடையே சில வார்த்தைகளையே பேச முடிகின்ற நிலை

ஆ) நன்மை தீமை தெரியாத வஞ்சனையற்ற (பின்விளைவு பற்றிய அறிவற்ற) இளம் பருவம்

(iv) அ) - குணக்குன்று
- குலவிளக்கு

ஆ) - முன்றலில் மண்ணளைந்து விளையாடல்
- முழங்காலில் தவழ்தல்
- முத்துப்போன்று அழகிய சிரிப்பை வெளிப்படுத்தல்

(v) அ) தூல வடிவம் - கண்ணுக்குப் புலப்பட்டு நிற்கும் (வெளித்தோன்றும்) வடிவம்
சூக்கும வடிவம் - கண்ணுக்குப் புலப்படாத (நுண்ணிய) வடிவம்

ஆ) இலட்சியத்திற்கும் இலட்சியவாதிகளுக்கும் இடையே மிகுந்த ஒருமைப்பாடு (ஐக்கியப்பாடு)
உண்டு / இலட்சியத்திற்கும் இலட்சியவாதிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்புண்டு


kalvi.lk

3. அ)

- தேவர்களின் தலைவன்
- 'எங்கள் உயிர் போன்றவனே' எனத் தருமன் விளித்தல் (உயிர் அனையாய்)
- எம்பிரான் எனச் சுட்டப்படுதல்
- பழைமையான நாடு (மூதூர்)
- சிந்தூரத் திலகம் அணிந்த நெற்றியையுடைய குவலயாபீடம் என்னும் யானையின் கொம்பை ஒடித்த சிவந்த கண்களையுடைய திருமால்
- உலகம் முழுவதையும் கொப்பூழிலிருந்து உண்டாக்கியவன்
- செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் அமர்ந்திருக்கும் கௌத்துவ மணியை அணிந்த மார்பினையுடையவன்.
- அடியவர் குறைகளெல்லாம் தீர்த்தவனே (புன்மை யாவும் தீர்த்தோனே)
- சிவனது இரத்தல் தொழிலை ஒழித்த சிறப்புக்குரியவன் (கடவுள் கங்கை நீர் முடித்தான் இரவு ஒழித்த)
- திருமுடியில் துளசி மாலையை அணிந்தவன்
- தேவர்களும் முனிவர்களும் நால் வேதங்களும் கண்டறிய முடியாத திருவடிகளை உடையவன் (எவராலும் அறிய முடியாதவன்).

ஆ)
- வயல்களில் வரால் மீன்களின் கூட்டம் உலவும் நாடு (செய்வரால் இனம் உகளும் திருநாடு)
- ஆம்பல்களும் தாமரைகளும் கமழ்கின்ற வயல்களையுடைய நாடு (கயிரவமும் தாமரையும் கமழ்பழனக் குருநாட்டில்)
- மலரிதழ்களின் மகரந்தத் தாதுக்களைத் தமது வாயால் ஊதி வண்டுகள் ரீங்காரம் செய்யும் குளிர்ச்சி பொருந்திய நாடு (தாது ஊதி அளி முரலும் தண்பதி)
- உழவர்களினது இல்லங்களின் முற்றங்களில் சங்குகள் தவழ்கின்ற நீர் வளம் மிக்க குருநாடு

**அல்லது**

அ) **கோசலையை அறிமுகம் செய்தல் :** அரசர்கள் திறை செலுத்துவதற்காகத் தங்கியிருக்கும் முற்றத்தையுடைய தசரதனது மூத்த மனைவி. மூவுலகங்களையும் படைத்தளித்த பிரம்மனை முன்பு படைத்த திருமாலாகிய இராமனைத் தன் மகனாகப் பெற்றதனால் பெற வேண்டிய அரச செல்வத்தை யான் பிறந்ததனால் இழந்த பெருமைக்குரியவள் என்று கூறி அறிமுகம் செய்தான்.

ஆ) **சுமித்திரையை அறிமுகம் செய்தல் :** நல்வழியில் நின்று தவறாமல் சத்தியத்தை என்றும் அழியாமல் காத்து உயிர் நீத்த தசரதச் சக்கரவர்த்தியின் இளைய தேவி இவ்வன்னையாவாள். எல்லா மக்களும் வணங்கத்தக்க குல தெய்வமாக விளங்கும் இராமனுக்குப் பின்பு பிறந்த தம்பியும் ஒருவன் உள்ளான் என்று சொல்லுமாறு இராமனை விட்டும் நீங்காத இலக்குவனைப் பெற்ற பெருமைக்குரியவள் என்று கூறி அறிமுகம் செய்தான்.

இ) **கைகேயியை அறிமுகம் செய்தல் :** துன்பங்கள் எல்லாவற்றையும் உண்டாக்கியவளை, பழியாகிய குழந்தையை வளர்க்கும் செவிலித்தாயை, தனது பாழான தீவினை உடைய வயிற்றிலே நீண்ட நாள் தங்கியிருந்த எனக்கும் உயிராகிய சுமை குறைந்து தேய்வடைய, உடல்கள் எல்லாம் உயிர் இல்லாதன போலத் தோன்றும் இவ்வுலகில், இவள் ஒருத்தி மட்டுமே துன்பம் இல்லாத முகத்தையுடையவள். இவ்வளவு நேரமும் இவளது முகத்தைக் கொண்டே இவளை இன்னாரென்று குறிப்பினால் அறியவில்லையாயின் வெளிப்படையாகவே சொல்கின்றேன் இதோ இருக்கின்றவள் என்னைப் பெற்றவளான கைகேயி என்று கூறி அறிமுகம் செய்தான்.


kalvi.lk

4. அ) • ஆந்தை (பக்குல்) கத்துவது, ஒருவரது இறப்பதற்கான அறிகுறி என்று கூறுதல்.

- ஆந்தையை (பக்குலை) விரட்ட சிரட்டையினுள் நெருப்புத் தணலை இட்டு, அதனுள் உப்புக் கட்டிகளைப் இட்டு வெடிக்க வைத்தல்.
- கைராசிக்காரி ஒருவர் பிரசவம் பார்த்தால் சுகப்பிரசவமாக அமையும் என்ற நம்பிக்கை காணப்படுதல்.
- நோயுற்றவரைக் காப்பாற்றுவதற்கு நேர்ச்சை வைத்தல், குர்ஆன் ஓதுதல் என்பனவற்றைச் செய்தல். கதையில் அண்ணாவி மாமா ஓதிப்பார்த்தார், ஒரு ரூபாய்க் குற்றியை வெள்ளைத் துணியில் சுற்றிக் கட்டி அவுலியாக்கு நேர்த்தி வைத்தார் என்று கூறப்பட்டுள்ளது.
- பிள்ளை வரம் வேண்டி நேர்த்திக்கடன் செய்தல் (மூத்தம்மாவுக்குப் பிள்ளை என்று உம்மா மட்டும்தான். அதுவும் பல நேத்திக்கடன் கொடுத்துப் பிறந்தது என்று பழைய நினைவில் தோய்ந்து இருப்பா)
- நாட்டு வைத்தியத்தில் நம்பிக்கை கொண்டு கைம்மருந்துகளைப் பயன்படுத்துதல்.
- பய உணர்வுமிக்க சிறுவனாக விளங்குகிறான் (பக்குல் கத்துவதைக் கேட்டு பயம் கொள்வதனைக் குறிப்பிடலாம்.)
- மூத்தம்மா, மூத்தவாப்பா, தங்கை ஆகியோரிடம் மிகுந்த பாசம் கொண்டவன்.
- கிராமத்துப் பழைய நம்பிக்கைகளைப் புரிந்து கொள்ள முடியாதவன் (தனது தாய் இறந்தபோது பங்குல் ஏன் கத்தவில்லை என்று கேட்கிறான்.)

- இறந்து போன தன் தாயை நினைத்துத் துன்பப்படுபவன் (கால்மாட்டில் உம்மா வந்து நின்றா. புகைச்சுருளாய் நெளிந்து நெளிந்து வந்தா என்று கூறுவதனை உதாரணமாகக் குறிப்பிடலாம்.)
- மூத்தம்மாவின் செயல்களை அக்கறையோடும் ஆச்சரியத்தோடும் பார்த்துப் பெருமை கொள்பவன். அவரது தோற்றம், நடத்தை என்பவற்றைப் பார்த்து அவரை ஓர் அரசியாகக் கற்பனை செய்கிறான்.
- மூத்தம்மாவைப் போலத் தானும் ஓர் இளவரசனாய் விளங்க விரும்பியவன். அதன் காரணமாக மஞ்சோனா மரத்தின் கீழ் தனியாக இருக்கப் பழகினான், பயந்தாங்கொள்ளி பட்டத்தை நீக்கினான்.
- மூத்தம்மாவின் மீது கொண்ட பாசத்தினால் அவரது இழப்பைத் தாங்க முடியாது குலுங்கிக் குலுங்கி அழுதவன்.

**அல்லது**

அ) • அவளைப் போன்ற அழகிய கண்கள் இல்லையே என்று மான் ஏங்கி நிற்றல் (மான் ஏங்கு மைவிழி)

- வஞ்சிக்கொடி போன்ற இடையினை உடையவள், பசுமையான வளையல்களை அணிந்தவள். (வஞ்சியிடைப் பைந்தொடி)
- செந்தாமரை போன்ற முகமும் வாள் போன்ற ஒளி பொருந்திய கண்களும் உடையவள் (செங்கமல வாள் விழியாள்)
- பவளத்தைப் போன்ற வாயினையுடையவள், பசுமையான வளையல்களை அணிந்தவள் (கிஞ்சுகவாய்ப் பைந்தொடி)
- வாள் போன்று ஒளி பொருந்திய கண்களையுடையவள் (வாள் விழி)
- அன்னம் போன்ற நடையினையும் மை தீட்டப்பட்ட கண்களையும் உடையவள் (அன்ன நடை மை விழியாள்)
- அழகிய பொன்னிறமான மலர்க் கொப்பினை ஒத்தவள் (அம்பொன் மலர்க் கொம்பு அனையாள்)
- கரும்பு போன்ற இனியான பேச்சையுடையவள் (கன்னன் மொழி)


kalvi.lk

- தாமரை போன்ற முகத்தையுடையவள் (கஞ்சமுகம்)
- என் இதயமாகிய தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமி போன்றவள் (என் இதய தாமரைக்கு ஓர் இலக்குமியாம்)
- பசுமையான மாலையை அணிந்த கூந்தலையுடையவள் (பைந்தார் பசுங்குழலாள்)

ஆ) • பெருமைமிக்க கல்வியின் நன்மையைப் பெற்றிருக்கும் வாலிபர்களாகிய நாங்கள் கல்லாதவரை விரும்புவோமோ? என்று தலைவன் கேட்பதன் மூலம் பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்ற கருத்தைப் புலவர் வெளிப்படுத்துகிறார். அதேவேளை கல்வி கற்ற பெண்கள் கல்வியின் நன்மையைப் பெற்ற வாலிபர்களை தம் வாழ்க்கைத் துணையாக அடையவர் என்ற செய்தியையும் வெளிப்படுத்துகிறார்.

- பெண்கள் கல்வியில் சிறந்து விளங்கினால், அவர்களது காதலர்க்குச் சொல்லுவதற்கு அரிதான துணையாக அமைவர்.
- இந்தப் பழமையான உலகமும் சிறப்படையும்.
- பெண்கள் எல்லையற்ற இன்பத்தினை அடைவர்.

5. அ) • பிரபலமாகவிருந்த புராண நாடகங்களே ஆரம்பதில் (1930களில்) படமாக்கப்பட்டமை

- நாடக மேடை மாதிரியே செட் போடப்பட்டு, கமிராவை முன்னால் வைத்து நாடகம் நடிக்கப்பட்டு நாடகம் பார்ப்போரின் கோணத்தில் இருந்து படமாக்கப்பட்டமை
- சென்னையிலிருந்த நாடகக் கம்பனிகள் கூட்டம் கூட்டமாக கல்கத்தாவுக்கும் பம்பாய்க்கும் சென்று தங்கள் நாடகங்களைப் படமாக்கிக் கொண்டமை

  அண்மைக்காலம் வரையிலும் இயக்குனர்கள், நடிகர்கள், வசனகர்த்தாக்கள், பாடலாசிரியர்கள் யாவரும் நாடகத்துறையில் இருந்து வந்தமை
- இன்றைய சினமாவிலும் நாடகத்தன்மை காணப்படுதல்
- கதாபாத்திரங்கள் சதுரமான விளிம்பிலிருந்து வருதல்
- மேடைக்குள் நுழைவதைப் போல வசனத்தைப் பேசிவிட்டு பக்கவாட்டில் சென்று மறைதல்
- குரலை ஏற்றி இறக்கிப் பேசாமல் கத்திப் பேசுதல்
- நடிகர்கள் காமிராவை பார்த்து (நாடகம் பார்க்க வந்திருக்கும் ரசிகர்களைப் பார்த்து பேசும் பாவனையில்) பேசுதல்
- படம் முழுவதும் பின்னணி இசை ஒலித்துக்கொண்டிருத்தல்

ஆ)

- (Cut): கண்ணிப்பது போல் காட்டி மாறுவது
- மயங்கித் தெளிதல் (Dissolve): ஒரு காட்சி மங்கி, அதே தருணத்தில் அடுத்த காட்சி திரையில் தோன்றுவது.
- இருண்டு தெளிதல் (Fade - in and fade out): திரை இருண்டு பின் மறுகாட்சி வருவது.

06. அ) **புலமை**

- சென்னை சர்வகலாசாலை நடாத்திய பி.ஏ. பரீட்சையில் சித்தியடைந்த யாழ்ப்பாணத்தைத் சேர்ந்த இருவரில் இவரும் ஒருவர்.
- இவர் மகாவிவேகி, கணித மேதை, தாமோதரம்பிள்ளையின் ஆசிரியர், வாதம் செய்வதில் பெரிய சாமர்த்தியவான் என்று குறிப்பிடுவதும் இவரது ஆளுமையைக் காட்டுகிறது.
- இளமைக் காலம் தொட்டு ஆறுமுகநாவலரோடு பலமுறை வாதம் செய்து வந்தவர். நாவலரையே எதிர்த்து கண்டனப் பத்திரிகைகள் பலவற்றை வெளியிட்டவர் என்றெல்லாம் குறிப்பிடுவதும் இவரது ஆளுமையைக் காட்டுகிறது.


kalvi.lk

- நாவலர் காசநோயின் துன்பம் காரணமாக கூட்டத்திற்குத் தலைமை வகிக்க முடியாது போக, விசுவநாதபிள்ளை தலைமைதாங்கி நடத்தியமையும் அவரது ஆளுமையைக் காட்டுகிறது.

**மதிப்பு**

- மேடைக்கு நாவலர் வரும்போது 'விலகு பிள்ளை' என்று வழக்கமாகச் சொல்லுவதைச் சொல்லுமுன்னமே விலகிக் கொண்டார் என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுவது.
- நாவலரோடு வாதம் செய்து, பின்நாட்களில் நாவலரவர்களின் கொள்கைகளுக்கு இணங்கி, அவர்மீது மதிப்புக் கொண்டு நாவலர் அவர்களை குருவாகக் கொண்டவர் என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுவது.

ஆ) **ஆளுமை**

- பிரசித்தி பெற்ற, அனுபவமுள்ள வழக்கறிஞர்.
- அக்காலத்தில் வாழ்ந்த சட்ட நிபுணர்களில் தலைசிறந்தவர்.
- இலங்கையில் உள்ள அனைவராலும் அறியப்பட்டவர்.
- கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அவருக்குச் செல்வாக்கு மிகுந்திருந்தது.
- பாரிய வழக்குகளுக்கும் அப்பீல்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம்.

நேர்மையின்மை

- நல்லூர் கோயிலாளர்க்கும் பிராமணர்களுக்கும் இடையே நிகழ்ந்த பாரிய வழக்கொன்றில் கோயிலாளர் சார்பில் வாதாடியவர் பிறிற்றோ.
- நாவலர் பிராமணர்களைச் சார்ந்து நின்றவர். நாவலர் தமக்குச் சார்பாயிருந்தால் பிராமணர்களுக்கு வெற்றி கிடைக்கத்தக்க வகையில் வழக்கை நடத்தி வைப்பதாக நண்பர் மூலமும் கடிதம், தந்தி மூலமும் குறிப்பிட்டிருந்தார் பிறிற்றோ.

7. அ)

- மாடுகள் பெருக வேண்டும்.
- பசுப்பாலும் அரிசியும் தாராளமாகக் கிடைத்துப் பாற்பொங்கல் சிறக்க வேண்டும்.
- உழவுத் தொழில் மூலம் செல்வம் பெருக வேண்டும்.
- மக்கள் எவ்வித குறையுமின்றி வாழ வேண்டும்.
- நாடு செழிப்புற வேண்டும்.
- காலந்தவறாது மழை பொழிய வேண்டும்.
- உழவுத் தொழில் வளர்ச்சியடைய வேண்டும்.
- மக்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வேண்டும்.

ஆ)

- ஆற்றுநீரானது அள்ளுப்பட்டு வருதல்.
- ஆற்று நீரோடும் பாதையைத் தொடர்ந்து பறவையினம் வருதல்.
- சேறுள்ள இடங்களில் செல்லும் ஆற்றுவெள்ளம் தெளிவுபெற்று வருதல்.
- சிவந்த கால்களையுடைய நாரையினம் இரை தேடி வருதல்.


kalvi.lk

## மாதிரிப் பரீட்சை - 3

### பகுதி – I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 11. | 3 | 21. | 2 | 31. | 2 |
| 2. | 3 | 12. | 1 | 22. | 1 | 32. | 3 |
| 3. | 1 | 13. | 1 | 23. | 1 | 33. | 4 |
| 4. | 3 | 14. | 3 | 24. | 1 | 34. | 1 |
| 5. | 4 | 15. | 1 | 25. | 3 | 35. | 3 |
| 6. | 2 | 16. | 4 | 26. | 1 | 36. | 2 |
| 7. | 2 | 17. | 3 | 27. | 3 | 37. | 2 |
| 8. | 2 | 18. | 1 | 28. | 3 | 38. | 1 |
| 9. | 3 | 19. | 3 | 29. | 3 | 39. | 4 |
| 10. | 2 | 20. | 3 | 30. | 1 | 40. | 1 |

### பகுதி – II

1.

i. பெண்கள் + தொழிலாம் + என்றே + பேசிடுவர் + ஒரு + சாரார்

ii. சீ….. ஒருவர் கூட இன்னமும் எழும்பவில்லை

iii. படிப்போம் / எழுதுவோம் / போவோம்

iv. ஜனாதிபதி, விஹாரமாதேவி, சரஸ்வதி

v. மரபு வழு, வழாநிலை - மயில் அகவும்

vi. எழுவாய் - கற்றாரே / கற்றார்

செயப்படுபொருள் - கற்றாரை

பயனிலை – காமுறுவர்

vii. தம்பி கட்டுரை எழுதினான் - செய்வினை

கட்டுரை தம்பியால் எழுதப்பட்டது – செயப்பாட்டுவினை

viii. இங்கு நூறு என்ற சொல் மயக்கம் தருவதாக இடம்பெற்றுள்ளது. இச்சொல் பாடசாலையின் எண்ணிக்கையைக் குறிக்கின்றதா மாணவர்களின் எண்ணிக்கையை குறிக்கின்றதா என்பதில் மயக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ix. (அ) நீங்கல் பொருள் - ஐந்தாம் வேற்றுமை

(ஆ) ஒப்புப்பொருள் - ஐந்தாம் வேற்றுமை

x. அன்னம் - வள்ளல் வறிய மக்களுக்கு அன்னம் வழங்கினார்.
- அன்னப் பட்சிகள் நீரில் நீந்தும் பொழுது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

அண்ணம் - கமலா நாக்கால் அண்ணத்தை (மேல்வாய்) உரசினாள்.

2. (i) விளக்கக் கட்டுரை

தலைப்பு – உணவே மருந்து / பாரம்பரிய உணவு முறையைப் பேணுவோம் / உணவுப் பாரம்பரியத்தின் முக்கியத்துவம்

- கூழ், கஞ்சி, இலைக்கஞ்சி குடித்தல்.
- ஒடியல்மா, குரக்கன், வரகரிசி என்பவற்றை பயன்படுத்தி நாளாந்த உணவு தயாரித்தல்
- வீட்டில் சமைத்த உணவை உண்ணுதல்
- வடகம், இலை வகைகளை உணவில் சேர்த்தல்


kalvi.lk

விரைவு உணவுகள்

- நாகரிகம் என்ற போர்வையில், பேர்கர், பீற்சா, டீடீஞ எனப்படும் பதப்படுத்திய இறைச்சி என்பவற்றில் அதிக நாட்டம் கொள்ளுதல்.
- இளையவர்களைக் கவரும் வகையிலான சுவையில் பதப்படுத்தி வழங்குவதில் அதிகமாக ஈர்க்கப்படுதல்.
- விரைவு உணவின் பாதக விளைவுகளைக் குறிப்பிடுதல் புறாயிலர் போன்ற கோழி இறைச்சியால் வயது மட்டத்தை மீறிய உடற்தோற்றம், உடற்பருமன் அதிகரித்தல் நோய் எதிர்ப்பு சக்தி இழிநிலையடைதல்.
- நிறமூட்டிகள் மற்றும் கலப்படமான உணவுகளால் பல்வேறு நோய்த்தாக்கங்களுக்கு உட்படுதல்.

பாரம்பரிய உணவு முறையின் சாதகங்களைக் குறிப்பிடுதல்

- உடலுக்குத் தேவையான சக்தி கிடைத்தல்
- கலப்படமற்ற இயற்கையான உணவு முறைகளாகக் காணப்படுதல்
- மூளை, கண் என்பவற்றின் தொழிற்பாட்டை ஆரோக்கிய நிலையில் தக்கவைத்தல்
- நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்தல்
- பக்கவிளைவுகள் அற்றவை

(ii) உரையாடல்

தலைப்பு – நூற்கல்வியின் சிறப்பு / இணையவழிக்கற்றலின் சிறப்பு / நூற்கல்வியும் இணையவழிக்கற்றலும்

உள்ளடங்க வேண்டிய விடயங்கள்

- நூற்கல்வியின் சிறப்புகள்
- வாசிப்பால் மனிதன் பூரணமடைதல்
- நூல் வாசிப்பால் புராதன வரலாறுகள், இலக்கியங்கள் பற்றி அறிதல்
- நவீன பல்துறைசார்ந்த நூல்களை வாசிப்பதால் அறிவு வளர்ச்சியடைதல்
- இணையவழிக்கற்றலும் தேடலும்
- மாணவர்கள் சுதந்திரமாகச் சிந்தித்து செயலாற்றுதல்
- பரிசோதனை செய்து பார்ப்பதால் மேலதிக தேடலுக்கு இட்டுச் செல்லும்
- கண்டுபிடிப்புகள், புத்தாக்கத் திறன் மேம்படுதல்

நூற்கல்வி, இணையவழிக்கற்றல், தேடல் என்பன பிள்ளைகளின் அறிவு வளர்ச்சியில் முக்கிய இடம் வகிப்பதனை ஏற்றுக்கொள்ளும் வகையில் உரையாடல் நிறைவுபெறுவதாக அமையவேண்டும்.

(iii) பொருத்தமான தலையங்கம்

- எமது பாரம்பரியத்தை பேணுவோம்
- எமது மரபே எமக்குப் பாதுகாப்பு
- பாரம்பரிய வாழ்வியலைக் கடைப்பிடிப்போம்
- அவதானிக்க வேண்டியவை
- சபையோரை விளித்தல், வணக்கம் கூறுதல் எடுத்த விடயத்தின் தலைப்பைத் தொடர்புபடுத்திப் பேசுதல்

உள்ளடங்க வேண்டியவை

- வைரஸின் தாக்கமும் அதன் தீவிரத் தன்மைகளும்
- பாரம்பரிய வாழ்வியல் முறையில் அறிவியல் இணைந்திருத்தல்
- மஞ்சள் பாவித்தல்
- சந்தனம் பூசுதல்
- வாழை இலையில் உணவு உண்ணல்
- கிருமிநாசினியாக வேப்பிலை பயன்படுத்தப்படல்
- கை, கால், முகம் கழுவி உட்செல்லல்
- மரண வீட்டிலிருந்து வந்ததும் நீராடுதல் போன்றவற்றை அறிவியல் ரீதியாக விளக்குதல்


kalvi.lk

(iv) பொருத்தமான தலையங்கம்

தாய் நாடு / புலமும் நிலமும் / அகதியின் அவலம்

- சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்படுதல்
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கமைய கற்பனைச் செறிவுடன் எழுதப்படல்
- கதையைத் தொய்வின்றி விறுவிறுப்பாக நகர்த்திச் செல்லுதல்
- இயல்பான கதையோட்டம்
- கதையைப் பிரதான பாத்திரமே கூறுவதாக (தன்மையில்) எழுதுதல்
- பொருத்தமான முடிவைக் கொண்டிருத்தல்

**புள்ளித்திட்டம்**

| | |
|---|---|
| பொருளமைவும் அளவும் | 12 புள்ளிகள் |
| கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் | 6 புள்ளிகள் |
| எழுத்து நுட்பங்கள் | 5 புள்ளிகள் |
| தலையங்கம் | 2 புள்ளிகள் |
| மொத்தம் | 25 புள்ளிகள் |

3. சுருக்கம்

கவனிக்க வேண்டியவை

- பிரதான கருத்து, துணைக் கருத்துக்கள்
- சொந்த மொழி நடையில் எழுதுதல்
- ஒரு பந்தியாக எழுதுதல்
- கட்டுக் கோப்புடன் கருத்துச் சிதைவின்றி எழுதுதல்
- பிரதான அம்சங்களை அனுசரித்தல்
- கூறியது கூறல், உதாரணங்களைத் தவிர்த்தல்
- தொகை மொழிச் சொற்களைப் பயன்படுத்தல்
- கருத்தமைவில் தொடர்ச்சி காணப்படல்
- குறித்த சொல்லளவில் எழுதுதல்

**புள்ளித்திட்டம்**

| | |
|---|---|
| விடய உள்ளடக்கம் | 6 புள்ளிகள் |
| சொல்லளவு | 2 புள்ளிகள் |
| மொழி நடை | 2 புள்ளிகள் |
| மொத்தம் | 10 புள்ளிகள் |

4. கிரகித்தல்

i) மனிதர்கள் எல்லா உயிர்களிடத்திலும் அன்பும் கருணையும் கொண்டிருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே முன்வைக்கப்பட்டது.

ii) கருணை, ஞானம்

iii) வஞ்சனையற்ற தொழில்களில் ஈடுபடல் மதிப்புக்குரியதும் மற்றவர்களால் பழிக்கப்படாததும் மற்றவர்க்கு இன்னா செய்யாததுமான தொழில்களில் ஈடுபடல்.

iv) மரணத்தை விளைவிக்கக் கூடிய ஆயுத வியாபாரத்தில் ஈடுபடுவது தீமை எனக் கூறுவதன் மூலம் யுத்தத்தை வெறுப்பதை எடுத்துக்காட்டலாம்.

v) இரண்டும் பூரண மனித வாழ்விற்கு அவசியம் என்ற வகையில் தொடர்புபடுகின்றன.

**( 2 x 5 = 10 புள்ளிகள்)**

5. பொருத்தமான தலையங்கம்

- சுயகைத்தொழிலின் முக்கியத்துவம் / வாழ்வை மேம்படுத்தும் சுயகைத்தொழில் / சுயகைத்தொழிலும் வாழ்வியல் முன்னேற்றமும்
- துண்டுப்பிரசுர அமைப்பில் எழுதப்படுதல்
- இலகுவான மொழிநடையில் மக்களைக் கவரும் வகையில் எழுதப்படுதல்

Education கல்வி


kalvi.lk

உள்ளடங்க வேண்டியவை

- சுயகைத்தொழில் பற்றிய விளக்கம்
- சுயகைத்தொழிலின் நன்மைகள்
- கிராமிய மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்தில் சுயகைத்தொழிலின் முக்கியத்துவம்
- கிராமிய மேம்பாட்டு மையத்தினால் சுயகைத்தொழிலுக்காக ஏற்படுத்திக்கொடுக்கப்படும் வசதிகள்

**புள்ளித்திட்டம்**

| | |
|---|---|
| அமைப்பு | 5 புள்ளிகள் |
| உள்ளடக்கம் | 7 புள்ளிகள் |
| மொழி நடை | 2 புள்ளிகள் |
| மொத்தம் | 15 புள்ளிகள் |

**அமைப்பு**

| | |
|---|---|
| கவர்சிகரமான தலைப்பு | 2 புள்ளிகள் |
| விளிப்பு | 1 புள்ளி |
| வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும் | 2 புள்ளிகள் |
| | 5 புள்ளிகள் |

**பகுதி III**

1. i. அ. உண்மை — ஆ. வீரகவிராயர்

ii. அ. குகன் — ஆ. மலை

iii. அ. இளமைப் பருவம் — ஆ. மணற்பாவை செய்து விளையாடுதல்

iv. அ. தர்மன் — ஆ. வீமன்

v. அ. மாதம் — ஆ. பாரி மகளிர் வெற்றி முரசுடைய வேந்தர்கள் (மூவேந்தர்)

vi. அ. அடக்கமுடையவர் அறிவற்றவர் என எண்ணுதல் கூடாது. அவர்கள் அமைதியாக இருந்து வெற்றிபெறுவர். — ஆ. உ + ம்: கொக்கு சிறிய மீன்களை ஓடவிட்டுப் பெரியமீன்கள் வரும் வரை அமைதியாகக் காத்திருத்தல்.

vii. அ. ஒளி — ஆ. ஹாசிம் மூத்தம்மாவைச் சிறப்பித்துக் கூறப்படுகிறது

viii. அ. சோழநாடு — ஆ. கொங்கு நாட்டவரை விண்ணுலகம் அனுப்பியதன் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது.

ix. அ. அனைவரையும் சுற்றத்தவராக கருதும்நிலை — ஆ. சுற்றத்தவர்

x. அ. பெண்களை அடக்குபவர்களைக் கண்டிப்பதாக அமைகிறது — ஆ. பெண்கள்

2. i) அ. குற்றத்தையே பார்த்துக் கொண்டிருப்பின் நமக்கு உறவுகள் இல்லாமற் போய்விடும். ஒரு குலத்தில் பிறந்தவர்கள் யாவரும் ஒன்றுபட்டு வாழ்வதே சிறப்பு.
நாட்டிற்காகப் போர் செய்வது இருபக்கத்தினருக்கும் பழியை ஏற்படுத்தும்.

ஆ. வாயுபுத்திரன், குருகுலத்தில் தோன்றிய மன்னர்களுள் பேராற்றல் மிக்க ஆண் சிங்கம் போன்றவன்.

ii) (அ) பாம்பு:- படம் எடுத்து ஆடிய பிறகு குடத்தினுள் புகுந்து கொள்ளும். ஆடும்போது ‘ஸ்’ என்று இரையும். பாம்பு உள்ளே இருக்கும் பெட்டியைத் திறந்தால் தன்தலையை உயர்த்திக் காட்டும்.

பாம்பின் தலையைப் பிடித்தால் பரபரவெனக் கையைச் சுற்றிக் கொள்ளும்.


kalvi.lk

(ஆ) எள்ளு:- செக்கிலாட்டி வரும் எண்ணெய் குடத்தில் சேகரிக்கப்படும். குடத்தில் உள்ள எண்ணெய்யைத் திறந்தால் பார்ப்பவர் முகத்தை பிரதிபலிக்கும்.
தலையில் எண்ணெய் வார்த்தால் பரவியோடித் தலை மண்டையில் ஊறல் எடுக்கும்.
எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தபின் பிண்ணாக்கு பெறப்படும்.

iii) (அ) பெண்கள் கல்வி கற்றால் தமது காதலர்க்குச் சிறந்த துணையாக விளங்குவர். இதனால் பழைமையான இவ்வுலகமும் சிறப்படையும்.

(ஆ) உவமை அணி
தன் காதலியைத் தன் கண்மணிக்கு ஒப்பிடுகின்றார்.
உவமானம்: கண்மணி
உவமேயம் : காதலி
பொதுத்தன்மை : முக்கியத்துவம் / முதன்மைத் தன்மை என்பவற்றைக் குறிப்பிட்டு விளக்குக.

iv) (அ) மூத்தம்மா நோயினால் பீடிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பம்.

(ஆ) சந்தனம் அரைத்து உச்சந்தலையில் பூசுதல்
அண்ணாவி மாமா ஓதுதல்
உச்சவட அவுலியாவுக்கு காசு நேர்ந்து வைத்தல்

v) (அ) மகாத்மா காந்தி தன் நாட்டையும் உடலையும்விட சத்தியத்தை மேலாகக் கருதி வாழ்ந்தார்.

(ஆ) இருவரும் எத்தகைய இடர் வந்தபோதிலும் சத்தியத்தை கைவிடாமை.

3. சினிமா மொழியில் முக்கியத்துவம் பெறும் அம்சங்களைக் குறிப்பிட்டு விளக்க வேண்டும்.
காட்சிப் படிமம் - அழியாத கோலங்கள்
ஒலி - கல்லுக்குள் ஈரம்
படத்தொகுப்பு இதில் இடம்பெறும் காட்சிப்படிமம், மயங்கித் தெளிதல், இருண்டு தெளிதல் என்பவற்றைக் குறிப்பிட்டு விளக்குதல்

**அல்லது**

அ. மாணிக்கவாசகர்

திருவருளே இலட்சியமாகக் கொண்டு பட்டம் பதவிகளையும் பண நிதிகளையும் தியாகம் செய்தார்
"நரகம் புகினும்..."
திருவருட் பயனை விடுத்து திருவருளையே வழுத்தி ஆனந்தமடைந்தவர்.
இலட்சியப் பயனும் மாண்டு போகும் சமத்துவப் புத்தி உடையவர்.
நரகத்தையும் மோட்சமாக மாற்றியமைக்கும் சமநோக்கம் படைத்தவர்.

தருமன்
அறத்தை இலட்சியமாகக் கொண்டவர்
அறத்தின் பயனான முத்தியின்பத்தைத் தியாகம் செய்தவர்
அறநெறிச் செல்வர்களுக்கும் உதாரணமாகத் திகழ்பவர்
முத்தியுலகிற்குச் செல்லும் வழியில் இடம்பெறும் சம்பவத்தைக் குறிப்பிடல்.
இலட்சியப் பயனைத் தியாகம் செய்து இலட்சிய சம புத்தியிலே நின்றவர்.

ஆ. இலட்சிய வாதிகள் இலட்சியத்திற்காக உயிர் விடுவர். இலட்சியவாதிகள் உயிருக்கு இரண்டாம் இடமே வழங்குகின்றனர்.

உயிர் வாழ்வதற்காக இலட்சியத்தைக் கைவிடுவது,
"ஈமஞ்சேர் மாலை போல இழிந்திடப்பட்ட செயலாகும்"

அருச்சுனன் உயிரைத் துறந்தேனும்மானத்தைக் காப்பது இலட்சியவாதிகள் இலட்சியத்திற்கு அளிக்கும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.


kalvi.lk

"ஊனமே யான ஊனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்துமொண் பூணாம்
மானமே புரப்பத் தவனிமே லெவர்க்கும்
வரிசையுந் தேற்றமும் மரபும்"

உண்ணும் உணவினும் பருகும் நீரினும் இனியது இலட்சியம்.
இலட்சியவாதிகள் இன்னல் வந்தபோது இன்னலைக் களைவதற்காக இலட்சியத்தைக் கைவிடுவதா? உயிரை விடுவதா? என்ற இக்கட்டான நிலையில் உயிரைச் சமாதானமாக விட்டு இலட்சியத்தை நிலை நாட்டும் உறுதி பூண்டு நிற்பர்.

நடுநிலையில் நின்று இலட்சியத்தைக் காப்பாற்றுவர். உதாரணம் இராமாயணத்தில் தசரதமன்னன் அரசியல், சத்தியம் என்ற இரண்டு இலட்சியங்களுக்கிடையில் நிலைமாறும் அரசியலைக் கைவிட்டு நிலைமாறாத சத்தியவாக்கிற்கு முதன்மையளித்து உயிரைத்துறக்கின்றான். இங்கு சத்தியத்திற்காக உயிலைத் தியாகம் செய்யும் நிலை எடுத்துக்காட்டப்படுகின்றது.

4. • பணத்தின் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் தந்தையின் வலையில் அகப்படாது தனக்குப் பிடித்த மணாளனுடன் வாழ்வதற்குப் பெண்ணுக்கு உரிமை உள்ளது எனக் கூறுவது.
- மூடர், பேடர், முதியோர், மெலியோர் போன்றவர்களுக்கு அறிவுள்ள பெண்களைத் திருமணம் செய்து கொடுக்க இடமளித்தல் கூடாது.
- கல்வி கற்ற பெண்கள் காதலர்க்குத் துணையாக விளங்குவதால் பெண் கல்வியை வலியுறுத்துகிறார்.
- பெண்களை வீட்டினுள் அடைத்து வைக்கும் கோழைகள் அவர்களைப் பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாகக் கருதி விட்டனர். அத்தனமையிலிருந்து பெணகள் விடுதலை பெறவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துகிறார்.
- மன்னர் அறிமுகமற்ற ஒருவருக்குப் பெண்ணைத் திருமணம் செய்து வைக்கும் நிலையை இல்லாது செய்தல் வேண்டும்.
- பொம்மைத் திருமணம் போல் இமைப்பொழுதில் பெண்ணுக்குத் திருமணம் செய்து வைப்பது கொடுமையானது அதிலிருந்து விடுதலை பெற வேண்டும்.
- ஆணின் குண நலனை விசாரிக்காது ஆணாக மட்டும் இருந்தால் திருமணம் செய்து வைக்கும் நிலையிலிருந்து பெண்கள் விடுதலை வேண்டும்.

**அல்லது**

அ. குற்றாலக்குறவஞ்சியில் குற்றால நாட்டின் சிறப்பினைக் கூறும்போது இயற்கை வளம் சிறப்பிக்கப்படுகிறது.
- கனி வளங்கள் மிகுந்த நாடு
- தேனருவியின் அலை மேலெழும்பிச் சென்று வானின் வழியாக ஒழுக அதனால் செங்கதிரோனின் தேர்க்குதிரைகளும் வழுக்கி விழும்.
- தேவர்களும் விரும்பும் கனிகள் நிறைந்த நாடு
- நீழ்வீர்ச்சி கழங்காடுவது போல் முத்துக்களைச் சொரியும்
- கிழங்கும், தேன் இறால்களும் தினையும் நிறைந்த நாடு
- செண்பக மலர்களின் நறுமணம் வானுலகம் வரை செல்லும்
- மழையும் விளைச்சலும் சிறந்து விளங்கும் நாடு
- கரும்பும் தேன் இறால்களும் தினையும் நிறைந்த நாடு
- கரும்பும் செந்நெல்லும் நிறைந்த நாடு
- தற்காலக் கவிதைகளில் கவிஞர் அகளங்கன் குழந்தையென எனது மனம் குதூகலிக்கும் கவிதைகளில் மருத நிலத்தின் இயற்கை எழில் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.
- மாங்கனிகள் நிறைந்த நிலம்
- பசுங்குயில்கள் பாட்டிசைக்கும் மயில்கள் தோகை விரித்தாடும்
- வயல்களும் அருவியும் நிறைந்த நிலம்
- ஒற்றுமையாகத் தம் இனத்துடன் இரையுண்ணும் காகக் கூட்டம்
- பகலவனின் வீரம், கார்கால மாலை, குஞ்சுகளுக்கு இரையூட்டும் குருவிகளின் பாசம்
- தூய்மையான வானில் பூரண சந்திரன் நட்சத்திரங்கள் சூழ வரும் அழகு


kalvi.lk

- கொஞ்சி விளையாடும் அணில்கள்
- ஒழுங்காகச் செல்லும் எறும்புகள்
- குதித்தோடி வரும் அருவியின் சுகம்
- தாமரை நிறைந்த குளம்

5. • தமிழ் நாட்டிற்கு அப்பாலிருந்து வந்த சமயங்கள், தத்துவங்கள் தமிழ்நாட்டிற் தடையின்றிப் போதிக்கப்பட்டன.
   - திருக்காவலூர்க் கலம்பகம், தேம்பாவணி, சீறாப்புராணம்
   - கிறிஸ்துவின் அருள் வேட்டல், புத்தரின் அருள் வேட்டல் போன்ற இலக்கியங்களை திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் பாடியமை.
   - தமிழில் உள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும் ஆழத்திலும் பரப்பிலும் இத்துணை இலக்கியம் வேறெந்த மொழியிலும் இல்லை.
   - பிறநாடுகளிலிருந்து வந்த சமய குரவர் தமிழர் பண்பாட்டைக் கடைப்பிடித்து தமிழர் மரபின் படி இலக்கியம், இலக்கணம், படைத்தமை.
   - உ-ம் வீரமாமுனிவர், கால்டுவெல் ஐயர், போப் ஐயர்

6. அ. சோழநாட்டின் வளம்
   - குரங்குகள் இளநீர்க் காய்களை எடுத்து வீசும் செயல்
   - உழவர்கள் குரங்குகளுக்கு சங்குகளை எடுத்து வீசுதல்
   - கனிவளம் நிறைந்த நாடு

   ஆ. புலவரின் கவித்துவம்
   - எதுகை அணி கையாளப்பட்டுள்ளமை
     பங்கம், சங்கு, கொங்கர், வெங்கட்பிறை
   - உருவக அணி கையாளப்பட்டுள்ளது
     விழிவேல்
   - பிறை என்ற சொல்லை மூன்று பொருள் வரும் வகையில் பாடியுள்ளமை
     வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும் மெலிந்தப் பிறைக்கும்
     வெண்மையுடைய பிறைச்சந்திரன் ஒளியாலும்
     கரும்பை வில்லாகக் கொண்ட மன்மதன் எய்த அம்பினாலும்
     உடல் தளர்ச்சியுற்று விழியாகிய வேலையுடைய பெண் கண்ணீர் சிந்துகின்றாள்.

7. அ. எழுத்தறிவின் முக்கியத்துவம்
   - உணர்வு வெளிப்பாட்டின் எழுத்தறிவு அவசியம்.
   - காதல் உணர்வை எழுத்தில் வெளிப்படுத்த முடியாதிருத்தல்.
   - எதிர்காலத்தில் எமது இருப்பை / வாழ்வை நிலை நிறுத்துவதற்கு அவசியம்.
   - இளமை, அழகு என்பன இருந்தாலும் எழுத்தறிவின்மையால் இவை பயனற்றுப்போகும்.
   - வாழ்வு சீறி ஓடும் நதியாக இருப்பதற்கு எழுத்தறிவு முக்கியம். எழுத்தறிவு இல்லையாயின், வாழ்வு சிறுதுளியாக ஒடுங்கிவிடும்.

ஆ. கவிஞர் கையாண்ட உத்தி
- ஒரு இளைஞனை முன்னிறுத்திக் கூறுதல்.
- இளைஞன் காதல் உணர்வை வெளிப்படுத்த முடியாமையைக் கூறுதல்.
- விரல் நாட்டுவைப்பதால் பொதுவெளியில் அவமானத்திற்குள்ளாகும் நிலையை எடுத்துரைத்தல்.
- அழகும் இளமையும் இருந்தும் தன் உணர்வை வெளிப்படுத்தத் தெரியாமையால் எதிர்காலம்
- கேள்விக்குள்ளாகும் நிலையை முன்வைத்தல்.
- இலகுவான மொழிநடையில் இளையோர் வாசித்து விளங்கிக் கொள்ளும் வகையில் எழுதியமை.


kalvi.lk

## மாதிரிப் பரீட்சை - 4

### பகுதி – I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 11. | 3 | 21. | 3 | 31. | 2 |
| 2. | 2 | 12. | 1 | 22. | 2 | 32. | 3 |
| 3. | 1 | 13. | 4 | 23. | 1 | 33. | 2 |
| 4. | 1 | 14. | 1 | 24. | 2 | 34. | 4 |
| 5. | 2 | 15. | 2 | 25. | 4 | 35. | 4 |
| 6. | 4 | 16. | 3 | 26. | 1 | 36. | 1 |
| 7. | 4 | 17. | 4 | 27. | 4 | 37. | 2 |
| 8. | 3 | 18. | 1 | 28. | 3 | 38. | 2 |
| 9. | 2 | 19. | 3 | 29. | 2 | 39. | 2 |
| 10. | 4 | 20. | 3 | 30. | 4 | 40. | 4 |

### பகுதி – II

i. நைவீர் + அலீர் + மைந்தீர் + இனி + துயரால்

ii. உவமை அணி
உவமானம் - பூசணிக்காய்
உவமேயம் - எழுத்துக்கள்
பொதுத்தன்மை - குண்டு குண்டாக இருத்தல்

iii. எழுவாய் - நீ
பயனிலை - விரும்பு

iv. அறை – வீட்டின் அறைகள் அனைத்தும் மிகவும் சுத்தமாக இருந்தன.
அறை – அப்பா சுவரில் ஆணி அறைந்தார்.

v. “ இந்தப் புத்தகம் இங்கே இங்கு எப்படி வந்தது?”

vi. அர்த்தசாஸ்திரம் கௌடில்யரால் எழுதப்பட்டது.

vii. பார் + த் + த் + ஆன்

viii. 1. பிரதான துணைக்கருத்துக்களை தெரிவு செய்தல்.
2. பந்தி பிரித்து / உப தலைப்பிட்டு எழுதுதல்
3. சட்டகம் அமைத்தல்

ix. மீன் குத்தும் தடி - கிழக்கு பிரதேச வழக்கு சொல்

x. அடைமழை பெய்தும் குளங்கள் நிறையவில்லை
அடைமழை பெய்தது எனினும் குளங்கள் நிறையவில்லை

2. i. விளக்கக் கட்டுரை

தலைப்பு – கொரோனா வைரசில் இருந்து பாதுகாப்பு பெறுவோம். (இவை போன்ற தலைப்புக்கள்

- கொரோனா வைரஸ் பற்றிய அறிமுகம்
- சமூக இடைவெளி, சுயசுத்தம் பேணுதல்
- முறையான கைகழுவுதல்
- அடிக்கடி கைகழுவுதல்
- முறையான விழப்புணர்வு
- சுயபாதுகாப்பை பேணுதல்


kalvi.lk

ii. உரையாடல்

தலைப்பு - இலவச புத்தகங்களை முறையாகப் பயன்படுத்தவோம் (இவை போன்ற தலைப்புகள்)

- உரையாடலில் இருவர் பங்குபற்றல்
- உரையாடல் அமைப்பு காணப்படல்
- ஒருவர் கருத்தை இன்னொருவர் உள்வாங்கி தர்க்க ரீதியாக உரையாடல் அமைதல்
- இலவச பாடப்புத்தகங்களை முறையாக பயன்படுத்தல்
- இலவச பாடப்புத்தகங்களின் பெறுமதி
- அரச சொத்துக்களை பாதுகாத்தல்

iii. சொற்பொழிவு

தலைப்பு – டெங்கு ஒழிப்பின் அவசியம் (இது போன்ற தலைப்புகள்)

- சபையோரை விளித்தல் வணக்கம் கூறுதல் பேசப்போகும் தலைப்பை தொடர்புபடுத்தி பேசுதல்
- சூழலை சுத்தமாக பேணுதல்
- இடையியே சபையோரை விளித்தல்
- முறையான கழிவகற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- நோய் தொற்றுக்களில் இருந்து பாதுகாப்பு
- பெறுவதன் அவசியத்தை வழியுறுத்தி முடித்தல்

iv. சிறுகதை

தலைப்பு – கல்வியின் சிறப்பு (இது போன்ற பொருத்தமான தலைப்புகள்)

- சிறுகதைக்குரிய அமைப்பு பேணப்படல்
- வழங்கப்பட்ட கருப்பொருளுக்கேற்ப கற்பனை செறிவுடன் எழுதப்படல்
- கதையை சுவைபடவும் விறுவிறுப்பாகவும் நகர்த்தி செல்லல்
- இயல்பான, கவர்ச்சியான கதையோட்டம்
- கதைக்கு பொருத்தமான மொழிநடை
- இயல்பான பாத்திர உரையாடல்
- படிப்பினையை மறைமுகமாக வெளியிடல்
- பொருத்தமான முடிவு

3. சுருக்கம்

இசைப்பாடல்கள் தாய்மொழியில் இருந்தாலே மக்கள் பொருளுணர்ச்சியுடன் இசையை நயத்தல் இயலும். பொருளறியாத வேற்று மொழிப்பாடல்களும், பாட்டில்லாத இசையும், கருவிகளில் மீட்கப்படும் சீதமும் நம்முள் ஒத்தன. இசையரங்குகளில் வேற்றுமொழிப் பாடல்களைக் கேட்போர் சிலர் தலையசைப்பது வெறும் போலி நடிப்பேயாம். இசைப் பாடல்களைப் பொருளுணர்ந்து அனுபவிப்பதோடு அவை மக்களின் தாய்மொழியிலே இருக்கவேண்டும்.

4. i. படிக்காத இளைஞரை பற்றி

ii. இளமை பருவம் / வாலிப பருவம்

iii. கையொப்பம் கூட இடதெரியாமல் அவ் இளைஞன் எவ்வாறு எதிர்கால வாழ்வை எதிர்நோக்குவான் என்று கவிஞர் ஆதங்கப்படுகிறார்.

iv. உணர்வுகளின்றி வெறுமனே சிரிக்கின்றான். எவ்வித உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தாமல் தனது இயலாமையை கூட உணர முடியாமல் இருக்கும் இளைஞனின் நிலையை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

v. அலுவல் - வேலை
இளமை - வாலை


kalvi.lk

5. கடிதம்

அமைப்பு – உள்ளடக்கம் - மொழிநடை

உள்ளடக்கம்

- கொரோனா தொற்றின் விளைவுகள்
- சுயபாதுகாப்பின் அவசியம்
- தமது உயிரை பாதுகாப்பதன் அவசியம்
- சுயசுத்தத்தை வழியுறுத்தல்

பகுதி III

i

அ. யானையானது பலகாலம் நன்றாக பழகி இருந்தாலும் அது தன்னை வளர்த்த பாகனையே கொல்லும் துணிவுடையது. ஆகவே யானை போன்றவரின் நட்பை விலக்கி கொள்ளவேண்டும்.

ஆ. நாயானது தன்னை வளர்த்தவர் தன்மேல் கோபம் கொண்டு எறிந்த ஆயுதம் தனது உடனில் தைத்திருந்தாலும் அது அன்பின் குறியாக வாலை ஆட்டும். எப்போதும் நன்றி விசுவாசம் உடையதாக இருக்கும். ஆகவே நாய் போன்றவரின் நட்பை தழுவுதலே மேன்மையானது.

ii. அ. உவமை

ஆ. அடைந்தது / நெருள்கிற்று

iii. அ. சிவபெருமான் / இறைவன்

ஆ. எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும்

iv. அ. நித்தியம், நைமித்தியம், காமியம்

ஆ. நான் தினந்தோறும் மூவகை வழிபாடுகளும் இடம்பெறுதல்

பிறப்பு, வாழ்வு, இறப்பு என்ற மூன்று நிலைகளிலும் நன்மை விளைவிக்கும் சிவநாடு.

மூன்று புவனங்களால் வலஞ்செய்து போற்றும் நாடு.

v. அ. தேவர்

ஆ. நீதி தவறுதல்

vi. அ. தருமர்

ஆ. பிற உயிர்களையும் தன்னுயிர் போல கருதுதல்

vii. அ. “கையறியா பேதை வினைமேற் கொளின்
பொய்படும் ஒன்றோ புனை பூணும்”

ஆ. அறிவிலி

viii. அ. இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்கன், குகன்

ஆ. அயோத்தி இராட்சியம் / அயோத்தி நாடு

ix. அ. ஆந்தை

ആ. ஓட்டமாவடி அறபாத்

x. அ. வில்லி பாரதம்

ஆ. போர் செய்தல்


kalvi.lk

02. i) அ. திருகுற்றால நாட்டில் எருமைமாடுகள் கூட்டம் கூட்டமாக நீர்துறையில் இறங்குகின்றன. அவ்வாறு இறங்கிய எருமை மாடுகள் தனது மடியில் சுரந்த பாலில் மிகுதியில் அவை நீரில் பாலை சொறிகின்றன. பாலை வாளை மீன்கள் பருகி மகிழ்கின்றன. அத்தகைய வாளை மீன்கள் பாய்ந்து பலா கனிகளை தாக்கும் அளவிற்கு மிக்க மகிழ்ச்சியோடு விலங்குகள் உலாவுகின்ற ஆரிய நாடு குற்றால நாதரின் நாடாகும்.

ஆ. பாலை பருகிய வாளைமீன்கள் பாய்ந்து பலாகனிகளை தாக்க, வாசம் வீசுகின்ற கூழை பலாகனிகள் வாழைமரங்களை தாக்க, அத்தகைய வாழை சாய்ந்து தாழையை தாக்க, வரும் விருந்தினருக்கு சோறிட்டு உபசரிப்பதை போல வாழை தன் குருத்தை விரித்து தாழை சோற்றை ஏந்தி கொண்டிருக்கும் வளம் மிக்க நாடாகும். இங்கு வாழை, கூழைபலாக்கனி, தாழை என அயற்கை அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ii) அ. உவமை அணி

ஆ. இடி இடித்து, மின்னல் மின்னி, மழை பொழிந்தது போல காளமேகபுலவர் வனப்பு மிக்க கவிதைகளை பாடுவதற்காக புறப்பட்டார்.

iii) அ. விதியை நோவர்
தம் நண்பர்களை தூற்றுவர்
கோபத்தால் பகைவர்களை ஏசுவர்
சதிகள் செய்வர்
சாதகங்களை புரட்டுவர்
பொய் சாத்திரம் பேசுவர்

iv) அ. தூல வடிவம், சூக்கும வடிவம்
ஆ. அபின்னம்

v) அ. பனைமரத்தின் இனிமையான திரண்ட பழத்தின் விதையானது வானுயற மரமாக வளர்ந்திருந்தாலும் அது ஒருவரிற்கும் நிழல் தராது. ஆகவே உருவில் பெரியோரெல்லாம். பெரியோரும் அல்லர்.

ஆ. தெளிந்த நீர் நிறைந்த குளத்திலே வாழ்கின்ற சிறிய மீனினது சினையை விட சிறியது என்று ஆலம் விதையின் தோற்றத்தை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். இங்கு சிறிய மீனின் சினைக்கு ஆலம் விதையை ஒப்பிட்டு காட்டியுள்ளார்.

03. அ. பேதையின் இயல்புகள்
- தனக்கு நன்மையானதை கைவிட்டு கேடு தருவனவற்றை கைவிடுதல்
- தனக்கு பொருந்தாத ஒழுக்கத்தில் ஆசைகொள்ளல்
- நாண வேண்டியவற்றிற்கு நாணாமை தக்கவற்றை நாடாமை
- அன்பு செலுத்தாமை
- நன்மை ஒன்றையும் விரும்பாமை
- ஏழு பிறவியிலும் பெற்று வருந்துவதற்குரிய நரக துன்பத்தை பேதை ஒரே பிறவியில் உருவாக்கி கொள்வான்.
- பேதைகளுக்கு செல்வம் கிடைத்தால் அவரது உறவினர்கள் பசியால் வருந்த, ஏனையோர் பயன் அனுபவிப்பர்.

ஆ. பேதையின் நட்பு
- பேதையின் நட்பு பிரிவை ஏற்படுத்தினாலும் அது துன்பம் தராது ஆகவே பேதையின் நட்பு மிக இனியது.
- பேதையிடம் செல்வம் கிடைத்தால் அவனுடன் தொடர்பில்லாதவர்கள் நன்மை அனுபவிப்பர். ஆகவே அத்தகைய நட்பு பயனற்றது

இ. பேதையின் தொழில்
- தனக்கு பொருந்தாத ஒழுக்கத்தில் ஆசை கொள்ளுதல்
- நாணவேண்டியவற்றுக்கு நாணாமை
- தக்கவற்றை நாடாமை
- நன்மை ஒன்றையும் விரும்பாமை
- எவற்றிலும் அன்பு செலுத்தாமை


kalvi.lk

அ. இலட்சியங்களை கடைப்பிடித்தல்
- இலட்சியத்தின்படி வாழ்தல்
- சத்தியம் எனும் தர்மத்தை இலட்சியமாக கொண்டு வாழ்தல்
- நீதியை நிலைநாட்டல்
- இலட்சியத்தால் உயர்வு அடைதல்

ஆ. இலக்கியங்களை படிப்பதன் அவசியம்
- எதிர்கால வாழ்வை வளமடைய செய்தல்
- மொழிவளத்தை விருத்தியுற செய்தல்
- இலக்கிய கதாபாத்திரங்களின் பண்புகளை விளங்கி கொள்ளல்

04. அ. புலம்பெயர்வின் அவலம்
- பாரியின் பறம்பு மலையை கைப்பற்றியமையும் பாரியின் இறப்பின் பின்னர் பாரி மகளிர் மலையை விட்டு புலம்பெயரும் சூழல் ஏற்படல்.
- அவர்கள் கபிலருடன் புறப்படுகின்ற சூழலை அடிப்படையாக கொண்டு புலம்பெயர்வின் அவலம் வெளிப்படல்.
- நாட்டுப்புற பாடல் ஊடாக மன அவலம் வெளிப்படல்
  - அழகான நடைவண்டி
  - அசைந்தாடும் கிலுகிலுப்பை

ஆ. பறம்பு மலையின் சிறப்புக்கள்
- பால் வளர்க்கும் நிலவு
- மணம் வீசும் மலைபூக்கள்
- புன்செய் நிலங்கள்
- பாசம்மிக்க குற மக்கள்

**அல்லது**

அ. கோசலை

உறவினர்களும் தேவர்களும் வணக்கும்படியான கோசலையை குகன் வணங்கி, பரதனை பார்த்து இவர் யார் என்று கேட்க அரசர்கள் தங்கி இருக்க கூடிய முன்றிலையும் உடைய சக்கரவர்த்தியான தசரதனின் மூத்த மனைவி, மூவுலகையும் படைத்த பிரம்மனை முன்னே தோற்றுவித்தவனான திருமலை மகனாக பெற்றதால் அடைய வேண்டிய அரச செல்வத்தை இழந்த பெரியவள் என்று கூறினான்.

ஆ. சுமித்திரை

முறைகடவாத வாய்மையை நிலைநிறுத்திய சக்கரவர்த்தியின் இளந்தேவி, கோசலையின் பக்கத்திலே நின்ற தருமமே என்று சொல்லத்தக்கவள் எல்லோருக்கும் தெய்வமான இராமனுக்கு தம்பி உள்ளான் என உலகத்தார் சொல்லும்படி எக்காலத்தும் அவரை பிரியாத இலக்குவனனை பெற்ற பெரியாள் என பரதன் சுமித்திரையை அறிமுகம் செய்தான்.

இ. கைகேயி

துன்பங்களை எல்லாம் தோற்றுவித்தவள், பழியாகிய குழந்தையை வளர்த்தவள், துன்பங்களுக்கெல்லாம் காரணமானவள் ஆனால் துன்பமற்ற நீக்கமற நிறைந்த முகத்தை உடையவள் என கைகேயியை குகனுக்கு பரதன் அறிமுகப்படுத்தினான்.

05. அ.
- மட்டுருக்கினால் அரிவாள் செய்து, மாவிலங்கம் பிடி சீவி இறுக்கி, வெள்ளி தகட்டினால் விரல் கட்டமிட்டு அரிவாள் கொண்டு அருவி வெட்டுகின்றனர்.
- வளர்த்தருவிகளை வேகமாக வெட்டுகின்றனர்.
- கண்ணூறு, நாவூறு படாமல் காக்க வேண்டுகின்றனர்.
- இளைஞர்களின் துடிப்பு, வேகம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.


kalvi.lk

ஆ. காதல் பாடல்

- தலைவியை ஆசைக்கிளி, மருதங்கிளி, வங்கிசம் என விளித்தல்.
- அவளின் தனிமையை போக்குதல்.
- நிச்சயம் அடைவேன் என வாக்களித்தல்.
- தலைவியின் தேவைகளை தீர்க்க முனைதல்.

06. அ. திருக்குற்றால மலையின் சிறப்புக்கள்

- மாதம் மூன்றும் மழையுள்ள நாடு
- வருஷம் மூன்றும் விளைவுள்ள நாடு
- வேதம் மூன்றும் பயனுள்ள நாடு
- தேவர்கள் வாசம் செய்யும் நாடு
- மர்தியினங்கள் இன்பமுடன் வாழும் நாடு
- பலவிதமான கனிமரங்கள் கொண்ட நாடு
- வயல்வெளிகள் கொண்ட நாடு

ஆ.

- வளைந்த இளம்பிறையை சடையில் தரித்தவர்.
- குறும்பலாவின் அடியில் கோயில் கொண்டிருப்பவர்
- நாத தத்துவத்தின் மெய்பொருளதக விளங்குபவர்
- மங்கல பேரிகை ஒலிக்கும் நாட்டினை உடைய மேலானவர்

07. (அ) இளமை பருவ இயல்புகள்

- வண்டற்பாவைக்கு பூவை சூட்டி விளையாடும் மகளிரோடு குளிர்ந்த பொய்கையில் அவர்களுடன் தழுவிய வழி தழுவியும் அசைந்த வழி அசைந்தும் விளையாடுவர்.
- மருதமர கொம்பில் ஏறி அங்கிருந்து நீர்க்கரையில் உள்ளவர்கள் பயப்படும்படியாகவும், நீர்திவலைகள் சிதறும்படியாகவும் துடும் என குதித்து விளையாடுவர்.
- ஆழ்துறைக்கு சென்று அடியில் உள்ள மணலை எடுத்து ஆராய்ந்து பார்க்கும் இளமை பருவம்.
- இப்போது நினைக்கும்போது இரங்கத்தக்க நிலையை தோற்றுவிக்கின்றது.

(ஆ) முதுமை பருவ இயல்புகள்

- பூண் செறிந்த தடியையும் ஊன்றி இருத்தல்.
- உடல் நடுக்கமுறுதல்.
- இருமலுக்கு இடையே சொற்களை பேசுதல்.
- தள்ளாடிய நிலையில் முதுமைபருவ இயல்புகளை எண்ணி கவலை கொள்ளுதல்.


kalvi.lk

## மாதிரிப் பரீட்சை - 5

### பகுதி – I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 3 | 11. | 3 | 21. | 2 | 31. | 3 |
| 2. | 1 | 12. | 3 | 22. | 1 | 32. | 1 |
| 3. | 3 | 13. | 1 | 23. | 2 | 33. | 2 |
| 4. | 3 | 14. | 2 | 24. | 2 | 34. | 3 |
| 5. | 4 | 15. | 3 | 25. | 3 | 35. | 2 |
| 6. | 4 | 16. | 1 | 26. | 3 | 36. | 1 |
| 7. | 2 | 17. | 2 | 27. | 1 | 37. | 2 |
| 8. | 2 | 18. | 4 | 28. | 4 | 38. | 3 |
| 9. | 2 | 19. | 3 | 29. | 1 | 39. | |
| 10. | 1 | 20. | 3 | 30. | 4 | 40. | 1 |

### பகுதி – II

1.

i. உழைத்து + உண்ணாமல் + சேமித்து + மாயும் + இவர்க்கு + அறிவுரை + கூறுங்கள்

ii. கூடு
பெயர் - பறவைக்கூடு
வினை – சேர்தல் (கூடுதல்)

iii. எழுவாய் - மழை
பயனிலை – பெய்தது

iv. நீதிமன்ற பிரசித்தி பெற்ற வழக்கறிஞர் கைதிகளுக்காக வாதாடி விடுதலை வாங்கிக் கொடுத்தார்.

v. பத்திரிகைகள் இணையத்தின் மூலம் என்னால் வாசிக்கப்பட்டது.

vi. திலகன் சிங்கள மொழி பேசுவதிலும் தமிழ் மொழி எழுதுவதிலும் வல்லவர்.

vii. தலைமைத்தொடர்
விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்
சார்புத் தொடர்
நோயெதிர்ப்புச் சக்தி குறைவானால் மனிதர்களுக்கு கொரனா நோய் தொற்றும் வாய்ப்பு ஏற்படும்.

viii. தலைப்பு, அறிமுகம், இடம், காலம், நேரம், பிரதமவிருந்தினர், ஆரம்பம், வரவேற்புரை

ix. நட + த்(ந்) + த் + அன் + அன்
பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்

x. பொருட்டு (1) நிமித்தம்
(2) ஆக

2. i. கொரனா பாதிப்பிலிருந்து விவசாய தரப்பினரைப் பாதுகாத்தல்
அமைப்பு – முகவுரை – உடல் - முடிவுரை

பாதிப்புக்கள்
- பயிர் உற்பத்தி சந்தைப்படுத்த முடியாமை / உள்ளீடுகள் பெறமுடியாமை
- பயிர்ச் செய்கைக்காகத் தொழிலாளரை பெறமுடியாமை
- ஊரடங்கு சட்டத்தினால் போக்குவரத்து பாதிப்பு / மக்கள் அச்சப்படல்
- கடைகள் திறக்கப்படாமையால் சந்தைப்படுத்தமுடியாமை / தட்டுப்பாடு


kalvi.lk

மாற்றுவழி

- உள்ளூர் மக்களுக்கு சந்தைப்படுத்தல்
- உணவுப் பொருட்களை சேமிக்க வழிகள் செய்தல் / குளிரேற்றி வழங்கல்
- உணவுப் பொருட்களை நீண்டகாலம் பாதுகாக்க வழி வகைகளை விவசாயிகளுக்கு பயிற்றுவித்தல்
  உ+ ம் - பழம் ஜாம் (பழப்பாகு)
- அரசாங்கம் விவசாயிகளிடம் சென்று கொள்வனவு செய்தல்
- அரசு மக்களுக்கு நிவாரணம் வழங்கல்

ii. உரையாடல் - இணையவழிக் கல்வியும் வகுப்பறைக் கல்வியும்

- இணைய வழி கல்வியின் அனுகூலங்கள்
- இணைய வழி கல்வியின் பிரதிகூலங்கள்
- நேரடி வகுப்பறை கல்வியின் அனுகூலங்கள்
- நேரடி வகுப்பறை கல்வியின் பிரதிகூலங்கள்

iii. மேடைப்பேச்சு - சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம்

- சபையை விளித்தல்
- நிகழ்கால உரை
- சூழல் பாதிப்பு வழிகள் - (நீர் / நிலம் / வளி / சுற்றாடல்)
- சூழல் பாதுகாப்பு செயற்பாடுகள்
  நீர் - சமூகம்
  நிலம் - குடும்பம் ஆற்றவேண்டிய பங்குகள்
  வளி - அரசு
  சுற்றாடல் - நிறுவனம்

முடிவுரை - சூழலைக் காப்போம் சுகமாய் வாழ்வோம்

iv. சிறுகதையின் பொதுவான அம்சம்

- கதைக்கரு
- கதை நிகழ்களம்
- கதை மாந்தர் (பாத்திரம்)
- கதைப்பின்னணி
- முடிவு

என்பன பொருந்தி அமையும் வகையில் சிறுகதை அமைதல் வேண்டும்.

3. இடம்பெற வேண்டிய பிரதான கருத்துக்கள்

- இனத்தின் பெருமையையும் சிறப்பையும் பண்டைய இருப்புக்கள் வெளிப்படுத்தும்
- தமிழ்மொழியின் பெருமையை இலக்கண, இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.
- இவை பண்பாட்டு, விழுமியங்களை அறியவும், புரியவும் உதவுவது.
- எமது சமுதாயம் வாழ வேண்டிய முறையையும், பண்டைய காதலையும் வீரத்தையும் கூறுகிறது.
- இந்நூல்களை கற்பதும் பேணிப் பாதுகாப்பதும் தமிழராய் பிறந்த எமது கடமையாகும்.
- இதில் தினையளவு திருடப்பட்டாலும் அதற்கு குரல் கொடுக்க முன்வரவேண்டும்.

4. i. விருப்புடன் கற்றல் / களிப்புடன் கற்போம்
   ii. தரம் பரீட்சைக்கு உள்ளாகியிருப்பதாக நினைக்கும்போது கல்வியின்பத்தை இழக்கிறார்கள்.
   iii. கல்வி என்றால் இன்பம் என்ற இயற்கையான உற்சாகம் நிரம்பிய பாவனை தோன்றி கல்வியை விரும்பிக் கற்கும்போது மாணவர்கள் தம்மை மறந்து கற்கின்றனர்.
   iv. உடற்பயிற்சி ஒரு கடமையல்ல இன்பம், பொழுதுபோக்கு என்ற உணர்வு ஏற்படும்.
   v. கல்வி என்பது தண்டனை என்ற எண்ணமே இன்றைய மாணவர் மத்தியில் பரவியிருக்கும் எண்ணமாகும்.


kalvi.lk

5. கடிதம் - (தொழில்முறைக் கடிதம் அமைப்பு)

அமைப்பு - 04 புள்ளிகள்
உள்ளடக்கம் - 08 புள்ளிகள்
மொழி நடை - 03 புள்ளிகள்

**அல்லது**

துண்டுப்பிரசுரம்

அமைப்பு

- கவர்ச்சியான தலைப்பு
- பொதுவான விளிப்பு
- விடய விபரிப்பு
- தகவலை வெளியிட்டோர் விபரம்

விடயம்

- கொரனா
- பாதுகாப்பு முறைகள் (கை கழுவுதல், முகக்கவசம்)
- பாதுகாப்பின்மையால் ஏற்படும் விளைவுகள் (தனிமைப்படுத்தல் / இறப்பு)
  (பொருத்தமான படங்கள் வரையலாம் - புள்ளிகள் இல்லை)
- துண்டுப் பிரசுரம் வெளியிடுவோர் விபரம்
  (உ + ம்: சுகாதார அமைச்சு, நலன்புரிக்கழகம்)

## பகுதி III

1.

i. (அ) நித்தியம், நைமித்தியம், காமியம்

(ஆ) பிறப்பு, வாழ்வு, இறப்பு

ii. (அ) சினிமா திரையில் - நாடகம் மேடையில்
சினிமா மொழி மூலம் சொல்வது - தொழினுட்ப வளர்ச்சியின் படைப்பு
நாடகம் தவறுவிட்டால் திருத்தமுடியாது – சினிமா திருத்தி படமாக்ககூடியது

(ஆ) புராண நாடகங்களே படமாக்கப்பட்டன
நாடகம் பார்ப்போரின் கோணத்திலிருந்து அவை படமாக்கப்பட்டன
இயக்குனர், நடிகர், வசனகர்த்தா, பாடலாசிரியர், நாடகத்துறையிலிருந்தே வந்தவர்கள்
பின்னணி இசையானது பேசும் போதும் ஒலித்து கொண்டிருத்தல்

iii. (அ) பாண்டிமாதேவி - கண்ணகி

(ஆ) வேண்மாள் / சேரமாதேவி

iv. (அ) புறநானூறு

(ஆ) எந்தை - பாரி

(இ) எம்குன்று - பறம்புமலை

v. (அ) வீமன்

(ஆ) தருமன்

vi. (அ) கரும்பின் இறைவன் - மன்மதன்

(ஆ) நீர்


kalvi.lk

vii. (அ) இளந்தாரிமார் - இளைஞர்கள்
காரும் - காக்க வேண்டும்
(ஆ) நாவினால் செய்யும் குற்றம்

viii. (அ) கிறிஸ்தவம் - தேம்பாவணி
பௌத்தம் - மணிமேகலை
இஸ்லாம் - சீறாப்புராணம்
சமணம் - சிலப்பதிகாரம்
(ஆ) வண பிதா தனிநாயகம் அடிகள்

ix. (அ) தசரதன்
(ஆ) சுமித்திரை

x. (அ) விசுவநாதபிள்ளை
(ஆ) சேர்.பொன் இராமநாதன், பிறிற்றோ

2. i. (அ) மலையகப் பிரதேசம்
(ஆ) இங்கு இறந்தவர்களுக்கு அவர் நினைவாக கல்லறை கூட கட்ட முடியாதவர்களாக இருப்பதை எண்ணி வெட்கப்படுகிறார்.
(இ) இறந்தவர்களை புதைத்த இடத்தில் மனிதனால் எதுவும் செய்யமுடியாத நிலையில் இறைவன் அதை மறைப்பதற்காக பசும்புல்லை வளரச் செய்து விடுகின்றான்.

ii. (அ) பகைமை என்ற நெருப்பை மூட்டி வளர்த்தால் மூங்கிற் காடு பற்றி எரிவதைப் போல் இருசாராரும்
போர்மூண்டால் முற்றாக அழிந்துவிடுவோம். எனவே பாண்டவரும் கௌரவரும் ஒன்றாக
சேர்ந்துவாழ சமாதானம் உண்டாகும்படி தூது செல்வாயாக என கண்ணனை வேண்டினான்.
(ஆ) உவமை அணி
உவமானம் - மூங்கில்காடு பற்றி எரிதல்
உவமேயம் - பாண்டவரும் கௌரவரும் அழிதல்
உவமை உருபு – என்ன
பொதுத்தன்மை - முற்றாக அழிதல்
(இ) அறத்தின் உருவம் - தருமன்
உயிர் அணையாய் - கிருஷ்ணன் / கண்ணன்

iii. (அ) தாழும் உள்ளத்தார்
சோர்வினர்
ஆடுபோல தாவி தாவி பல பொருள் நாடுவோர்
வருகின்ற இடையூற்றுக்கு அஞ்சுவோர்
தாம் விரும்பியதை அடையமாட்டார்கள்.
(ஆ) எம்மை சூழ்ந்திருக்கும் உலகில் காணும் தோற்றம் எதனையும் மனம் விரும்புவதாலும் அது எமது ஆழமான நெஞ்சத்திற்குள் நிலைத்து விடுவதாலும் இன்ப, துன்பத்திற்கு காரணமாக அமைகின்றது.
(இ) சுப்பிரமணிய பாரதியார்


kalvi.lk

iv. (அ) அகத்திணை இலக்கியங்கள்

(ஆ) பாரதிதாசன்

(இ) தமிழ்மொழி

v. (அ) இலக்கியங்கள், இலட்சியங்கள், இலட்சியவாதிகள் ஒருபோதும் அழிந்துபட்டுப் போவதில்லை.
இவை எக்காலமும் நிலைத்திருப்பவை

(ஆ) இலக்கியம்
சிலப்பதிகாரம், அரிச்சந்திரபுராணம்
இலட்சியவாதி
அரிச்சந்திரன், தர்மன், தசரதன்

3. i. நீதிப்பாடல்கள்

(அ) விவேக சிந்தாமணி
அறிவுடையோர் இயல்புகள்
கற்றோரைக் கண்டவுடன் புரிந்து கொண்டு நட்புடன்
மகிழ்ந்துவாடும் தன்மை கொண்டிருத்தல் அதன்மூலம்
தமக்கு வேண்டிய பயனைப் பெற்றுக்கொள்ளுதல்

(வண்டுகளின் இயல்பு)

அறிவுடையோருடன் பலநாட் பழகியிருந்தும்
அவர்தம் நற்பண்புகளைப் புரியமுடியாத அறியாமை
கொண்டிருத்தல் இதனால் எவ்வித பயனையும்பெற
முடியாதவர்களாக இருப்பார்கள்

(மண்டூகத்தின் இயல்பு)

(ஆ) வெற்றி வேற்கை

பெரியோர் இயல்புகள் / சிறியோர் இயல்புகள்
பனைமரம் பெரிய கொட்டையிலிருந்து முளைத்து உயரமாக வளர்ந்திருந்தாலும் ஒருவர் இருப்பதற்கு
நிழல் கொடுத்து உதவமுடியாது.

ஆலமரம் நுண்ணிய விதையிலிருந்து முளைத்து வளர்ந்தாலும் நாற்படைகளும் மன்னர்களும்
தங்குவதற்கு நிழல் கொடுத்து உதவுகின்றது என்ற அடிப்படையில் பிறருக்கு உதவுவதன்
அடிப்படையிலேயே பெரியவர் சிறியவர் என்ற பேதம் அமைவதாக வெற்றி வேற்கை குறிப்பிடுகிறது.

ii. சங்கப்பாடல்

(அ) குறுந்தொகை

தச்சனால் செய்யப்பட்ட சிறிய குதிரை பூட்டப்பட்ட சிறு தேரினை ஏறிச் செலுத்தி இன்பமடையாராயினும் கையால் இழுத்து இன்பமடையும் சிறுவரைப் போல – நல்ல தேர்களையும், பொய்கையையும் உடைய ஊர்த் தலைவனது நட்பை மனதில் மேலும் மேலும் பெருகச் செய்து இன்பமடைந்தோம் அதாவது தலைவன் தலைவியோடு இருக்கும்போது பெற்ற இன்பத்தை அவன் இல்லாதபோது அவன் நினைவால் தலைவி பெறமுடிந்தது. அதனால் தலைவியின் வளையல்கள் கழராமல் இறுகி அமைந்தன. இனிமேல் அவன் இங்கு வந்து செய்யக்கூடியது எதுவுமில்லை என்பதே தோழி கூற்றாகும்.


kalvi.lk

(ஆ) அரிச்சந்திர புராணம்

எதை இழந்தபோதும் சத்தியத்தை தவறமாட்டோம் என்ற அரிச்சந்திரனின் கூற்றாக – நாட்டை இழந்தோம். எமது பாலனாகிய லோகிதாசனை இழந்தோம். நாம் தேடிய செல்வங்களை இழந்தோம். இனிமேல் எமக்கு உள்ளதெனக் கருதும் வீடு பேறாகிய கதியை இழந்தாலும் வாய்ச் சொல் தவறமாட்டோம் என்றான். இவ்வாறான இலட்சிய வாழ்வுமிகுந்த கூற்றைக் கூறியதும் அறிவை இழந்து தன் வாய்ச்சொல்லை இழந்து அரிய தவமுடைய முனிவனாகிய விசுவாமித்திரன் மறைந்துவிட்டான். அரிச்சந்திரன் தான் இழந்த செல்வம் முழுவதையும் பெற்றான்.

4.

(அ) பேதைமையாளரின் இயல்புகள்

- நாண வேண்டியவற்றுக்கு நாணாமை
- பிறரிடம் அன்பு இல்லாமை
- பேணவேண்டியவற்றைப் பேணாமை
- அரிய நூல்களை ஓதுதல், உணர்தல், பிறர்க்கு உரைத்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டு அந்நெறியில் ஒழுகாதவர்கள்
- ஏழு பிறவியிலும் தான் அனுபவிக்கவேண்டிய துன்பத்தை ஒரே பிறவியில் செய்து கொள்வார்கள்
- ஒரு செயலை வகையறியாது செய்து அச்செயலை பாழாக்குவதோடு தாமும் துன்பப்படுவார்கள்
- கையில் செல்வம் கிடைத்தால் தொடர்பற்றவர் நன்மைபெற உறவினர் பசியால் வருந்துவர்.

(ஆ) பேதைமை கொண்டோரின் செயல்களின் விளைவுகள்

- கையில் பொருள் கிடைத்தால் பைத்தியக்காரன் மதுகுடித்ததற்கு சமனாகும்.
- அவர்களுடன் நட்பு கொள்வது இனிய செயல் ஏனெனில் பிரிவு துன்பத்தை தராது.
- அறிஞர் சபையினுள் பேதை புகுவது கழுவாத காலைப் படுக்கையில் வைப்பதுபோன்று சபையும் குழப்பத்திற்குள்ளாகும்.

ii. (அ) மூத்தம்மா

- மூத்தம்மாவையும் மூத்த வாப்பாவையும் தனது அன்புக்குரியவர்களாக கருதுதல்.
- தகப்பன் வந்து அழைத்தபோதும் மூத்தம்மாவுடன் இருக்க விரும்புதல்.
- மூத்தம்மா கூறும் வேலைகளை (உ+ம் : ஊறல் பக்கெற் வாங்கி வா) உடனுக்குடன் செய்தல்.
- மூத்தம்மா செய்து கொடுக்கும் உணவுகளை இரசித்து உண்ணுதல் (பால் / அரிசிமா இடித்து செய்யும் உணவு)
- மூத்தம்மாவிடம் கதை கேட்டால்தான் நித்திரை வரும் என்ற மனப்பதிவு
- பயம் வரும் போதெல்லாம் மூத்தம்மாவை அழைத்தல் (பக்குல் கத்துதல்)

(ஆ) காசீம் மனத்துயரப்படும் சந்தர்ப்பங்கள்

- மூத்தம்மா காய்ச்சலினால் படுத்திருக்கும்போது
- மூத்தம்மாவின் மரணமும் சந்தூக்கில் தூக்கிச் செல்லும் போதும்
- மூத்தம்மா தன் மகளை (காசிமின் தாய்) நினைவுபடுத்தும்போதும்
- கனவில் தாய் வந்தபோது
- மூத்தம்மாவின் பிரேதத்தை பார்த்து என் வெள்ளைக் கொக்கு தூங்குகிறது என எண்ணும்போது
- பக்குள் கத்தும்போது – தாயை காப்பாற்ற ஒளித்து வைத்திருக்கலாம் என கூறும்போது


kalvi.lk

vi. பயந்தாங் கொள்ளிப்பட்டத்தை இல்லாமல் செய்யும் சந்தர்ப்பம்

- மூத்தம்மாவை முடி சூடா இராணியாகக் கருதி தானும் ஒரு இளவரசனாக வரவேண்டும் என எண்ணும்போது
- இரவில் தனியே வெளியே செல்லப் பழகும்போது – கால்கள் மரத்துவிடாத நிலை ஏற்பட்டபோது
- மூத்தம்மாவுக்கு ஊரில் உள்ள செல்வாக்கினை காணக் கிடைத்தபோது
- மூத்தம்மாவின் நடை, உடை, பாவனை, அணிகலன் என்பவற்றை பார்த்து தானும் அதுபோல் வரவேண்டும் என நினைத்தபோது

5.

(அ) நாட்டார் பாடல்கள் பிரதேசத்திற்கு பிரதேசம் அவரவர் தொழில் முறைக்கேற்ப வேறுபடும்

- இதனை பேச்சு வழக்கு சொற்கள் மூலம் அறியலாம் ( உ + ம் காட்டுக)
- மீனவர் பாடலில் ஏலேலோ ஐலசா தாலாட்டுப் பாடலில் ஆராரோ ஆரிரரோ போன்ற ஒலிக் குறிப்புச் சொற்கள் பயன்படல்
- ஏர்ப்பாடலில் மாடுகளின் பெருக்கம், பாற்பானை பொங்கல், மழைவளம், உழவுத்தொழில் வளம், உலக மக்களின் நல்வாழ்வு ஆகியன சிறக்க சிவபெருமானிடம் வேண்டுதல்
- அருவி வெட்டுப்பாடலில் கண்ணூறு, நாவூறு வராமற் காக்க வேண்டும் என ஐயனாரை வேண்டுதல் (கிராமிய நம்பிக்கை)
- அரிவி வெட்டும் அரிவாள் செய்யும்முறை கூறப்படுதல் (தொழிற் கருவிகள்)
- மீனவர் பாடலில் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தாலும் தலைவி மீது எண்ணம் கொண்டிருத்தல்

இவ்வாறு ஏர்ப்பாடல் / மீனவர் பாடல் போன்ற தொழிற்பாடல்கள் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டிருப்பதைக் காணலாம்

(ஆ) காதற் பாடல்கள்

- காதற்பாடலில் காதலன் தனது காதலியை நீலவண்டு, மருதங்கிளி வங்கிசம், ஏலங்கிராம்பு, சீனத்துச் செப்பு, சிங்காரப் பூநிலவு என்றவாறு உருவகித்து கூறுதல்
- கடலின் ஓசை எழுப்பும்பயம் காற்றின் வேகம் ஏற்படுத்தும் தூக்கம், நிலவு காட்டும் மயக்கம் இவையாவும் காதலி வீடுபோய் சேரும் வரை தடையாக இருக்கலாகாது என காதலன் கூறுகின்றான்.
- காதல் நிறைவேறாவிட்டால் தான் இறந்துவிடுவேன் எனக்கூறல்
- ஏழைக்கு செய்த தீங்கை அல்லாஹ் எள்ளளவும் ஏற்கமாட்டான்
- கனவில் உன்னைக் கண்டேன் / காசு வேண்டுமா? / கதைத்திருக்க வரட்டுமா / தூதுவரக் காட்டட்டா / எனக்கூறி அவளது சம்மதத்தை எதிர்பார்த்திருத்தல்

6. (அ) திரையில் வருவதெல்லாம் சினிமா அல்ல

- இக்கூற்று பாரிய அர்த்தத்தை கொண்டதாகும்
- திரையில் - நாடகம், விளம்பரம், கண்டு பிடிப்புக்கள், ஆவணப்படங்கள் திரையிடப்படுகின்றன
- அஃறிணை ஜீவிகளின் வாழ்க்கை, இயற்கை அனர்த்தங்கள் திரையிடப்படுகின்றன. இவை எல்லாம் சினிமா அல்ல.
- அச்சில் பதிக்கப்பெற்று வெளியாகும் விளம்பரம், துண்டுப் பிரசுரங்கள், அறிவிப்புக்கள், கல்வெட்டு, நாளாந்த செய்தித்தாட் புதினங்கள் எப்படி இலக்கிய அந்தஸ்தை பெறுவதில்லையோ அதுபோல திரையில் வருவதெல்லாம் சினிமா அல்ல.
- சினிமா மொழியில் வருவதே சினிமா ஆகிறது. அதாவது மையக்கருத்தை தழுவியதாய் காட்சி படிமங்கள் ஒழுங்காக தருக்கப்பட்டு ஒலிக்குறிப்புடன் இணைந்த வகையில் குறியீட்டு பாங்குகளை உள்வாங்கி திரையில் வருவதே சினிமாவாகும்.


kalvi.lk

(ஆ) சினிமா மொழியின் மூன்று அம்சங்கள்

- காட்சி படிமங்கள்

சினிமா காட்சி படிமங்களாலானது ( உ + ம் - பாலுமகேந்திராவின் அழியாத கோலங்கள்) அழகான வரிசையான காட்சிபடிமங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. சினிமா தன்னை அங்கே காட்டிக்கொள்கிறது.

- ஒலி

சினிமாவில் இது பலவகைப்படும் (பேச்சு வார்த்தை, இயல்பான ஒலி, ரயில் ஓடுவது, காற்றில் இலை சரசரத்தல், பறவைகளின் இரைச்சல் (உ + ம் - பாரதிராஜாவின் கல்லுக்குள் ஈரம்) – கிராமியப்பாடலின் இசை ஒலித்தல்.

- படத்தொகுப்பு

தனித்தனியாக ஒலிப்பதிவு செய்யப்பட்ட காட்சிபடிமங்களும் ஒலிப்பதிவுக்கும் ஓர் அர்த்தமுள்ள கோவையாக அமைக்கப்படுவதாகும் இது சினிமா இலக்கணத்திற்கு அடித்தளம்.

(சிரித்த முகம் - கோழிக்கறி – அழுத முகம்)

7. அற்றைத் திங்கள்

(அ) போர்க்கால கொடுமை

- பாரி மகளிர் பறம்பு மலையில் இருந்து பிடுங்கி எறியப்பட்டமை
    - பறம்புமலை மக்களின் அன்பைவிட்டு
    - புன் செய்நிலங்களை விட்டு
    - கள் மணக்கும் குடிசைகளை விட்டு

  பிரியமற்றவர்களாகப் பிரிதல்
- வம்ப வேந்தனின் வன்முறை துரத்தல்
- உறவினர் இழப்பு (அத்தை / மாமா)
- தந்தையின் இழப்பு
- எல்லா காலங்களிலும் மண்ணின் மக்களது நிலை இதுவே
- மலைவாசிகளின் உரிமை மறுப்பு பொதுக்குரலாக ஒலிக்கிறது
- அத்தை / மாமன் திரும்பாமை
- தொடரும் தாலாட்டுப்பாடல் போரினால் ஏற்பட்ட பேரிழப்பை காட்டுகிறது
- தொட்டிலில் இரத்த வெள்ளம்
- நிலாமுகத்தில் தீப்பந்தம்

(ஆ) பாரி மீது கபிலன் கொண்ட நட்பின் ஆழம்

- அங்கவை, சங்கவையை அழைத்து செல்லல்
- பாரியின் நினைவில் மூழ்கி கள் / ஊன் உண்ட நினைவைமீட்டல்
- வடக்கிருந்து உயிர்துறத்தல்
- பறம்பு மலையின் நீரையும், பூவின் வாசனையையும் நுகரச் செய்வதன் மூலம் பாரியை நினைவிற்கொள்ளல்


kalvi.lk

எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page